# வணிகநாதம்

# VANIKA NAATHAM




3 வது மலர்

1993 - 1994

J / SKANDAVARODAYA COLLEGE

# நியூ லங்கா பாம்

**கே. கே. எஸ். வீதி,** **இணுவில்.**

*எம்மிடத்தில் பல இன பயன்தரு கன்றுகளும், பூக்கன்றுகளும் விற்பனைக்கு உண்டு.*

- ஒட்டு மாங்கன்று
- ஒட்டுத் தோடை
- ஒட்டுத் தேசி
- ஈரப்பலா
- POTLIME
- கமுகு
- தென்னம்பிள்ளை
- 1 Kg கொய்யா
- மலை வேம்பு
- ஒரு கிலோ தேசி ( 6 மாதத்தில் பயன்தரக்கூடியது )
- விளாத்தி தோடை
- லாவுழு
- பலா
- நெல்லி

★ இல்லத்தை அலங்கரிக்கும் ★

- POTPLANTS
- கலா குறோட்டன்ஸ்
- கேன்பாம், குயின்பாம்
- றோஸ்
- கலர் செவ்வரத்தை ( ஒட்டு )
- INDO PLANTS
- டான் பாம்
- லாச் பாம்
- முசண் டாஸ்
- ஐந்தூரியம்

போன்ற பல இனக்கன்றுகளும் விற்பனைக்கு உண்டு.

உரிமையாளர்:-

S. K துரைசிங்கம் P J S K. செல்வராசா



**நாதத்தின் சுடர் தொடர்ந்து பிரகாசிக்க எமது நல்லாசிகள்!**

# விவேகானந்தா கல்வி நிலையம்

**கந்தையா உபாத்தியாயர் வீதி, கந்தரோடை,**

**சுன்னாகம்.**

**A/L கலை வர்த்தக வகுப்புக்கள்**

**நடைபெறுகின்றன**

**96 ம் ஆண்டுக்கான புதிய வகுப்புக்கள்**

**ஆரம்பமாகின்றன**

| | |
|---|---|
| பொருளியல்:- | திரு. உதயன் |
| அளவையியல்:- | திரு. சர்மா |
| நாடகமும், அரங்கியலும்:- | திரு. சத்தியா |
| புவியியல்:- | திரு. நிகே |


# வணிக நாதம்
# VANIKA NAATHAM
## 1993 - 1994

## நாதம் - 3

**கலை வர்த்தக மாணவர் மன்றம்**

**யா / ஸ்கந்தவரோதயக் கல்லூரி**
**கந்தரோடை — சுன்னாகம்.**

# கல்லூரிக் கீதம்



போற்றிசெய் வோமெங்கள் கல்லூரித் தாயைப்
பொலிவுடன் மாணவர் கூடி ..... (போற்றி)

ஸ்கந்தவ ரோதய எங்கள் கல்லூரி
சந்ததமும் புகழ் கொண்டே
இந்த வுலகினில் நன்கு வளர்ந்திட
ஸ்கந்தா அருள்புரி நன்றே ..... (போற்றி)


ஆங்கில ஞானமும் அருந்தமிழ் ஆரியம்
அவைதரு ஞானமும் நன்றே
ஓங்குவிஞ் ஞானமும் உயர்தரு கலைகளும்
உண்மையில் வளர்தரு மிங்கே (போற்றி)

பிறவிகள் தோறுமே தொடருநற் கல்விப்
பேற்றினை ஈந்தனை அன்னாய்
உறவென்றும் நீயே உண்மையொ டுனக்காய்
உழைத்திடு வோமென்றும் நாமே ..... (போற்றி)

எந்தை யெனத்தகு கந்தைய வள்ளலின்
சிந்தையிலெழுந்த கல்லூரி
செந்தண்மை மருத்துவன் சுப்பிர மணியனின்
சேவையில் உயர்ந்த கல்லூரி!

சேவையில் உயர்ந்த கல்லூரி!
சேவையில் உயர்ந்த கல்லூரி!
சேவையில் உயர்ந்த கல்லூரி!

வாழிய வாழிய எங்கள் கல்லூரி
வளமலிந் தோங்கியே என்றும்
வாழ்க! வாழ்க! வாழ்க!
வளரிள மதியெனவே
வாழிய எங்கள் கல்லூரி.



எமது கல்லூரியின் மூத்த அதிபர்

அமரர்

# ஒறேற்றர் சி. சுப்பிரமணியம்

அவர்களின் திருவடிக்கு

**இம் மலரை காணிக்கை செய்கிறோம்**

# வணிக நாதத்தின் வாசலில்......

நூற்றாண்டு காணும் கல்லூரித் தாயை போற்றி கலை வர்த்தக மாண வர் மன்றத்தின் 3 வது மலரான வணிக நாதத்தின் வாயிலில் நின்று அனைவரையும் வரவேற்கின்றோம். கல்விப் பணிக்காய் ஸ்கந்தவரோதய வளாகத்தை நிறுவிய அறப்பணியாளர்களை அடிபோற்றி வணங்குகிறோம். ஆயிரம், ஆயிரம் அறிஞர்களை உருவாக்கிய எம் கல்லூரியின் முன்னாள் ஆசான்களின் திருவடி தொழுகின்றோம். என்றும் எமை வளர்க்க அறிவுரை, விரிவுரை ஆறுதல் தந்திடும் நல்லாசான்களை இமைப் பொழுதும் மறவாது நெஞ்சில் இருத்தி துதிக்கின்றோம்.

எமது கல்லூரியின் பல்துறை வளர்ச்சியில் கலை வர்த்தக மாணவ மன்றத்தின் சாதனைகளும் பல. அவற்றுள் ஒன்று வருடாவருடம் அறிவியல் சிந்தனைகளை தாங்கி வெளிவரும் வணிக நாதம் எனும் இச் சஞ்சிகை ஆகும். சென்றகாலத்து இரு மலர்களையும் கல்வியில் உயர்ந்தோர் வாழ்த்தினீர். எமது மன்றத்தை போற்றினீர் இம் முறையும் எமது முயற்சியால் வெளிவரும் இம் மலரின் நிறைகளை போற்றுங்கள். குறைகளை சுட்டிக் காட்டுங்கள். வளரும் பிள்ளைகளாகிய நாம் உங்கள் வாழ்த்திலும் வழிகாட்டலிலும் வாழ்கிறோம். மிக இக்கட்டான இன்னல் நிறைந்த சூழ்நிலையில் இம் மலரை வெளியிட முன்வந்தோம். எமக்கு வழிகாட்டியாக இக்கல்லூரி தலைமகன் திரு. ஆ. கமலதாசன் (அதிபர்) ஊக்கமளித்தார். பொறுப்பாசிரியர்கள் திருமதி. வ. நடராசா, திரு. ஆறு. திருமுருகன் அயாரா ஊக்கமும் ஆலோசனைகளும் அள்ளி வழங்கினர். மற்றும் ஏனைய பொறுப்பாசிரியர்களும் பல வழிகளில் ஊக்கமளித்தனர். இவர்களின் உயர்ந்த பணிக்கு எமது உளமார்ந்த நன்றிகள்.

வணிக நாதமலர் வாசனை வீச ஆசிச் செய்தி வழங்கிய ஆன்றோருக்கும் கட்டுரைகளை வழங்கிய கல்வியில் பெரிய சான்றோருக்கும், நாளைய சிற்பியாய் மலரப் போகின்ற ஆற்றல் மிகு கட்டுரைகளை வழங்கிய மாணவ மணிகளுக்கும் எமது நன்றி அறிதலை நவில்கின்றோம். மன்றத்தின் உயர்வுக்கு தூண்களாய் விளங்கும் பழைய மாணவர் சங்கத்திற்கும் அன்பளிப்புச் செய்த அறவோருக்கும் விளம்பரங்களைத் தந்துதவிய வர்த்தக வித்தர்களுக்கும் எமது நன்றி அறிதலை தெரிவிக்கிறோம். இவ்வாண்டு இரண்டு வருட நிர்வாக அங்கத்தவர்கள் நிறைந்த மனத்தோடு கூடி இம்மலர் பொலிவுற ஓயாத பணி செய்தனர். ஒவ்வொருவருக்கும் எமது நன்றிகள். மலரை அலங்கரித்த அச்சுவாகனம் ஏற்றிய கொக்குவில் பராசக்தி அச்சகத்தாருக்கும் பதிவு நுட்பம் காட்டிய (யூனியன் கல்லூரி) பாலா மாஸ்ராருக்கும் எமது நன்றிகள்.

வணிக நாதத்தின் வாழ்வுக்கு வள மூட்டுகின்ற அத்தனை பேருக்கும் என்றும் எம் இயத்தால் நன்றி கூறி ஆண்டு தோறும் எம் மன்ற சிறாரர்களின் ஆற்றலை காட்ட அனைவரும் துணை நிற்பீர்கள் என்ற நம்பிக்கையோடு கடவுளை பிரார்த்தித்து அமைகிறோம்.

1993 இதழாசிரியர்கள்.
செல்வி. யோ. கௌரி
செல்வி. ந. திருவருட்செல்வி

1994 இதழாசிரியர்கள்.
செல்வன். யோ. பிரபானந்தன்
செல்வி. ந. ஜெசிந்தா


# அதிபர் ஆசியுரை

கல்வியிற் சிறந்த யாழ் நாட்டின் கல்விக் கலங்கரை விளக்கங்களில் ஒன்று ஸ்கந்தவரோதயக் கல்லூரி. ஆற்றல் மிக்க பல அறிஞர்களை நூறு ஆண்டுகளாக இவ் அவனிக்கு தந்திருக்கும் எம் கல்லூரியின் சிறப்புக்கள் பல. கல்விசார் விடயங்களில் மாணவரது அறிவியல் விவேகங்களை ஆளுமைகளை நிதானப் படுத்துவது துறை சார்ந்த மன்றங்களின் செயல் வளர்ச்சியே. அவ் வகையில் எமது கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர்களின் அங்கத்துவத்தில் இயங்கும் கலை வர்த்தக மாணவர் மன்றம் வருடா வருடம் சாதனைகள் பல செய்துகல்லூரிக்கு வளமூட்டி வருவது கண்டு பெருமையடைகின்றேன். கல்வியின் வளர்ச்சி என்பது வெறும் பரீட்சை பெறுபேறுடன் முடிவடைவதில்லை. மாணவரிடத்தில் பல்துறை ஆற்றலிலும் காணும் விருத்தியே முழுமையான கல்வி என்பதை பல கல்விமான்களும் கல்வி ஆய்வாளர்களும் கருத்து வெளியிட்டுள்ளனர். எனவே எமது கல்லூரி கலை, வர்த்தக மாணவர் மன்றத்தின் வருடாந்த வெளியீடான ''வணிக நாதம்'' மலர் இவ்வாண்டு மலர்வது கண்டு மனம் மகிழ்கிறேன். இவ் மன்றத்தின் ஆக்க முயற்சிகள் அத்தனையையும் பாராட்டுகிறேன். இம் மன்றத்தின் நல்முயற்சிக்கு ஒத்துழைத்த கல்விச் சமுகத்தையும் கல்லூரியின் மேல் அக்கறை உடைய பெற்றோர், பழைய மாணவர், நலன் விரும்பிகளுக்கும் நன்றியும் வாழ்த்தும் தெரிவித்து இம் மலரை சிறப்பாக வெளியிடும் கலை வர்த்தக மன்றத்தின் வளர்ச்சிக்கு நல்லாசி கூறி அமைகிறேன்.

கல்விப் பணி கடவுள் பணி.

**திரு. ஆ. கமலநாதன் (அதிபர்)**
*( B. A. Dip. in. Ed, S. L. P. S Gr I)*

# எங்கள் அதிபர்



திரு. ஆ. கமலநாதன் B. A. (Cey.)
Dip. in Ed. S. L. P. S Gr. I

# கல்விப் பணிப்பாளர் அவர்களின் ஆசியுரை



கலை வர்த்தக மாணவர் மன்றங்கள் பல இவ்வாண்டு சஞ்சிகைகளை வெளியிடுகின்றன. சஞ்சிகை வெளியிடுவதில் குறிப்பாக உயர்தர மாணவர் மத்தியில் ஒரு புத்தூக்கமும், மறுமலர்ச்சியும் காணப்படுகிறது. இது எங்கள் திணைக்களத்திற்கு ஆனந்தத்தையே கொடுக்கிறது.

ஸ்கந்தவரோதய கல்லூரி கலை வர்த்தக மாணவர் மன்றம் வெளியிடும் வணிக நாதம் ''மங்கலமாக மலர ஜெய மங்கலமாக ஒளிர'' மனப்பூர்வமாக வாழ்த்துவதில் பெரு மகிழ்ச்சி அடைகிறோம்.

ஸ்கந்தவரோதய கல்லூரி தனது நூற்றாண்டு விழாவைக் காணும் இவ்வாண்டில் வணிக நாதம் வெளிவருவது கல்லூரியின் நிறைவிற்கு பொலிவைக் கொடுக்கிறது. இக் கல்லூரியின் வளர்ச்சி சிறிது காலம்தடங்கி மீண்டும் சுறுசுறுப்பாக இயங்குகிறது. இங்குள்ள ஆசிரியர்கள், மாணவர்கள், அதிபர் ஆகியோரின் ஊக்கத்தையே இது காட்டுகிறது. விடாமுயற்சியும், தன்நம்பிக்கையும் கொண்டு மாணவர் கல்வியில் பேருக்கம் கொண்ட ஆசிரியர்கள் இக் கல்லூரியில் இன்றும் கற்பிக்கின்றார்கள். இவர்கள் முயற்சியால் இக்கல்லூரி வளர வாழ்த்துகிறேன். உயர்தர கலை வர்த்தக மன்ற மாணவரின் ஆக்கபூர்வமான கல்விகள் முயற்சிகள் பல ஆரம்பிக்கப்பட்டு மாணவருக்கும் சமூகத்திற்கும் நன்மை பயக்க வேண்டுகிறேன்.

**க. கந்தசாமி**
கல்விப்பணிப்பாளர்,
யாழ்ப்பாணம் வலயம் II



# பிரதிக் கல்விப் பணிப்பாளர் அவர்களின்

# ஆசிச்செய்தி

ஸ்கந்தவரோதயக் கல்லூரிஉயர்தர வர்த்தக மாணவர்மன்றத்தினரால் வெளியிடப்படும் மூன்றாவது வணிகநாதத்திற்கு ஆசியுரை வழங்கும்படி என்னைக் கேட்டுக் கொண்ட மாணவர் மன்றத்தினரின் பெருந்தன்மையை நான் நன்கு மதிக்கின்றேன். தற்கால கஸ்டமான சூழ்நிலையில் உயர் வகுப்பு மாணவர்களின் செயற்திறமைமிக்க ஆய்வுக் கட்டுரைகளைத் தாங்கி வெளியிடப்படும் இது போன்ற சஞ்சிகைகளை நாம் வரவேற்பதில் பெருமகிழ்ச்சியடைய வேண்டும். 'வணிகநாதம் தன்னளவில் மூன்றாவது வயதை அடைந்தாலும் அப்பாடசாலை மாணவர்க்கு மாத்திரமல்ல சமுதாயத்தில் காணப்படும் ஏனைய பாடசாலை மாணவர்க்கும் இது போன்ற சஞ்சிகைகள் பயன்தரக்கூடியவை. சமுதாய சீராக்கத்திற்கு பாடசாலைகள் ஆற்றி வரும் பங்கை இதுபோன்ற வெளியீடுகள் மேலும் ஊக்குவிக்கும் என்பதில் ஐயம் இல்லை. இன்றைய உயர் வகுப்பு மாணவர்கள் தற்போது கீழ்வகுப்பு மாணவர்களின் முன்னேற்றப் படிகள். அவர்கள் இவ்வாறு தங்கள் ஆக்கத்திறன்களை நூல்வடிவில் வெளியிடும் போது ஏனைய மாணவர்களுக்கும் அவர்கள் வழிகாட்டிகளாகத் திகழ்கிறார்கள். இது வரவேற்கத்தக்கது. சமகாலப் பாடசாலைகளில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி சிறப்புமிக்க சகல வளங்களையும் உள்ளடக்கிய ஒரு நிறுவனமாக இருப்பதனால் அதன் பாரம்பரியங்களையும் சேவைகளையும் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு தற்போதய மாணவர்களைச் சார்ந்ததாகும். எனவே அவர்களின் இந்த வெளியீட்டை மேலும் சிறப்பாக வருகின்ற ஆண்டுகளில் செயல்ப்படுத்த என் மனமார்ந்த ஆசிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

வளர்க வணிகநாதம்

வாழ்க ஸ்கந்தவரோதயக் கல்லூரி

சு. இரத்தினராசா
பிரதிக்கல்விப் பணிப்பாளர்,
உடுவில்.



# எமது கல்லூரியின் முன்னாள் அதிபர் அவர்களின்

# ஆசிச்செய்தி

ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் மூன்றாவது ''வணிக நாதம்'' சஞ்சிகைக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மட்டற்றமகிழ்ச்சி அடைகிறேன். கல்வி உலகுக்கு முன்னைய சஞ்சிகைகளும் வழங்கிய ஆக்கபூர்வமான கருத்துக்களை மூன்றாவது சஞ்சிகையும் கொண்டிருக்குமென்பதில் சந்தேகமில்லை.

கலை வணிகத்துறையில் இன்று மாணவர் தொகை அதிகரித்து வருவதை நாம் அறிவோம் இவர்களின் ஆற்றல்களை மேம்படுத்தவும் அறிவை விருத்தி செய்யவும் சஞ்சிகை வெளியிடும் முயற்சி பேருதவியாக அமைந்துள்ளது. இச்சஞ்சிகையில் வெளிவரும் கட்டுரைகள் கலை வணிகத்துறை சார்ந்த மாணவருக்கு பெருவிருந்தாகவும் ஊக்குவிப்பாகவும் இருக்கும்

கடந்த வருடங்களில் கலை வர்த்தக மாணவர் மன்ற செயற்குழுவில் அங்கம் வகித்தோர் கல்லூரி அன்னையின் பால் மிகுந்த பற்றும் பாசமும் உடையோராகத் திகழ்ந்து வருகின்றனர். இம் முயற்சி தொடருவதால் ஒரு கல்லூரிப் பற்றுள்ள சந்ததி உருவாகிறது.

கல்லூரி அன்னையின் நூற்றாண்டு வருடத்திலே வணிக நாதம்மூலம் அன்னையைப் பொலிவுறச் செய்யும் அத்தனை உள்ளங்களையும் மனதாரப் பாராட்டுகிறேன். வணிக நாதம் ஆண்டுதோறும் வெளிவந்து கலை வணிகக் கல்வித் துறையை வளம்படுத்தி இந்த உலகினில் ஸ்கந்தா அன்னை நன்கு வளர்ந்திட எல்லாம் வல்ல ஸ்கந்தப்பெருமானை வேண்டி அமைகிறேன்.

வாழ்க வணிக நாதம்! வளர்க ஸ்கந்தா!

திரு. ப. விக்கினேஸ்வரன்
கோட்டக் கல்விப் பணிப்பாளர்

கோட்டக்கல்வி அலுவலகம்,
சங்கானை.



## மன்றப் பொறுப்பாசிரியரின்
# ஆசிச்செய்தி (1993)


எமது கல்லூரி கலை வர்த்தகத்துறை மாணவர்களின் அங்கத்துவமாகிய கலை வர்த்தக மன்றம் பல நல்ல பணிகளை வருடா வருடம் ஆற்றி வருவது கண்டு ஆசிரியர்களாகியநாம் பெருமையடைகிறோம். புகழ் பூத்த பாடசாலையாகிய எமது கல்லூரியில் கற்ற மாணவர்கள் இன்று கல்வி உலகை சிறப்பிக்கும் போது ஆசிரியர்களாகிய நாம் உவகை கொண்டு பெருமிதம் கொள்கிறோம். அத்தகைய உயர் நிலைக்கு அவர்களை அழைத்து செல்வது அவர்கள் மாணவர்களாக இருந்த காலத்தில் கல்லூரியின் மன்றங்களில் எடுத்த பயிற்சிகளே. எனவே தான் கல்லூரியின் மன்றங்கள் மாணவரின் அறிவை ஊறவைப்பது என்பதில் ஐயமில்லை

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு
கற்றனைத் தூறும் அறிவு. என்ற வள்ளுவர் வாக்குக்கமைய இம்மன்ற வளர்ச்சி கல்வி வளர்ச்சியே.

எமது கல்லூரியின் கலை வர்த்தக மாணவ மன்றத்தின் வணிக நாதம் மலர் சிறக்க உதவிய அதிபர் ஆசிரியர்கள் கல்விமான்கள் வர்த்தகர்கள் அனைவருக்கும் எனது நன்றிகள் உரித்தாகுக. இம்மலர் வருடா வருடம் உயர் வளர்ச்சியோடு எமது கல்லூரிக்கு பெருமை சேர்க்க வாழ்த்தி கலைவாணியை கரம் கூப்பி எம் மாணவர்க்கு ஆசி கூறி நிறைவு செய்கிறேன்.

**திருமதி. வ. நடராசா B. A (Cey) Dip. in Ed**

# மன்றப் பொறுப்பாசிரியரின்
# ஆசிச்செய்தி (1994)




நாளைய சமுகத்தின் பிரதிநிதிகளாய் நாட்டை வளப் படுத்தப் போகின்ற கல்விச் சிறார்களின் முயற்சி கண்டு பெருமையடைகிறேன். வசதிகளும் வாழ்வும் குளம்பியிருக் கும் வேளை தன் நம்பிக்கையால் தலை நிமிர்ந்து வாழத் தொடங்கியிருக்கும் தமிழ் இனத்தின் கல்வி வளம் என்றும் கட்டிக் காப்பாற்ற வேண்டிய முக்கியமானதொன்று என் றால் மிகையாகாது, அக்கல்வி வளத்தினை அகல ஆராய்ந்து அறிந்து கற்பதற்கு வளமுட்டுவன கல்வி சார் மன்றங்களே. எமது கல்லூரி கலை வர்த்தக மன்ற மாணவ மணிகளின் அயராத முயற்சியில் பல அறிவியல் பணிகள் கல்லூரியில் தொடர்கின்றன.

இம்மன்ற முயற்சிகளை ஆரம்பித்துவைத்த முன்னைய அதிபர் திரு. ப. விக்கினேஸ்வரன் (பிரதிக்கல்விப்பணிப்பாளர்) முன்னைய பொறுப்பாசிரியராக இருந்து மலர் வெளியீட்டை ஆரம்பித்துவைத்த திரு. ச. சிவநேஸ்வரன் (அதிபர் இந்து மகா வித்தியாலயம் சண்டிலிப்பாய்.) ஆகியோர்க்கு நன்றி பாராட் டுவதோடு, இன்றைய மன்றவளர்ச்சிக்கு உறுதுணையாக உணர்வோடு பணியாற்றும் அதிபர், ஆசிரியர்கள் அனை வருக்கும் நன்றி கூறுகிறேன். இம்மலர் அரங்கேற உழைத்த மாணவர்களின் ஆற்றலை வாழ்த்தி அவர்கள் பணிக்கு நற்றுணையாக நின்ற நல்லவர்கள் அனைவருக்கும் என் நன்றி தனைக் கூறி


சொல்விற் பனமும் அவதானமுங் கல்வி
சொல்ல வல்ல நல் வித்தை யாவும் தருகின்ற
அன்னையை பிராத்தித்து அவள் ஆசி எல்லோர்க்
கும் கிடைக்கவேண்டி அமைகின்றேன்.

**ஆறு. திருமுருகன் B. A.**

# கலை வர்த்தக மாணவர் மன்றம் - 1993



செல்வன் கு. நிமலகுமாரன்
(தலைவர்)




செல்வன். வீ. தயாபரன்
(செயலாளர்)



செல்வன். கு. பாலேந்திரன்
(பொருளாளர்)

# கலை வர்த்தக மாணவர் மன்றச் செயற்குழு - 1993


| | |
|---|---|
| காப்பாளர்: | திரு ஆ. கமலநாதன் (அதிபர்) |
| பொறுப்பாசிரியர்: | திருமதி வ. நடராஜா |
| உப பொறுப்பாசிரியர்கள்: | திருமதி. சா. நாகராசா<br>திரு. ஆறு. திருமுருகன்<br>திரு க. சத்தியபாலன் |
| தலைவர்: | செல்வன். கு. நிமலகுமாரன் |
| உப தலைவர்: | செல்வன் வீ. தர்மசீலன் |
| செயலாளர்: | செல்வன். வீ தயாபரன் |
| உப செயலாளர்: | செல்வி. து. மாலினி |
| பொருளாளர்: | செல்வன், கு. பாலேந்திரன் |
| இதழாசிரியர்கள் | செல்வி யோ. கௌரி<br>செல்வி ந திருவருட்செல்வி |
| கணக்காய்வாளர்: | செல்வன். கு. தவானந்தன் |
| விளம்பர பொறுப்பாளர்கள்: | செல்வன். பு. உதயகுமார்<br>செல்வன். ச. ஜெயரஞ்சித்<br>செல்வன். கு. சதீஸ்வரன் |
| உதவி நிர்வாக உறுப்பினர்கள்: | செல்வி. ச. துர்க்காதேவி<br>செல்வி த. ராஜினி<br>செல்வி ப. வதனி<br>செல்வி அ. றஜனி<br>செல்வி கா. கவிதா<br>செல்வன். த. பிரகாஸ்<br>செல்வி. து. மாலினி<br>செல்வி. க. சுபாசினி |




**இருப்பவர்கள் (இ. வ):-** திரு. A. திருமுருகன் (ஆசிரியர்), திரு. K. சத்தியபாலன் (ஆசிரியர்), V, தாயபரன். (செயலாளர்), திரு. A. கமலநாதன் (அதிபர்), செல்வன். K. நிமலகுமாரன்(தலைவர்) திருமதி. V. நடராசா (பொறுப்பாசிரியர்), திருமதி. S. நாகராசா (ஆசிரியை)

**நிற்பவர்கள் (இ. வ):-** செல்வி. S. துர்க்காதேவி, செல்வி. A. ரஜனி, செல்வி. K. கவிதா, செல்வன். V. தர்மசீலன், செல்வன். K. பாலேந்திரன் (பொருளாளர்), செல்வன். T. பிரகாஸ், செல்வி. Y. கௌரி, செல்வி. T. ராஜினி.

# கலை வர்த்தக மாணவர் மன்றம் - 1994



செல்வன். வீ. தர்மசீலன்
(தலைவர்)



செல்வன். த. பிறேம்குமார்
(செயலாளர்)



செல்வன். ஏ. அனுசாந்தன்
(பொருளாளர்)

# கலை வர்த்தக மாணவர் மன்றச் செயற்குழு - 1994

| | |
|---|---|
| காப்பாளர்: | திரு ஆ. கமலநாதன் (அதிபர்) |
| பொறுப்பாசிரியர்: | திரு. ஆறு. திருமுருகன் |
| உப பொறுப்பாசிரியர்கள்: | திருமதி வ. நடராஜா<br>திருமதி. சா. நாகராசா<br>செல்வி க மதிவதனி |
| தலைவர்: | செல்வன். வீ. தர்மசீலன் |
| உப தலைவர்: | செல்வி தி. விஜிதா |
| செயலாளர்: | செல்வன். த. பிறேம்குமார் |
| உப செயலாளர்: | செல்வி. து. அனிதா |
| பொருளாளர்: | செல்வன் ஏ. அனுசாந்தன் |
| இதழாசிரியர்கள் | செல்வன் யோ. பிரபாநந்தன்<br>செல்வி ந ஜெசிந்தா |
| கணக்காய்வாளர்: | செல்வி ப. பத்மலோசனி |
| விளம்பர பொறுப்பாளர்கள்: | செல்வன். க. பாலவிசாகன்<br>செல்வன். இ கந்தசாமி<br>செல்வன். து ஈசன்<br>செல்வன். பா. சண்முகதாஸ்<br>சல்வன், க. ஜெகதீஸ்வரன் |
| உதவி நிர்வாக உறுப்பினர்கள்: | செல்வன். ந. தயாபரன்<br>செல்வன். பொ. சந்திரவேல்<br>செல்வி து. தாரணி<br>செல்வி ஆ. கீதாஞ்சலி |



**இருப்பவர்கள் (இ· வ):-** செல்வி. K. மதிவதனி (ஆசிரியை), திருமதி. V, நடராஜா (ஆசிரியை), செல்வன். T.பிறேம்குமார் (செயலாளர்), திரு. A. கமலநாதன் (அதிபர்), செல்வன். V. தர்மசீலன் (தலைவர்), திருமதி. S. நாகராஜா (ஆசிரியை), திரு. A. திருமுருகன் (பொறுப்பாசிரியர்).

**நிற்பவர்கள் 1ம் வரிசை (இ. வ):-** செல்வி. P. பத்மலோசினி செல்வன். P. சந்திரவேல், செல்வன். Y. பிரபானந்தன், செல்வன். M. தயாபரன், செல்வன். E அனுசாந்தன்) (பொருளாளர்), செல்வி A. ரஜனி, செல்வி. A கீதாரஞ்சினி.

**நிற்பவர்கள் 2ம் வரிசை (இ. வ):-** செல்வி, T. தாரனி, செல்வி. T விஜிதா, செல்வி. T. அனிதா, செல்வி. N. ஜெசிந்தா.

# பங்கு வழங்கல் தொடர்பாக இலங்கை கம்பனிச் சட்டத்தின் ஏற்பாடுகள்

வே. ஈஸ்வரன் B. Com (Hons)
விரிவுரையாளர்
வணிக முகாமைத்துவத்துறை
யாழ் - பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்.

வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனிகள் பங்குகளை வழங்கும் போது 1982ம் ஆண்டின் 17ம் இலக்க இலங்கை கம்பனிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்குட்பட்ட வகையில் பங்கு வழங்கல்களை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். ஒரு கம்பனி பங்குகளை வழங்கும்போது சமவிலையிலோ (at par) மிகைவிலையிலோ (at a premium), கழிவுடனோ (at a discount) வழங்கலாம். ரூபா 10/- பெயரளவு பெறுமதியுள்ள (nominal value) பங்கொன்றை ரூபா 10/-க்கு வழங்கின் சமவிலைக்கு வழங்கல் என்றும் ரூபா 10/ க்கு கூடுதலாக வழங்கின் மிகை விலைக்கு or வட்டத்துக்கு வழங்கல் என்றும், ரூபா 10/- க்கு குறைவாக வழங்கின் கழிவுக்கு வழங்கல் என்றும் கொள்ளப்படும்.

கம்பனிச் சட்டத்திற்கு இணங்க பங்குகள் மிகை விலையில் or வட்டத்துடன் வழங்கப்படும் வேளையில் மிகை விலைக்கு என்று ஒரு தனியான கணக்கு திறக்கப்படல் வேண்டும். இது ஐந்தொகையில் தனியான தலைப்பாக காட்டப்படுதல் வேண்டும், என்பதுடன் இத்தகைய பங்கு மிகைவிலையினை இலங்கை கம்பனிச் சட்டத்தின் 58வது பிரிவுக்கு (section) இணங்க பின்வரும் தேவைகளுக்கு மட்டும் பயன்படுத்திக் கொள்ளலாம் என வரையறை விதிக்கின்றது.

1) நீதிமன்றத்தின் அனுமதியுடன் மூலதனக் குறைப்பினை மேற்கொள்வதற்கு
2) கம்பனியின் ஆரம்பச் செலவினைப் பதிவழிப்பதற்கு
3) பங்குகள், தொகுதிக்கடன்கள் வழங்கல் தொடர்பான செலவுகள் or தரகுகள் or கழிவுகள் என்பவற்றைப் பதிவழிப்பதற்கு.
4) கம்பனியில் ஏற்கனவேயுள்ள பங்குதாரர்களுக்கு முழுமையாக வழங்கப்பட்ட மிகையூதிய or உபகாரப் பங்குகளை வழங்குவதற்கு.
5) மீட்கக்கூடிய முன்னுரிமைப் பங்குகள் or தொகுதிக்கடன்கள் குறித்த காலப் பகுதியில் வட்டத்துடன் மீட்கும் வேளையில் அத்தகைய மீட்பு வட்டத்தினை பதிவழிப்பதற்கு

இலங்கை கம்பனிச்சட்டத்தின்படி மீட்கக்கூடிய முன்னுரிமைப் பங்குகள் குறித்த காலப்பகுதியில் வட்டத்துடன் மீட்கும் போது மீட்பு வட்டமானது பங்கு வட்டத்துக்கு எதிராக பதிவழிக்கப்படுகின்றது. ஆனால் இங்கிலாந்து கம்பனிச் சட்டத்தின்படி மீட்பு வட்டமானது பங்கு வட்டத்துக்கு எதிராக பதிவழிக்க வேண்டுமாயின் பின்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்தல் வேண்டும் என வரையறை செய்கின்றது.

I) முன்னுரிமைப் பங்குகள் மீட்கப்படும் போது மீட்பு நோக்கத்திற்காக புதிய பங்குகள் வழங்கப்படல் வேண்டும்:

II) மீட்கும் முன்னுரிமைப் பங்குகள் ஆரம்ப வழங்கலின் போது (original issue) வட்டத்துடன் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

இத்தகைய இரு நிபந்தனைகளையும் ஒரே நேரத்தில் பூர்த்தி செய்தல் மட்டுமே முன்னுரிமை பங்குகளின் மீட்பு வட்ட மானது பங்கு வட்டத்திற்கு எதிராக பதி வழிக்க முடியும். இவற்றினை விட பின் வரும் இரு தொகைகளில் எது குறைவாக வுள்ளதோ அத்தொகையினையே பங்கு வட்டத்திற்கு எதிராக பதிவழிக்க முடியும் என மேலும் வரையறை செய்கின்றது.

a) பங்கு வட்ட மீதியுடன், மீட்பு நோக் கத்திற்காக புதிய பங்குகள் வட்டத் துடன் வழங்கப்பட்டிருப்பின் அத் தகைய வட்டத்தையும் சேர்த்த தற் போதைய மீதி (current) balance)

b) மீட்கப்படும் பங்கின் ஆரம்ப வழங்க லின் போது பெறப்பட்ட வட்டம்.

உதாரணமாக:-

கண்ணன் வரையறுத்த கம்பனியானது ஒவ்வொன்றும் ரூபா 1/- வான 40 0000 9% மீட்கக்கூடிய முன்னுரிமைப் பங்குகளை வழங்கியது. இவை ஆரம்ப வழங்கலின் போது பங்கொன்று 40 சத வட்டத்துடன் வழங்கப்பட்டவையாகும். தற்போது கம் பனியானது 1 00 000 பங்குகளை 60 சத வட்டத்துடன் மீட்கத் தீர்மானிக்கின்றது. மீட்பு நோக்கத்திற்காக ஒவ்வொன்றும் ரூபா 1/- வான 80 000 சாதாரண பங்குகளை 20 சத வட்டத்துடன் வழங்குகின்றது. புதிய பங்குகள் வழங்க முன்னர் பங்கு வட்டக் கணக்கு மீதியானது ரூபா 1 21 000/- வாகும் இந்தச் சந்தர்ப்பத்தில் இங்கிலாந்து கம்பனிச்சட்டத்தின் பிரகாரம் பங்கு வட் டத்திற்கு எதிராக பதிவழிக்கப்படும் மீட்பு வட்டத்தொகை வருமாறு:-

| பங்கு வட்டக் கணக்கு | ரூபா |
|---|---|
| புதிய பங்கு வழங்க முன்னர் உள்ள மீதி | 1 21 000 |
| (+) புதிய பங்கு வழங்கலின் போது பெறப்பட்ட வட்டம் | 16 000 |
| தற்போதைய மீதி | 1 37 000 a |
| மீட்கப்படும் பங்கின் ஆரம்ப வழங்கலின் போது பெறப்பட்ட வட்டம் | 40 000 b |
| செலுத்தப்படவேண்டிய மீட்பு வட்டம் | 60 000 |
| பங்கு வட்டத்துக்கு எதிராக பதிவழிக்கப்படும் தொகை [a or b ஆகியவற்றில் எது குறைவோ அது] | 40 000 |
| மிகுதி மீட்பு வட்டம் இலாப நட்டக் கணக்கிற்கு எதிராகப் பதிவழிக்கப்படுகின்றது | 20 000 |

இலங்கை கம்பனிச் சட்டமான 1982ம் ஆண்டின் 17ம் இலக்க 59வது பிரிவானது கம்பனி ஏற்கனவே வழங்கிய வகைப்பங்கு களை கழிவுடன் வழங்குவதாயின் பின் வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும் எனக் கூறுகின்றது.

1) கம்பனியின் பொதுக் கூட்டத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அதி காரம் அளிக்கப்பட்டு நீதி மன்றத்தில் அங்கீசரித்தல் வேண்டும்

2) தீர்மானத்தில் ஆகக்கூடிய கழிவு வீதம் குறிப்பிடப்படல் வேண்டும்

3) கம்பனி தொழிலை ஆரம்பிக்க உரிமை யான திகதியிலிருந்து ஆகக்குறைந்தது ஒரு வருடமாவது முடிந்திருத்தல் வேண்டும்.

4) நீதிமன்றத்தினால் வழங்குகை அங்கீகரிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாதத்துக்குள் அல்லது நீதிமன்றத்தின் அனுமதிக்ககூடிய அத்தகைய நீடிக்கப்பட்ட காலத்தினுள் செய்யப்படுதல் வேண்டும்.

ஒரு கம்பனியானது பங்குகளை வழங்கும் போது விண்ணப்பத்தின்மீது முழுமையாகப் பணம் செலுத்த தக்கவாறோ (Payable in full on application) அன்றேல் ஒரு ஒழுங்கான தவணைகள் அடிப்படையில் பணம் செலுத்தத் தக்கவாறோ (Payable in a series of instalments) வழங்கலாம். தவணைகள் அடிப்படையில் பணம் பெறப்படும்போது விண்ணப்பம் ஒதுக்கல், 1ம் அழைப்பு, 2ம் அழைப்பு என்றவாறு வசூலிக்க முடியும் கம்பனிச் சட்டத்தின் 49ம் பிரிவின் 3ம் பந்தியின் படி விண்ணப்ப பணம் பெறப்படும்போது பங்கின் பெயரளவு பெறுமதியில் 5%க்கு குறையாது இருத்தல் வேண்டும் என வலியுறுத்துகின்றது.

வழங்கப்படவுள்ள பங்கு மூலதனத்தை விட கூடுதலாக விண்ணப்பங்கள் கிடைக்கும் பட்சத்தில் விருப்பத் தெரிவின்படியோ, பொறிமுறையிலோ, சீட்டிழுப்பு முறையிலோ, எல்லோருக்கும் கிடைக்கக்கூடிய வகையிலோ அல்லது விகிதாசார ரீதியிலோ பங்குகளை ஒதுக்கலாம் ஆயினும் விகிதசார ரீதியில் ஒதுக்குவதே சிறந்ததாகும். மேலதிகமாக கிடைக்கப்பெற்ற விண்ணப்ப பணங்கள் இயக்குனர் சபையின் தீர்மானத்தின் படி திருப்பி அனுப்பவோ அல்லது ஒதுக்கல் அழைப்புக்கான பணத்தை ஈடுசெய்யவோ முடியும்.

பங்கு வழங்கல் மூலம் பெறப்படும் பணமானது விண்ணப்பத்தின் மீது முழுமையாக செலுத்தப்படாது, தவணைகள் அடிப்படையில் பெறப்படும் போது அழைப்புக்குட்படுகின்றன. ஆயினும் எந்தவொரு அழைப்பாயினும் பங்கின் பெயரளவு பெறுமதியில் நாலிலொரு பகுதிக்கு (25%) மேற்படலாகாது என கம்பனிச் சட்டத்தின் 1ம் உப அட்டவணையின் 15ம் பிரிவு வலியுறுத்துகின்றது

கம்பனிச் சட்டத்தின் 1ம் உப அட்டவணையின் 18ம் பிரிவின் ஏற்பாட்டுக்கமைய ஒரு பங்கு தொடர்பாக அழைப்புக்கள் விடப்பட்டு அதற்குரிய பணத்தினை நியமிக்கப்பட்ட திகதியில் கொடுக்கப்படாத விடத்து அப் பணத்தினையும் அதற்குரிய வட்டியினையும் உண்மையாகக் கொடுக்கப்பட்ட திகதி வரையும் இயக்குனர் சபையின் தீர்மானத்தின்படி வருடத்துக்கு 10%ஐ வட்டியாக செலுத்துதல் வேண்டும். இத்தகைய வட்டியினை முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ விலக்கி விடுவதற்கு இயக்குனர் சபைக்கு முழு உரிமையுண்டு.

கம்பனிச் சட்டத்தின் 1ம் உப அட்டவணையின் 21ம் பிரிவுக்கு அமைய, பங்குகள் எவற்றின் பேரிலாவது உறுப்பினர் எவராவது அழைக்கப்படாத பணத்தினை முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ முற்பணமாக செலுத்தினால் அதனை இயக்குனர் சபையின் தீர்மானத்திற்கு இணங்க ஏற்கலாம். அவ்வாறு ஏற்கப்படும் முற்பணங்களுக்கு ஆண்டொன்றுக்கு 10% மேற்படாத தொகையினை வட்டியாகக் கொடுக்கும் உரிமையினை குறித்த கம்பனியின் இயக்குனர் சபைக்கு உண்டு.

அழைப்புத் தொடர்பான நிலுவைகள் ஓர் நிதியாண்டின் முடிவில் காணப்படுமிடத்து அத்தகைய மீதியினை ஐந்தொகையில் எவ்விடத்தில் காட்டப்பட வேண்டும் என்பதை இலங்கை கம்பனிச் சட்டம் தெளிவாக குறிப்பிடப்படவில்லை. ஆனால்1985ம் ஆண்டு இங்கிலாந்து கம்பனிச் சட்டத்தின் படி அழைப்பு நிலுவையானது ஐந்தொகையில் பின்வரும் இருநிலைகளில் ஒன்றில் காட்டப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| | அழைப்பு நிலுவை | X X X |
| I) | **நிலையான சொத்துக்கள்** | |
| | கட்புலனாகச் சொத்துக்கள் | X X X |
| | கட்புலனாகும் சொத்துக்கள் | X X X |
| | முதலீடுகள் | X X X |
| II) | **நடைமுறைச் சொத்துக்கள்** | |
| | இருப்புகள் | X X X |
| | கடன்பட்டோர் | X X X |
| | அழைப்பு நிலுவைகள் | X X X |

அதாவது ஐந்தொகையில் நிலையான சொத்துக்களுக்கு மேல் அழைப்பு நிலுவை காட்டப்படுகின்றது. அல்லது நடைமுறைச் சொத்தாக இறுதியிருப்புக்கள் கடன்பட்டோர் ஆகியவற்றின் பின்னர் காட்டப்படுகின்றது. அழைப்பு முற்பணக்கணக்கு மீதியானது ஐந்தொகையில் விஷேடமான இடம் குறிப்பிடப்படவில்லை. இதற்கு மாறாக பிரத்தியேக தலைப்பாக ஐந்தொகையில் ஏதாவது ஓர் இடத்தில் சேர்க்கப்படுகின்றது.

பங்குகள் வைத்திருப்பவர்கள் அழைப்புக்குரிய பணத்தினை கொடுக்கப்பட்ட திகதியில் செலுத்தத் தவறினால் அழைப்பு நிலுவைத் தொகையினையும் அதற்கான வட்டியையும் சேர்த்து செலுத்துமாறு உரிய அறிவித்தலை இயக்குனர் சபை கொடுக்கும் அவ்அறிவித்தல் கொடுக்கட்பட்டு 14 நாட்களில் அழைப்பு நிலுவையினையும்' அதற்கான வட்டியையும் செலுத்த தவறினால் இயக்குனர்சபை அப்பங்குகளை பறிமுதல் செய்ய ஏற்பாடு செய்யும் இந்த ஏற்பாடுகள் கம்பனிச் சட்டத்தின் 1ம் உப அட்டவணையின் 34ம், 35ம் பிரிவுக்கு உட்பட்டவையாகும்

பறிமுதல் செய்ய ஏற்பாடு செய்யும் வேளையில் குறிப்பிட்ட பங்கு தொடர்பாக எவ்வளவு தொகை பங்கு மூலதனக் கணக் இல் செலவு வைக்கப்பட்டதோ அத்தொகையினையே பங்குமுதற் கணக்கிலிருந்து பறிமுதற் கணக்கிற்கு மாற்றப்படுதல் வேண்டும். அதேவேளை பறிமுதல் செய்யும் பங்கானது வட்டத்துடன் வழங்கப்பட்டு ஒதுக்கலின் போது நிலுவை ஏதாவது இருப்பின் பங்கு வட்டத்துக்குரிய பணம் கிடைக்கப்பெறவில்லை எனக்கருதி பறிமுதல் செய்யும் பங்கிற்குரிய வட்டத்தினை பங்கு வட்டக் கணக்கு வரவு வைத்தி விண்ணப்ப ஒதுக்க கணக்கில் செலவு வைக்க வேண்டும். என இலங்கை பட்டையக் கணக்காளர் நிறுவனம் கூறுகின்றது. ஆனால் கிடைக்கப்பெறாத வட்டத்தினை பங்கு வட்டக் கணக்கு வரவு வைப்பதோடு பறிமுதற் கணக்குசெலவு வைக்கப்படும் வழக்கம் இங்கிலாந்துகப்பனிகளின் ஏடுகளில் காணலாம்.

பறிமுதல் செய்யப்பட்ட பங்குகள் தொடர்பான நிலுவையானது பங்குபறிமுதற் கணக்கிற்கு மாற்றப்படுதல் வேண்டும் அவ்வாறு நிலுவைகள் மாற்றப்பட்டதன் பின்னர் பங்கு பறிமுதல் மீதியானது கம்பனியின் நிதியாண்டின் முடிவில் காணப்படுமிடத்து அதனை ஐந்தொகையில் புறம்பான தலைப்பாக மூலதன ஒதுக்கத்தின் கீழ் காட்டப்படுதல் வேண்டும். பறிமுதல் செய்யப்பட்ட பங்குகள் மீள வழங்கும் போது ஏதாவது ஒரு விலைக்கு மீள்விநியோகம் செய்ய முடியும். மீள்விநியோகம் மூலம் பெற்ற தொகையையும் மீள்விநியோகம் செய்யும் பங்கின் ஆரம்ப வழங்கலால் பெறப்பட்ட தொகையையும் கூட்டும் போது குறைந்தது பங்கின் முகப்பெறுமதியினை பூர்த்தி செய்தல் வேண்டும். இவ்வாறு இலங்கை கம்னிச்சட்டம் பங்குவழங்கல் தொடர்பாக ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது.

References:


1) JENNINGS A. R. - Financial Accounuting
2) PAUL GEE - Spicer and Peglers Book - Keeping and accounts
3) Provisions of the companies Act, No, 17 of 1982 Srilanka.

# ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்
# (INTEGRATED RURAL DEVELOPMENT PROGRAMME)

செல்வன் வீ. தயாபரன்
பல்கலைக்கழக புகுமுக ஆண்டு
வர்த்தகப் பிரிவு

முகவுரை:-

இலங்கை அரசினால் 1977ன் பின் பல புதிய வகையான பொருளாதார முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. இவை விரைவான பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தவும் சமூக நீதியைப் பேணவும் கூடிய அக்கறை காட்டியது முதலீட்டு ஊக்குவிப்பு வலயம், துரிதப்படுத்தப்பட்ட மகாவலி அபிவிருத்தித் திட்டம், ஒரு மில்லியன் வீடமைப்புக்கான திட்டம், புதிய பாராளுமன்ற நிர்மானம் ஆகிய பல திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன இவை தொடர்பில் அபிவிருத்திகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அதாவது மேற்குறிப்பிட்ட பாரிய திட்டங்களினால் நன்மைகளைப் பெற்றுக் கொள்ளாத கிராமங்களுக்கு உதவிகளை வழங்கவும், பொருளாதார வாய்ப்புகளை விரிவுபடுத்தவும், பொது வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தவும், மாவட்டங்களுக்கு இடையேயும், மாவட்டங்களுக்கும் உள்ளேயுமான சமமின்மையைக் குறைத்துச் சமமான வளர்ச்சியினை மேம்படுத்தவும் என 1979ல் ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் உருவாக்கப்பட்டது

## நோக்கங்கள்

இந்த நிகழ்ச்சித் திட்டமானது பல நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. பொதுவாக நோக்கும்போது பின் தங்கிய கிராம மக்களின் வருமானம், தொழில் வாய்ப்பு என்பவற்றை உயர்த்துவதுடன் நவீன விவசாய முறையை அறிமுகம் செய்தல், சிறுஏற்றுமதி உற்பத்தியை ஊக்குவித்தல், சிறு குளங்களைப் புனரமைத்தல், மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேலோங்கச் செய்ய வைத்தல் ஆகியன இதன் நோக்கங்களாகும். இதில் குறிப்பிடத்தக்க அம்சங்களாக

1) கிராமியமாவட்டத்தில் குறிப்பிடத்தக்க சில வளங்கள் பயன்படுத்தப்படாது உள்ளன இதனால் இவற்றை முழுமையாகப் பயன்படுத்த வேண்டிய ஒழுங்குகளைச் செய்து கொடுப்பது, மற்றும் பயன்படுத்தப்படாத நீர்வளம், நிலவளம் மனித ஊழியம் என்பவற்றை முழுமையாக பயன்படுத்துவதில் இத் திட்டமுறைஅக்கறை காட்டுகிறது. அத்துடன் இது சிக்கன நடவடிக்கைகளை அதிகரிக்கவும் உதவும்.

2) ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தித் திட்டமானது பல பெரிய முதலீட்டுத் திட்டங்களில் உள்ளடக்கப்படாதமாவட்டங்களின் நலன்களைக் குறிப்பாகக்கருதி வகுக்கப்பட்டதாகும். கிராமியத்துறையில் இயக்க நிலைமையைப் புகுத்த வேண்டி உள்ள நீண்டகாலத் தேவையை கருத்திற் கொண்டு வகுக்கப்பட்டன. மாவட்டங்களில் சமமின்மையைப் போக்க இவை எத்தனிக்கின்றன.

3) அபிவிருத்திச் செயன்முறைகளில் மக்களுக்குள் இருக்கின்ற இடைவெளியைத் தவிர்ப்பது என்பதும் மற்றும் தொடர்புகள் இல்லாத ஒரு குறிப்பிட்ட அளவு தொழிலாளர் ஒரு பகுதிக்கு வந்து தங்கியிருந்து அபிவிருத்தி வேலைகளில் ஈடுபட அப்பகுதி மக்கள் விலகி நின்று பார்த்தல் எவ்வகையில் செயல்திறன் உடையதாகக் கருதப்படுகிறது என்பது கேள்வியானதாகும் அதாவது தமது பிரதேசங்களில் முன் உரிமை அளிக்கப்படவேண்டும் என்பதை அப்பகுதி மக்கள் அறிந்திருப்பதுடன் அவர்கள் அதற்கு உதவி செய்வதாகவும் அமைதல் வேண்டும் அதாவது இது தேசிய பற்றுள்ள அபிவிருத்தியில் ஆர்வமுள்ள மக்கள் தொகுதியை வளர்த்தெடுக்க உதவியாக அமைகிறது.

4) பொருளாதாரத்தில் சமமின்மையை ஒழுங்குபடுத்துவதும் ஏதாவது வருமானம் குறைந்த குறிப்பாக விவசாய மட்டத்தில் சிறுநிலததுண்டுகள் கொண்ட சிறு விவசாயியின் வறுமை நிலையில் பின்னடைந்த நிலையில் வாழும் போது வேறுசில மாவட்டங்களில் மிகவும் வசதி உடையவராக நிலவுடமையாளர் உள்ளனர் இந்தப் பாதகமான வளர்ச்சியைக் கட்டுப்படுத்தி இயன்றளவு சமனிலைலையை ஏற்படுத்த இத்திட்டம் உதவி வருகிறது. இதேபோல் சமூகத்தில் சிலர் மிக வசதியாகவும் பொருளாதார வாய்ப்புக்களைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் போது வேறு சிலர் கீழ் உழைப்பு, வேலையின்மை, குறைந்த வருமானம் என்ற குறைந்தமட்ட நிலையில் வாழ்கின்றனர். இந்த வேறுபாடுகளைக் குறைத்துக் கொள்ளக்கூடிய வகையில் அபிவிருத்தியை மேற்கொள்ள கவனம் செலுத்தும்.

5) பல்வேறு அரச பகுதிகள் அவற்றின் நடவடிக்கைகள் என்பவற்றின் இடையில் தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல், பரஸ்பர பிணைப்புக்களை உருவாக்குதல், முடிவுகளைமேற்கொள்ளல் போன்றவற்றிற்குக் கூடியகவனம் செலுத்துகிறது என்பதும் இதன் நோக்கமாகும்.

இவ்வாறு ஒவ்வொரு மாவட்டத்திலும் வருமானம், தொழில், வாழ்க்கைத் தரம் என்பவற்றில்கணிசமான அதிகரிப்பை ஏற்படுத்துவதை தமது பரந்த குறிக்கோளாகக் கொண்டமைந்தது. இதன் மூலம் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும். மேலும் ஒவ்வொரு கிராமத்தில் காணப்படும் விவசாய வளங்கள், உள்ளமைப்பு வசதிகள் நிறைவாகப் பயன்படுத்துவதனால் உறுதிசெய்தல், அவை வீணாக்கப்படலைத் தவிர்த்தல், மேலதிகமான நிறுவன சேவைகளை மேலும் வலுப்படுத்தல், இயற்கை வளங்களைப் பாதுகாப்பதுடன் இயற்கை வளங்களைப் புதிதாக உருவாக்குதல், திட்டம் தீட்டுதல், செயற்படுத்துதல், கிராமிய மக்களின் பூரண பங்களிப் பெறல் என்பவை போன்ற நோக்கங்களைக் குறிப்பிடலாம்.

இவ் ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் மேற்கூறப் பட்ட நோக்கங்களைக் கொண்டு செயற்படுகையில் இதன் செயல் திட்ட தொழிற்பாடு எந்த அளவிற்குப் பயன் உடையதாக இருப்பது என்பது அவற்றின் தொழிற்பாட்டிலே தங்கியுள்ளது.

## செயல் திட்டத் தொழிற்பாடு

ஒவ்வொரு மாவட்டங்களுக்குமான செயல் திட்டங்கள் திட்ட அமுலாக்கல் அமைச்சினால் தயாரிக்கப்படும் இது. நிதி வழங்குனர்களால் மதிப்பிடப்பட்டே செயல் திட்டம் ஏற்றுக் கொள்ளப்படும். இதன் செயற்பாடாகச் சுயதொழிலுக்கும் விவசா

யத்திற்கும் குறிப்பான நிதிகள் அரச வங்கிகளின் ஊடாக வழங்கப்பட்டு வந்தன. சுயதொழில் திட்டங்களுள் உள்ளடக்கிய விவசாய அபிவிருத்திக்கான கடன்களாகிய கால்நடை வளர்ப்பு, தெங்கு மற்றும் தேயிலைச் செய்கைக்கான உரப் பசளைத் திட்டங்கள் என்பவற்றை இவற்றிற்கு உதாரணம் கூறலாம். மற்றும் வளஒதுக்கீட்டினைத் தற்போது நடைமுறையில் உள்ள பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டின் கீழும், துறைசார் திட்டங்களின் கீழும் ஒதுக்கப்படுகின்றன.

ஒரு குறிப்பிட்ட மாவட்டத்திலுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குப் பல்வேறுபட்ட செயல் திறன்களினூடாக ஆக்கக்கூடிய தராதரங்களை ஒருங்குஇணைப்பதாகவே இது அமையும். இத்தகைய நிகழ்ச்சித் திட்டமானது முக்கியமாக மூன்று வகைத் திட்டமிடல் நோக்கினை அடிப்படையாகக் கொண்டது.

1) சில குறிப்பிட்ட மாவட்டங்களின் உற்பத்தியளவு உற்பத்தித்திறன் ஆகியவற்றை உயர்த்துவதற்கான வளர்ச்சி சார்ந்த அணுகுமுறை.

2) சில குறிப்பிட்ட மாவட்டங்களின் மனிதவளம், பௌதிகவளம் என்பவற்றை அபிவிருத்தி செய்வதற்கான பிரதேச அபிவிருத்தி சார்ந்த அணுகு முறை.

3) சில குறிப்பிட்ட மாவட்டங்களிலுள்ள வறிய மக்கள் பிரிவினரின் நேரடி நலன்கள் தொடர்பான இலக்குகளுக்குரிய மக்கள் சார்ந்த அணுகு முறை.

இந்த திட்டமுறை செயன்முறையாயாகும்போது பலகட்டங்களைக் கொண்டனவாக அமையும். அவையாவன

1) இனங்காணல்.
2) பேரின வடிவ வேலைமுறை.
3) துறைசார் ஆய்வும் வாய்ப்பு நிலை அறிக்கை தயாரித்தலும்.
4) உள்ளூர் துறை இணைப்புக்கள்.
5) செயல் திட்ட விபரங்களை முடிவு செய்தல்.

ஒரு மாவட்டத்தின் செயல்திட்ட தொழிற்பாட்டு அமைப்புப் பற்றி நிறுவனத்திற்கு உதவியாக அந்த மாவட்டத்தைப் பற்றி பல தரவுகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். குறிப்பாக

அ) சமூகப் பொருளாதார நிலமை பற்றியும், வளங்கள் பற்றியும் நேர்முகமாகஆய்வினை மேற்கொள்ளுவதன் மூலம் கிடைக்கப் பெறும் விபரங்கள்.

ஆ) இலங்கை புள்ளி விபரத் திணைக்களத்தினைத் தேசிய ரீதியாகத் தயாரிக்கப்பட்ட முதல் நிலைப் புள்ளி விபரங்கள் இவற்றின் அடிப்படையில் மதிப்பீடு செய்வதினால் பெற்றுக் கொள்கின்ற இரண்டாம் நிலைப் புள்ளிவிபரம்.

இதன் மூலம் கிடைக்கப்பெற்ற நிலவுரிமைகோர, வளங்கள், தொழில் இன்மை, சீழ்உழைப்பு, அப்பகுதி வறிய பிரிவினர் போன்றவற்றை அறிய முடியும். இதன் மூலமே அதாவது இதற்கு இசைவாகவே செயல்திட்டம் தயாரிக்கப்படலாம்.

மூன்றாம் நிலையில் இச் செயல் திட்ட உபாயங்களுக்கு அமைவாக விரிவான துறைவாரியான ஆய்வு மேற்கொள்ளப்படும். அடுத்த நிலையில் குறிப்பிட்ட இலக்குக்குரிய மக்கள் நலனுக்கு ஏற்றதாக முரன்பாடுகள், தடைகளை விலக்கித் துறைசார் தொடர்புகள் ஏற்படுத்தப்படும். அதாவது பல்வேறுபிரதேசதேசியமட்ட செயல்திட்டங்களிடையேயும் ஒருங்கிணைப்பு ஏற்படுத்தப்படும். பின்னர் மாவட்டசார் மக்கள் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆலோசனை

களைப் போதியளவு பெற்று செலவுக்குரிய நன்மைகள் பொருளாதார நவீன வெளிப்பாடுகள் என்பன இதில் கணிப்பிடப்படும். இறுதியாக இதனை நடைமுறைப்படுத்தலுக்குத் திட்டமிடவாக்கப்படுகிறது.

## நடைமுறைப்படுத்தல்

கிராமிய மட்டத்தில் வளர்ச்சியை ஏற்படுத்தி வளர்ச்சியை உருவாக்கும் இத் திட்டத்தினை நடைமுறைப்படுத்த இலங்கையின் சம மாவட்டங்களில் 1992 வரை 17 மாவட்டங்கள் தெரிவு செய்யப்பட்டன. இவற்றுள்

1) குருநாகலில் 1979ம் ஆண்டு தொடங்கப்பட்டது. இது முதலாவது செயற்திட்டம் என்ற முறையில் உலக வங்கியின் இணை நிறுவனமாகிய சர்வதேச அபிவிருத்திச் சங்கம் (IDA) 2/3 பங்கு நிதி உதவியுடன் செயற்பட்டது. இது பிரதான நெல், தெங்கு உற்பத்திப் பிரதேசமாகவே உள்ளது முதலில் இதற்கான செலவு 465 மில்லியனாக அமையும் என எதிர்பார்க்கப்பட்டது ஆனால் சில காரணங்களினால் இதன் மொத்தச் செலவு 655 மில்லியனாக உயர்த்தப் ட்டதுடன் 1986ல் முடிவடைந்துள்ளது.

2) புத்தளம் மாவட்டத்தில் 1981ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இத் திட்டமானது 2/3 பங்கு நிதி உலக வங்கியினால் வழங்கப்பட்டது. இவையும் விவசாயம், விவசாயக்கடன், நீர்ப்பாசனம், பொருளாதார உள்ளமைப்புத் துறைகள், சமூக உள்ளமைப்புத் துறைகள் செயற்திட்ட ஒருங்கிணைப்பு முகாமை போன்றவற்றில் கூடிய கவனம் செலுத்தப்பட்டது. புத்தள மாவட்டமானது தெங்கு அபிவிருத்தி நீர் முகாமை மீள்காடாக்கலுக்கு முக்கியமாக அமைந்தது. இது 1991ம் ஆண்டு நிறைவை எய்தியது.

3) அடுத்ததாக 1979ல் மாத்தறை மாவட்டத்தின் செயற்திட்டமும் சுவீடனின் சர்வதேச அபிவிருத்திச் சங்க உதவியுடன் தொடக்கப்பட்டது இது குறிப்பாக 4 வருடத்துக்குரியதாகவே தயாரிக்கப்பட்டது. ஆனால் இது மாற்றமுறும் திட்டமாக (Rolling plan) ஏற்படுத்தப்பட்டது. இது விவசாய விஸ்தரிப்பு, பயிற்சி, பண்ணை, நீர்ப்பாசன அபிவிருத்தி என்பவற்றினதும், சிறு தேயிலை உடமையாளர் மேம்பாடு, பண்ணை மீன்பிடி அபிவிருத்தி என்பவற்றுடன் சமூக நலத்துறைகளும் கருத்தில் கொள்ளப்பட்டன. இதற்கு 55 மில்லியன் ரூபா தேவை எனக்கருதப்பட்டாலும் 119 மில்லியன் ரூபாவாக செலவிடப்பட்டது. மேலும் இதற்கு 80 மில்லியன் ரூபா தேவைப்பட்டது. இது 1992ல் நிறைவு செய்யப்பட்டது.

இவ்வாறு பல மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் சில மாவட்டங்களில் இடைநிறுத்தப்பட்டன மற்றும் சில முடிவடைந்த நிலையிலும் உள்ளன இவற்றில் முதலாவதாக இடைநிறுத்தப்பட்டவற்றை நோக்குவோமாயின்.

1) வடமாகாண மாவட்டங்களில் ஏற்பட்ட இனக்கலவரங்கள் காரணமாக மற்றும் சீரற்ற நிலமைகள் காரணமாகக் கடந்த மூன்றாண்டுகளாக இவற்றின் நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடிந்துள்ளன. இதனால் உலக வங்கியின் நிதியளிப்பைப் பெற்ற வவுனியா, மன்னார் ஆகியனவும் மற்றும் ஒல்லாந்து அரசாங்கத்தின் நிதியளிப்பைப்

பெற்ற முல்லைத்தீவுமே இந்த இடை நிறுத்தப்பட்ட மாவட்டங்களாகும்.

இனி முடிவடைந்த வகையில் நோக்குவோமாயின் குருநாகல் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முதலாவது ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் 1986ல் முடிவுற்றது. மற்றும் உலக வங்கியின் உதவியுடன் தொடக்கப்பட்ட புத்தளம் மாவட்ட ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் 1991ல் முடிவுற்றது.

இவ ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டமானது பலநோக்கங்கள், செயற்பாடு என்ற அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டது. என்றாலும் கூட பல நன்மைகளைக் கொண்டு உள்ள போதிலும் சில குறைபாடுகளையும் கொண்டமைந்ததாகக் காணப்படுகிறது.

## நன்மைகள்

1) இதுவரை ஏற்படுத்தப்பட்டுள்ள திட்டங்களைக் காட்டிலும் இங்கு அபிவிருத்தி குறைந்த அதாவது வளர்ச்சி பெறாத பகுதிகள் குறிப்பாகத் தெரிவு செய்யப்பட்டு அதனை மேம்படுத்துவதற்கான உத்திகள் மேற்கொள்ளப்பட்டன.

2) மாவட்ட மட்டங்களிலும் வளர்ச்சி குறைந்த கிராமங்களுக்கும் இடையே வருமான ஏற்றத்தாழ்கள் மற்றும் சமூகப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை நீக்கி எல்லாக் கிராமங்களையும் மாவட்டங்களையும் ஒரே சமநிலைக்குக் கொண்டு வருவதாக இது அமைகிறது.

3) பல்வேறு நிதி நிறுவனங்களிடையே உலகநிதி நிறுவனங்களிடையே ஒருங்கிணைந்த ஒரு ஒற்றுமையை ஏற்படுத்துதல்.

4) திட்டம் தீட்டுவதிலும் செயற்படுத்துவதிலும் கிராமத்துறையில் பங்களிப்பு உயர்ந்தமை.

5) விரிவாகவும், திறமையாகவும், செறிவாகவும் உற்பத்தியினை அதிகரித்து அதன் தரத்தினை உயர்த்துதல்.

6) நேரடியாகவோ மறைமுகமாகவோ வேலைவாய்ப்புக்களைப் பெற வசதிகள் செய்து கொடுத்தல்.

7) சலுகை வசதிகளாக மின்சாரம், கல்வி, குடிநீர், சுகாதார வசதிகள் போன்ற சேவைகளை ஏற்படுத்திக் கொடுத்தல்

## குறைபாடுகள்

1) மாவட்டங்களுக்குப் பல்வேறுவழிமுறைகளில் நிதி கிடைத்த போதிலும் அவை முற்றும் முழுதாகப் பயன்படுத்தபடவில்லை அதாவது முற்றாக நிதியினைப் பயன்படுத்தவில்லை.

2) கிராமிய தன்னிச்சை நிறுவனங்களைக் கிராமிய முதலாளிகள் நிரப்புவதனால் கிராமிய மக்களின் உண்மையான பிரச்சினைகளை அறிந்து திட்டத்தைத் தயாரித்து அமுல் நடத்துவதில் குறை தோன்றுதல்.

3) தெரிவு செய்யும் மாவட்டங்கள் பின் தங்கிய மாவட்டங்களாக அமைவதால் திறமையான தொழிலாளர் தொகுதி குறைவு. அதாவது திட்டத்தை நடைமுறைப்படுத்த அந்தந்த மாவட்டங்களில் வினைத்திறன் உள்ளதொழிலாளர்கள்தேவையான அளவு கிடைக்காமை.

**ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மீதான மாவட்ட ரீதியான**
**1992 செலவு — பத்து இலட்சம் ரூபாய்களில்**

| மாவட்டங்கள் | தொடங்கிய வருடம் | வெளிநாட்டு உதவி மூலகங்கள் | மதிப்பிடப்பட்ட செலவு | | | இதுகாலவரைக்கும் ஒன்று சேர்ந்த செலவு 1992ல் முடிவில் உள்ளபடி |
|---|---|---|---|---|---|---|
| | | | வெளிநாட்டு உதவி நிதி | உள்நாட்டு உதவி | மொத்தம் | |
| 1) மாத்தறை | 1979 | சீடா | 338 | 37 | 375 | 375 |
| 2) அம்பாந்தோட்டை | 1979 | நொராட் | 766 | 18 | 784 | 769 |
| 3) நுவரெலியா | 1979 | நெதர்லாந்து | 510 | 10 | 520 | 447 |
| 4) பதுளை | 1981 | வே. அ. ப. நி. / சீடா | 500 | 110 | 610 | 496 |
| 5) இரத்தினபுரி | 1984 | நெதர்லாந்து | 263 | 5 | 268 | 241 |
| 6) மொனராகலை | 1984 | நொராட் | 413 | 8 | 421 | 376 |
| 7) கேகாலை | 1986 | வே. அ. ப, நி | 262 | 147 | 409 | 321 |
| 8) களுத்துறை | 1987 | பினிடா (பின்லாந்து) | 371 | 66 | 437 | 371 |
| 9) கண்டி | 1987 | ஜேர்மன் தொ. வ | 120 | 4 | 124 | 55 |
| 10) கம்பகா | 1989 | பப்பான் ப. கூ. வ | 521 | 38 | 559 | 538 |
| 11) தெ. மா. கி. அ. செ | 1991 | ஆ. அ. மு | 1520 | 400 | 1920 | 42 |
| 12) அநுராதபுரம் | 1992 | சீடா | 5 | 44 | 49 | 9 |
| 13) புத்தளம் ஒருங்கிணைக்கிணைக்கப்பட்ட அடிப்படைப் பணிகள் செயற்திட்டம் | 1992 | யூனிசெப் | 106 | 53 | 159 | 27 |
| **மொத்தம்** | | | 5 694 | 942 | 6636 | 4067 |

4) பல்வேறு திணைக்களங்கள் தங்கள் தேவைகளுக்கே பெருமளவில் கவனம் செலுத்துவதால் இத்திட்டம் பாதிப் படைதல்.
உதாரணம்:- வதிவிட வசதி இதனால் ஒருங்கிணைந்த முன்னேற்றம் இன்மை.

5) இத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வெளிநாட்டு நிதியைப் பயன்படுவதால் செலவுச் சிக்கனமின்மை அதாவது கிடைக்கும் நிதியை உச்சமாகப் பயன் படுத்தலாம்.

## முடிவுரை

இலங்கையில் அதிகார பரவலாக்கம் என்ற சூழல் விருத்தி பெற்று வருகின்ற நிலையில் மற்றும் அபிவிருத்தி அடைந்து வருகின்றது என்ற நிலையில் இவ்வாறான புதிய வகையான அபிவிருத்திமுறை விரும் பக்கூடியது ஒன்றானதாகும். இவ்வாறு அபி விருத்தி அடைந்து வருகின்ற இலங்கையா னது உலகநாடுகளில் சிறுசிறு அளவுகளில் உதவிகோரி விரைவான அபிவிருத்தியை உருவாக்குவதன் மூலம் அபிவிருத்தியைத் துரிதப்படுத்தலாம். அரசியல் போகங்கள் வளர்ச்சி அடையக்கூடாது. அமைச்சர், மாவட்ட அமைச்சர், அதிகாரிகள் இடையே முரண்பாடுகள் இருக்கக்கூடாது பன்முகப் படுத்தப்பட்ட பாதீடு, தேசிய பாதீட்டின் துறைசார்நிதி ஒதுக்கீட்டுடன் ஒத்துச்செல்ல வேண்டும். செயற்படுத்தப்படும் பணி முழு மை பெறக்கூடியதாக விருத்தி ஆக்கப்பட வேண்டும் வேலைகளை கையளித்தல், மேற் பார்வைத் தொடர்புபடுத்தல், மதி பிடல் போன்ற கருமங்களில் எல்லா மட்டத்திலும் சீரிய கவனம் செலுத்த வேண்டும். கைத் தொழில் கொள்கைகள், வர்த்தகம் தொடர்பிலான அபிவிருத்திகளை மேம்ப டுத்தி மாவட்ட மட்டங்களின் வறுமையை ஒழித்துச் சமூக ரீதியில் கீழ் நிலையில் இருப் போரை மேல் நிலைக்குக் கொண்டுவருதல். திட்டமிடல் சிந்தனை, நிச்சயமாக வளர்ச்சி மூலமாக எமது பொருளாதாரத்தில் சமூக நீதியை உருவாக்க முடியும் என்பது தொடர்பில் அபிவிருத்திகளை மேம்படுத்த இத்திட்டம் வசதியாக அமைந்தது.

## உஷாத்துணை நூல்கள்

1) பொருளியலாளன் (செ 87)
2) மத்திய வங்கி அறிக்கை (1992)
3) பொருளியல் நோக்கு (ஜ / பெ 1989

மலர் சிறப்புற மனப்பூர்வமான வாழ்த்துக்கள்

# துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ்

புகழ்பெற்ற புத்தக வியாபாரிகளும்
புதினப் பத்திரிகைகளின் பிரதம முகவர்களும்

பஸ் நிலைய முன்பாக, சுன்னாகம்.

# வங்கிகளுக்கு இடையிலான அழைப்புப் பணச் சந்தை
# INTER BANK CALL LOAN MONEY MARKET

செல்வன். ந. தயாபரன்
ஆண்டு 13
வர்த்தகப் பிரிவு

ஒரு பொருளாதாரத்தின் வளர்ச்சியில் நிதிச்சந்தை முக்கியமானதாகும். இது இரு பிரிவுகளாக காணப்படுகின்றது. ஒன்று பணச் சந்தை (Money Market) மற்றையது மூலதனச் சந்தை (Capital Market) ஆகும். இங்கு பணச் சந்தை என்பது நிறுவனங்களுக்கு தேவையான குறுங்கால நிதி வசதிகளை பூர்த்தி செய்யும் அமைப்புக்களை கொண்டதாகவும், மூலதனச் சந்தை என்பது நீண்டகால நிதி வசதிகளை ஏற்படுத்தும் அமைப்புக்களை உள்ளடக்கியதாகவும் காணப்படுகின்றது.

இலங்கையின் பணச் சந்தை அமைப்பை நோக்கும் போது (மத்திய வங்கியின் அறிக்கைப்படி) பின்வரும் பிரதான பிரிவுகளை கொண்டதாக காணப்படுகிறது.

1. வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணச்சந்தை.
2. திறைசேரி உண்டியலுக்கான 1ஆம் தர, 2ஆம்தர, சந்தை.
3. உள்நாட்டில் வெளிநாட்டு செலாவணி சந்தை.
4. கரை கடந்த வங்கி சந்தை.

நாம் இக் கட்டுரையில் வங்கிகளுக்கிடையிலான அழைப்பு பணச் சந்தையை மட்டும் நோக்குகின்றோம். இது இலங்கையின் பணச்சந்தையில் ஓர் முக்கிய பிரிவாக காணப்படுகின்றது. இது பெருமளவுக்கு கொழும்பையும் அதன் சுற்றுப்புறத்தையும் அண்மித்த வர்த்தக வங்கிகள் (Commercial Bank) தமக்கு தற்காலிகமாக ஏற்படும் நிதிப் பற்றாக்குறையை அல்லது நாளாந்த நிதிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக தமக்கிடையே மேற்கொள்ளுகின்ற கொடுக்கல் வாங்கல்களினால் தோற்றுவிக்கப்படுகிறது.

சில வர்த்தக வங்கிகள் நடைமுறையில் திரவப் பற்றாக்குறைப் பிரச்சனையை எதிர்கொள்கின்றன. அதே நேரத்தில் சில வர்த்தக வங்கிகள் மிகைத் திரவப் பிரச்சினையை எதிர்நோக்குகின்றன. இங்கு திரவப் பற்றாக்குறை பிரச்சினையை எதிர்நோக்கும் வர்த்தக வங்கி மிகை திரவப் பிரச்சினையை எதிர்நோக்கும் வர்த்தக வங்கியில் இருந்து கடன் பெறும் நிலை ஏற்படுகிறது. இவ்வாறு கடனை கொடுத்த வங்கி கேட்கின்ற வேளையில் கடன் பெற்ற வங்கி திருப்பி செலுத்துவதையும் காணலாம்.

எனவே திரவப் பற்றாக்குறையை எதிர்நோக்கும் வர்த்தக வங்கி வேறு வர்த்தக வங்கியிடம் இருந்து பெற்றுக் கொண்ட கடனை கடன் கொடுத்த வங்கி கேட்கின்ற வேளையில் திருப்பி செலுத்துகின்ற கடன் அமைவு வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணச்சந்தை எனலாம். இது பொதுவாக ஒரு கிழமை வரையான காலத்தை கொண்டிருக்கலாம்.

வங்கிகளுக்கிடையே நடைபெறும் இத்தகைய கடன் சந்தையின் போது கடன் வழங்

கும் வங்கி அக்கடனின் மீது அறவிடப்படுகின்ற வட்டி வீதமே அழைப்பு கடன் வட்டி வீதம் என அழைக்கப்படுகின்றது. வங்கி அதன் வாடிக்கையாளருக்கு வழங்கும் கடன் மீது அறவிடப்படும் வட்டி வீதத்தை தீர்மானிப்பதில் அழைப்புக் கடன் வட்டி வீதமும் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. வங்கி மற்றைய வங்கிக்கு வழங்கும் கடனின் மூலம் வருமானத்தை உழைக்கின்றது. எனவேதான் அழைப்பு பணச் சந்தை பணம் மிகையாக உள்ள வங்கிக்கு குறுங்கால முதலீடாகவும் திரவப் பிரச்சினையாக உள்ள வங்கிக்கு தீர்க்கும் சாதனமாகவும் அமைகின்றது.

இலங்கையில்இச் சந்தையில் பொதுவாக வர்த்தக வங்கிகளே பங்கு கொள்கின்றன. ஆனால் சில சந்தர்ப்பங்களில் தேசிய சேமிப்பு வங்கியும் தேயசி அபிவிருத்தி வங்கியும் பங்கு கொள்வதைக் காணலாம். 1950ம் ஆண்டு வரைக்கும் இச்சந்தை பெருமளவுக்கு வளர்ச்சி காணவில்லை. ஆனால் 1950ஆம் ஆண்டில் மத்திய வங்கி செயல்ப்பட ஆரம்பித்ததை தொடர்ந்து வர்த்தக வங்கிகள் கட்டாயமாக மத்தியவங்கியில் பண ஒதுக்கத்தை ஏற்படுத்த வேண்டியநிலை ஏற்பட்டது. இதனால் பல வர்த்தக வங்கிகளுக்கு நிதிப் பிரச்சினை ஏற்பட்டது. இதன் பின்பே இவ்வங்கிகள் தமது திரவப் பிரச்சினையை எதிர்கொள்ள அழைப்புப் பணச் சந்தையில் ஈடுபட தொடங்கியதில் இருந்து இது முக்கியத்துவம் பெறத் தொடங்கியது. எனினும் 1977இல் பதவிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசின் புதிய பொருளாதாரக் கொள்கையின் விளைவாக இவ் அழைப்பு கடன் சந்தையின் முக்கியத்துவம் மேலும் அதிகரித்தது.

## 1977 இன் பின் வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணச்சந்தை நடவடிக்கைகள் அதிகரித்தமைக்கான காரணங்கள்

- மத்திய வங்கி வர்த்தக வங்கிகளுக்கு கடன் வழங்க தயக்கம் காட்டியது. இதனால் வர்த்தக வங்கிகள் பெருமளவுக்கு அழைப்பு பணச் சந்தை நடவடிக்கையில் ஈடுபட வேண்டி ஏற்பட்டமை.
- மத்திய வங்கி சாதாரண தேவைகளுக்கு வழமையான வட்டி வீதத்திற்கு கடன்களை வழங்கிய போதும் மேலதிக நிதித் தேவைக்கு கூடிய வட்டி வீதத்தில் கடன் வழங்கியது. இதனால் வர்த்தக வங்கிகள் மத்திய வங்கியின் கடனை அதிகம் நாடாது அழைப்பு பணச் சந்தையில் ஈடுபட தொடங்கியமை.
- வர்த்தக வங்கிகள் அழைப்பு பணச் சந்தை ஊடாக சுதந்திரமாக நிதித்தேவையை பூர்த்தி செய்யும் தன்மை காணப்பட்டமை.
- இலங்கை வங்கி மக்கள் வங்கி என்பன பல புதிய வைப்புத் திட்டங்களை ஏற்படுத்தியமையால் எழுந்த மிகை நிதியை அழைப்பு கடன் சந்தையில் வழங்கி வட்டி உழைக்க முற்பட்டமை.
- இலங்கையில் அண்மை ஆண்டுகளில் பிறநாட்டு வர்த்தக வங்கி கிளைகள் ஸ்தாபிக்கப்பட்டு அவ்வங்கிகள் தமது திரவப் பிரச்சினையை இச்சந்தை ஊடாக தீர்க்க முற்பட்டமை.
- 1979இல் இருந்து பல பணத்தரகு நிறுவனங்கள் உருவாக்கப்பட்டமையால் அவற்றின் உதவியுடன் அழைப்பு பணச் சந்தை நடவடிக்கைகள் திட்டமிட்டு செயல்ப் படுத்தப்படுதல்.

## வங்கிகளுக்கிடையிலான அழைப்பு பணச் சந்தையின் குறிக்கோள்கள்

* திரவப் பற்றாக்குறை எதிர் நோக்கும் வங்கிகளுக்கும் ஏனைய வங்கிகளுக்கும் கடன் வசதிகிடைக்கச் செய்தல்.

* மிகை திரவப் பிரச்சினையை எதிர்நோக்கும் வங்கிகள் நிதி தேவைப்படும் வங்கிகளுக்கு கடன் வழங்கி வருமானத்தை உழைக்க ஏற்பாடு செய்தல்.

* வர்த்தக வங்கிகள் தற்காலிக நிதித் தேவையை மத்தியவங்கியை சாராது சுலபமாக தமக்கிடையே பெற்றுக் கொள்ள ஏற்பாடு செய்தல்.

**வங்கிகளுக்கிடையிலான அழைப்பு சந்தையின் அனுகூலங்கள்**

இவ் அழைப்பு பணச்சந்தையில் கடன் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வங்கிகள் பின்வரும் நன்மைகளைப் பெற்றுக் கொள்கின்றன.

- நிதிப் பிரச்சினை ஏற்படும் போது இலகுவாக கடன் பெறலாம்.
- கடனை இலகுவாக திருப்பி செலுத்தலாம்.
- மிகை திரவப் பிரச்சினையை எதிர்நோக்கும் நிறுவனம் அதனை முதலீடு செய்து வட்டி வருமானத்தை உழைக்க முடியும்.
- கடன் கொடுக்கும் வங்கி நிதி தேவை ஏற்படுகையில் உடனடியாக அப் பணத்தை மீளப் பெற்றுக் கொள்ளலாம்.
- வங்கிகளுக்கிடையே இக்கடன் வசதி காணப்படுவதனால் மீளப் பெறப்படுதல் நிச்சியமானதாகும்.
- வர்த்தக வங்கிகள் நிதித் தேவைக்கு மத்திய வங்கியில் தங்கி இருக்க வேண்டிய அவசியம் இல்லை.

மத்திய வங்கியின் அறிக்கைகளை அவதானிக்கும் போது இவ்அழைப்பு பணச்சந்தை நடவடிக்கைகள் பெரும்பாலும் அதிகரிப்பை காட்டுகின்றன. ஒரு நாட்டின் நிதி நடவடிக்கைகளில் வர்த்தக வங்கிகளின் பங்களிப்பு அதிகமாக உள்ளது. இவ்வர்த்தக வங்கிகள் இலாபத்தன்மை, திரவத்தன்மை எனும் எதிரான நிலமைகளுக்கிடையில் ஒரு சமநிலையை பேணி செயல்படுதல் அவசியமானதாகும். இவ்வாறான நோக்கை அடைந்து தொடர்ந்தும் அவை நிலைத்திருப்பதற்கு வங்கிகளுக்கிடையிலான அழைப்பு பணச்சந்தை இன்றியமையாததாகும்.

- உசாவியவை
பணச்சந்தை - கல்வணைசேயோன்
மத்திய வங்கி அறிக்கை

● ● ● ●

## நடைமுறை விடயம்

வெளிநாட்டு வேலைாய்ப்பு பணியகம் தனது காரியாலயத்தில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு தரவு வங்கி ஒன்றை ஆரம்பித்துள்ளது. இது ஆரம்பித்ததன் பிரதான நோக்கம் வெளிநாடுகளில் இருந்து வருகின்ற உடனடி வேலை வாய்ப்புகளுக்கு விளம்பரம் செய்வது கால அவகாசமாக அமையும் எனவே உடனடியாக வேலை வாய்ப்பை பெறும் நோக்குடன் இந்த வெளிநாட்டு தரவு வங்கி மூலம் முன்னதாகவே வேலைவாய்ப்பு பெறுவோர்க்கான தரவுகளை திரட்டிவைப்பதன் மூலம் உடனடியான வேலை வாய்ப்புக்களை பெறமுடியும்.

**தகவல்:-**
**வீரகேசரி 13 - 02 - 94**

# பேராசிரியர் கைலாசபதியின் தமிழ்ப் பணிகள்

**பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ்**
*தலைவர், தமிழ்த்துறை*
*யாழ்ப்பாண பல்கலைக்கழகம்*

## முன்னுரை

*க. கைலாசபதி 1933ம் ஆண்டு சித்திரை மாதம் 5ம் திகதி கோலாலம்பூரிலே பிறந்தார். இவருடைய தந்தையின் பெயர் இளையதம்பி கனகசபாபதி; தாயின் பெயர் தில்லைநாயகி. ஆரம்பக் கல்வியினைக் கோலாலம்பூரிலே பெற்ற அவர், யாழ்ப்பாணம் வந்து, யாழ்/இந்துக் கல்லூரியிலே தன்னுடைய இடைநிலைக் கல்லூரியைத் தொடர்ந்தார். பின்னர் கொழும்பு றோயல் கல்லூரியிலே பயின்று, 1953ல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டதாரி மாணவராகச் சேர்ந்தார். பல்கலைக் கழகத்திலே அவர் தமிழைச் சிறப்புப் பாடமாகப் பயின்றார். 1957ல் முதல் பிரிவிலே தேர்ச்சியடைந்து கலைமாணிப் பட்டத்தினைப் பெற்றார். 1957ஆம் ஆண்டிலேயே தினகரன் இதழின் துணை ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கினார். 1958 முதல் அவரே அவ்விதழின் முதன்மை ஆசிரியராக ஆனார். 1961ல் அவா பேராதனைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைத் துணை விரிவுரையாளராகப் பணிபுரியத் தொடங்கினார். 1963ல் பர்மிங்ஹாம் பல்கலைக் கழகத்தில் கலாநிதிப் பட்ட ஆய்வினை மேற்கொள்வதற்காகச் சென்றார். அப்பட்டத்துக்காக அவர் எழுதிய ஆய்வேடு ('Tamil Heroic Poetry தமிழ் வீர ஊழிக்காலக் கவிதை') 1968ல் ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழக அச்சகத்தினால் வெளியிடப்பட்டது.*

*இங்கிலாந்தில் கலாநிதிப் பட்டம் பெற்று, 1966ல் பேராதனைப் பல்கலைக் கழகத்துக்குத் திரும்பினார். 1969ல் கொழும்புப் பல்கலைக் கழகத்துக்கு இடமாற்றம் பெற்றார். 1974ல் வித்தியாலங்கார வளாக இந்துநாகரிகத்துறைத் தலைவரானார். அதே ஆண்டில் யாழ்ப்பாண வளாகம் திறக்கப்பட்டபோது, அவர் அதன் தலைவராக நியமனம் பெற்றார். தமிழ்த்துறையின் முதற் பேராசிரியராகவும் அவர் நியமனம் பெற்றார். பின்னர் யாழ்ப்பாண வளாகம் தனித்துவமான நிறுவனமாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் ஆகியபோது, அதன் கலைப் பீடாதிபதியாகப் பதவி ஏற்றார். இப் பணியினை அவர் ஆற்றிக் கொண்டிருக்கும் போதுதான் திடீரெனச் சுகயீன முற்று 1982 ம் ஆண்டு மார்கழி 6ம் நாள் தன்னுடைய 49 ஆவது அகவையில் காலமானார். அவருடைய இழப்பு தமிழியல் உலகுக்குப் பேரிழப்பாகும். அவர் உயிருடன் இருந்திருந்தால், தமிழியல் துறைக்கு மேலும் பல புதிய கருத்துக்களும் ஆக்கங்களும் கிடைத்திருக்கும்.*

## பத்திரிகைப் பணி

*ஈழத்துத் தமிழ் ஆக்க இலக்கியப் படைப்பாளிகள் பலர் தினரகன் இதழிலும் சுதந்திரன் இதழிலும் எழுதியுள்ளனர். நாளேடுகள் வெறுமனே செய்திகளை வெளியிடும் இதழ்களாகவன்றி, இலக்கிய வளர்ச்சிக்கும் துணை செய்யக் கூடியன என்னும் உண்மையினை ஈழத்திலே தினகரன் இதழ் உணர்த்தியது. இதற்குக் காலாக இருந்தவர் அவ்விதழின் முதன்மை ஆசிரியராக 1958 முதல் பணியாற்றிய க. கைலாசபதி*

ஆவர். இவருடைய பத்திரிகை ஊடான தமிழ்ப்பணி வகைப்பட்டதாகும்.

1) கவிதை, சிறுகதை, நாவல் எழுதியவர்களை ஊக்குவித்தமை.

2) இலக்கியப் படைப்புக்களை விமர்சிக்கும் பழக்கத்தை ஊக்குவித்தமை.

3) தமிழ் இலக்கிய மாணவர்களுக்குப் பல்வகைப்பட்ட செய்திகளைத் தினகரன் ஊடாக அளித்தமை.

இளம் எழுத்தாளர்களைத் தினகரன் இதழிலே எழுதும்படியாக நேரடியாகவும் கடிதம் மூலமாகவும் தூண்டினார். சிறுகதை, கவிதைப் போட்டிகளை நடத்தி இளையவர்களின் எழுத்து ஆர்வத்தை வளர்த்தார். இளங்கீரன் போன்ற எழுத்தாளர்களின் தொடர்கதைகளை வெளியிட்டு, வாசகர்களுடைய வாசிக்கும் ஆவலைத் தூண்டியுள்ளார். ''நீதியே நீகேள்'' என்னும் தொடர்கதை தினகரனிலே வெளிவந்தபோது அதன் முடிவிலே கதாநாயகி பத்மினி சாகக்கூடிய நிலைமை ஏற்பட்டபோது ''பத்மினி சாகக்கூடாது'' என்று பல தந்திச் செய்திகள் தனக்கு வந்தன என்று கைலாசபதி எழுதியுள்ளார். வாசகர்களுடைய ஆர்வம் எப்படியிருந்தது என்பதை இதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.

திறனாய்வு எண்ணத்தினை வளர்ப்பதற்காகக் கைலாசபதி தினகரன் இதழை நன்கு பயன்படுத்தினார். சிறுகதை, நாவல் கவிதை நூல்கள் பற்றிய மதிப்பீட்டுக் கட்டுரைகள், தமிழ் இலக்கியங்களைப் பொதுவாக மதிப்பிடும் கட்டுரைகள், நாடகம், திரைப்படம் ஆகியன பற்றிய திறனாய்வுக் கட்டுரைகள் தினகரனிலே வெளியிடப்பட்டன. இலக்கியம் படைப்பவர்களிற் பெரும்பான்மையினர் திறனாய்வாளர்களாகவும் அமையக் கைலாசபதி தினகரன் ஊடாக ஊக்கம் நல்கினார். ஈழத்திலே திறனாய்வுத் துறை நன்கு வளர்ச்சியடைதற்குக் கைலாசபதியும் தினகரன் ஊடாகப் பணியாற்றினார்.

தமிழ் இலக்கிய மாணவர்கள் மட்டுமன்றி, வாசகர்கள் யாவரினுடைய இலக்கிய அறிவினை வளர்ச்சியடையச் செய்ய பல கட்டுரைகள் தினகரனிலே வெளியாயின தினகரனிலே ''புதன் மலர்'' ''மாணவர் பகுதி'' ஆகியன அமைக்கப்பட்டன. வாசகர்களில் ஒவ்வொரு பகுதியினருடைய சுவைக்கும் ஏற்றபடி இதழிலே வெளியான கட்டுரைகள் முதலாயின அமைந்தன.

## ஒப்பியல் இலக்கிய ஆய்வு

பேராசிரியர் கைலாசபதி தமிழரின் பழந்தமிழ் இலக்கியங்களாகிய சங்ககால இலக்கியங்களிலே மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். அவை பழைய இலக்கியங்கள் என்ற காரணத்துக்காக அவற்றிலே அவர் ஈடுபாடு கொள்ளவில்லை. அவற்றைப் படிப்பதன் மூலமாகப் பெறப்படும் விளக்கங்கள் தற்காலத் தமிழியல் ஆய்வுகளுக்கு உதவக்கூடும் என அவர் எண்ணினார். அத்துடன் சங்கப் பாடல்கள் வீர ஊழிக்காலத்துச் செய்யுட்கள் என்னும் உண்மையினை உணர்த்துவதுடன், அவ்வூழிக்காலத்துச் செய்யுட்கள் எவ்வகைப் பண்புகளைக் கொண்டமைந்தன என்பதனைக் கிரேக்க வீர ஊழிக்காலத்துப் பாடல்களுடன் ஒப்பிட்டுக் காட்டினார். கிரேக்க, ஐரிஷ் பாடல்களிலே காணப்பட்ட வாய்மொழி மரபு சங்கப் பாடல்களிலும் காணப்படுகின்றதெனக் கைலாசபதி அவர்கள் குறிப்பிட்டுள்ளார். வாய்மொழி மரபாக சங்கப்பாடல்கள் கையளிக்கப்பட்டு வந்தமைக்கு அப்பாடல்களிலே காணப்படும் சில பண்புகளை அவர் சான்றுகளாகக் காட்டியுள்ளார். அப்படியான சான்றுகளுள் ஒன்று சங்கப்பாடல்களிலே திரும்பத்திரும்பச் சில அடிகள், தொடர்கள், சொற்கள் இடம் பெறுவதா

வணிகநாதம் வளர எமது
வாழ்த்துக்கள்

தரமான ஆங்கில மருந்து
வகைகளுக்கு நாடவேண்டிய
ஒரே இடம்

## சக்தி மருந்தகம்

டச்சு வீதி,
உடுவில்,
சுன்னாகம்.

---

மலர்சிறக்க வாழ்த்துகிறோம்

## நாதன் அரிசி ஆலை

டச்சு வீதி,
உடுவில்.

---

யாழ், பேராதனைப் பல்கலைக்
கழகங்களிற்கான

**B A, G A Q வகுப்புக்களும்**
**A/L கலை, வர்த்தக**
வகுப்புக்களும் நடைபெறுகின்றன

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

---

சுன்னாகத்திலே
ஒரு குளிரருவிச்சாலை
எம்மிடம்
யாழ் றியோன் றோல்ஸ், கட்லட்
வகைகளும்
றொலெக்ஸ் பாண், , பணிஸ்
வகைகளும்

- ஐஸ்பெசல் கிறீம்
- ஐஸ்சொக்
- ஐஸ்பழம்
- ஐஸ்சர்பத்

ஆகிய குளிர்பானங்களும்
எந்நேரமும் சுத்தம் சுகாதார
முறைப்படி பெற்றுக்கொள்ளலாம்

## குளிரருவி

இல; 68 கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம்.

மலர் சிறப்புற வாழ்த்துக்கள்

மங்கையரின் மனங்கவரும் சாறிகளும் ஆடவர்களுக்குரிய சேட்டிங், சூட்டிங்வகைகள் மற்றும் ஜவுளி வகைகளையும் பலடிசைன்களிற் தெரிவுசெய்திட எப்பொழுதும் வந்திடுக

# அம்பாள் சாரி சென்ரர்

இல. 11, நவீன சந்தை,
சுன்னாகம்.

யா / ஸ்கந்தவரோதயா கல்லூரி கலை வர்த்தக மாணவர் மன்றத்தின் வளர்ச்சிக்கு எமது வாழ்த்துக்கள்

# சீமாட்டி கோழிப் பண்ணை

புத்தம் புதிய புடவைவகைகள், குழந்தைகள்
பெரியோர்களுக்கான ஆடைவகைகள்
அனைத்துக்கும் நாடவேண்டிய ஒரே இடம்

# மங்கை புடவை மாளிகை

இல 8, நவீன சந்தை,
சுன்னாகம்.

வணிகநாதம் வளர எமது
வாழ்த்துக்கள்

## ஹரிஷண்

**பேக் கவுஸ் & விற்பனை நிலையம்**

சுன்னாகம்

---

மலர் சிறக்க வாழ்த்துக்கள்

## சிறி ஸ்ரோஸ்

டாக்டர். சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

---

மலர்சிறக்க வாழ்த்துகிறோம்

## ஜனா படமாடம்

பஸ்நிலையம்,
சுன்னாகம்.

---

அழகுசாதன அலங்காரப் பொருட்கள்
நூல், லேஸ், பட்டின் வகைகளும்
கோட்கவரின் நகைகள் சீக்குவின்
D. S I. Bata மற்றும் பாதணிகளும்
பெற்றுக்கொள்ளலாம்

தலைநகை வாடகைக்குப்
பெற்றுக்கொள்ளலாம்

## அலோமாஸ்

பஸ்நிலையம் முன்பாக,
சுன்னாகம்.

மலர் சிறப்புற வாழ்த்துக்கள்

## மகராசி ரெக்ஸ்

சுன்னாகம் சந்தி,
சுன்னாகம்

---

யா / ஸ்கந்தவரோதயா கல்லூரி கலை வர்த்தக மாணவர் மன்றத்தின் வளர்ச்சிக்கு எமது வாழ்த்துக்கள்

புத்தம் புதிய புடவைவகைகள், குழந்தைகள்
பெரியோர்களுக்கான ஆடைவகைகள்
அனைத்துக்கும் நாடவேண்டிய ஒரே இடம்

## ரஞ்சனாஸ்

இல 4, மத்திய சந்தை,
சுன்னாகம்.

கும். வாய்மொழி மரபாக அமையும் நாட்டார் பாடல்களிலே இப்படித் திரும்ப திரும்ப ஒரே அடிகள் அல்லது தொடர்கள் இடம் பெறுவதை இங்கு ஒப்பு நோக்கலாம் தமிழ் வீர ஊழிக்காலப் பாடல் ( *Tamil Heroic Poetry* ) என்னும் தன்னுடைய நூலிலே திரும்பத் திரும்ப இடம் பெறும் சங்கச் செய்யுட்கள் அடிகள், தொடர்கள் ஆகியன பற்றிய விரிவான விளக்கம் தரப்பட்டுள்ளது. வகைமாதிரிக்குப் பின்வரும் எடுத்துக்காட்டினை நோக்கலாம். கல்லா என்னும் பெயரெச்சத் தொடர் 35 தடவைகள் சங்கப் பாடல்களிலே திரும்பத் திரும்ப உபயோகிக்கப்பட்டுள்ளது.

கல்லா இளைஞர்
கல்லா மாந்தர்
கல்லா மறவர்
கல்லாக் கோவலர்

கிரேக்க, ஐரிஷ் மரபிலே காணப்பட்ட வாய்மொழி இலக்கியப் பண்பாடு சங்ககால இலக்கியங்களிலும் காணப்படுகின்றது என்னுங் கருத்தினைக் கைலாசபதி தன்னுடைய ஒப்பியல் இலக்கிய ஆய்வு மூலம் முன்வைத்தார்.

கைலாசபதியின் ஒப்பியல் ஆய்வு முயற்சி அவருடைய இருமகாகவிகள் என்னும் நூலுடனே தொடங்கியது. பாரதியையும் இரவீந்திரநாத்தாகூரையும் ஒப்பிட்டு இரு கவிஞர்களுடைய கவிதைகளையும் ஆராய்ந்து நோக்கி இந் நூலை அமைத்தார். ஒப்பியல் இலக்கிய ஆய்வின் தொடக்க முன்னோடிகள் என வ. வெ. சு. ஐயர், வண. பிதா. தனிநாயகம் அடிகள் க. கைலாசபதி ஆகிய மூவரையும் குறிப்பிடலாம். இம்மூவருள் கைலாசபதி மட்டுமே ஒப்பியல் இலக்கிய ஆய்வினை முதன்மைப்படுத்தித் தன்னுடைய இலக்கிய அணுகுமுறைக்கு அதனை அடிப்படையாகக் கொண்டார். பண்டைத் தமிழ் இலக்கியங்களின் சிறப்புக்களையும் தமிழ் இலக்கியப் போக்கினையும் தமிழர் பண்பாட்டினையும் நன்கு விளங்கவும், தனிப்பண்புகளை இனங்கண்டு கொள்ளவும் ஒப்பியல் அணுகுமுறை இன்றியமையாதது என்னும் உண்மையினைக் கைலாசபதி வெளிப்படுத்தினார். இத்தகைய இலக்கிய ஒப்பியல் ஆய்வு பற்றிய விளக்கங்களையும் நடைமுறைகளையும் வெளிப்படுத்துவதாக அவருடைய ஒப்பியல் இலக்கியம் என்னும் நூல் அமைகின்றது.

கைலாசபதியின் ஒப்பியல் ஆய்வு இரண்டு வழிகளிலே சென்றுள்ளதைக் காணமுடிகின்றது. திறனாய்வுத் துறையிலே ஈடுபடும் காலத்திலே கைலாசபதி மார்க்சியக் கண்டோட்டத்திற் பெரிதும் ஈடுபட்டார். இதனால், பாரதியையும் தாகூரையும் ஒப்பிட்டு எழுதிய இருமகாகவிகள் போக்கிலிருந்து வேறுபட்டார். மேற்கட்டுமான இலக்கியக் கருத்தமைவுக்கெல்லாம் அடிப்படையாக அமைவது சமூக - பொருண்மிய அமைப்பே என்னும் மார்க்சிய நோக்கிலே பண்டைத்தமிழர் வாழ்வினையும் வழிபாட்டினையும் பார்த்தார். பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும் என்னும் நூலை இவர் எழுதினார். வணிக குழாத்தின் துணைகொண்ட சமண மதச் செல்வாக்கினை நீக்கி, வெற்றி கொண்ட நிலப்பிரபுத்துவ வர்க்கத்தின் துணை கொண்ட சைவமதம் சோழப் பெருமன்னருடைய காலத்திலே சைவ சித்தாந்தத்தை முன்வைத்தது தொடர்பாகக் கைலாசபதி எழுதிய[1] ''பேரரசும் பெருந்தத்துவமும்'' என்னும் கட்டுரை பலருடைய கவனத்தை ஈர்த்ததொன்றாகும். இத்தகைய இலக்கிய ஆய்வுப் போக்கு அவருக்குப் பல எதிர்ப்புகளையும் தேடிக் கொடுத்தது. ஆனால், பண்டைத் தமிழிலக்கியத்திலும் நவீன தமிழ் இலக்கியத்திலும் நல்ல புலமை பெற்ற கைலாசபதி இவ்வொப்பியற் புலமை ஊடாக நல்லதொரு இலக்கிய மதிப்பீட்டினை இலக்கியத் திறனாய் வினைச் செய்கின்ற ஒரு நிலைப்பாட்டு வளர்ச்சிக்கு உறுதுணை ஆயினார்.

## கைலாசபதியும் திறனாய்வும்

கைலாசபதியின் ஒப்பியல் ஆய்வு நோக்கு அவரை இலக்கியத்தினைப் பல்வேறு அறிவுப் புலங்களுடன் இணைத்துப்பார்க்கும் போக்குக் வழிகாட்டியது. ஆக்க இலக்கியம் படைப்பவர்களுக்கே சமூக அறிவியல் துறைகளின் ஆய்வுப்போக்குகள் பற்றிய அறிவு பெரிதும் துணை செய்யும் என அவர் எண்ணினார். இதனால் யாழ்ப்பாண வளாகம் தொடங்கிய காலத்திலே தமிழ்த்துறை ஊடாக ''ஆக்க இலக்கியமும் அறிவியலும்'' என்னும் கருத்தரங்குத் தொடரினைத் தொடக்கி நடத்தும்படி அப்பொழுது தமிழ்த்துறைக்குப் பொறுப்பாக இருந்த என்னிடம் கூறினார். சமூகவியல், மானிடவியல், நடையியல், மொழியியல், மெய்யியல், அரசறிவியல் போன்ற துறைகள் எவ்வாறு ஆக்க இலக்கியங்களுடன் தொடர்புறுகின்றன என்பது பற்றிப் பல கட்டுரைகள் படிக்கப்பட்டன. (இக் கட்டுரைகள் பின்னர் ஆக்க இலக்கியமும் அறிவியலும், பதிப்பாசிரியர் அ. சண்முகதாஸ் என்னும் நூலாக வெளியிடப்பட்டன) எல்லாத்துறைகளிலும் பெறும் அறிவு நல்ல பகுப்பாய்வுத் திறனாய்வுக்கு வழிகாட்டும் எனக் கைலாசபதி அனுபவமூலமாக உணர்ந்து கூறினார். அவருடைய அடியும் முடியும் என்னும் நூலிலே ''புலைப்பாடியும் கோபுர வாசலும்'' என்னும் கட்டுரையிலே நந்தனாருடைய வரலாற்றின் பின்னணியினைச்சுந்தரமூர்த்திசுவாமிகளுடைய திருத்தொண்டத் தொகையிலிருந்து தொடங்கி ஈழக்கவிஞன் முருகையன் வரை பார்த்து ஆராய்கிறார். இக்கட்டுரை பற்றிப் பேராசிரியர் வி. சச்சிதானந்தன் K. Kailasapathy Commemoration Volume பக் 4 ''இக்கட்டுரை முழுவதும், சமய, இலக்கியம், அரச - சமூக வரலாறு, தொல்லியல் ஆகியவற்றிலுள்ள குற்றமற்ற அறிவின் வலுவிலிருந்து உருவாக்கிய ஒரு பகுப்பாய்வுத் திறனாய்வுக்கு நல்ல வகை மாதிரியாக அமைகின்றது '' என்று கூறியுள்ளார்.

தமிழ் இலக்கியத் திறனாய்வு பற்றிப் பெருந்தொகையான கட்டுரைகளை எழுதியுள்ளார். ''உரையும் விமர்சனமும்'' (கலைப்பூங்கா, 1961), ''பொருள் மரபும் விமர்சனக் குரல்களும்'' (எழுத்து, 1961), 'இலக்கியத் திறனாய்வு''(கல்வி 1963), ஈழத்தில் தமிழ் இலக்கியதிறனாய்வு முயற்சிகள்' (தமிழ் இலக்கிய விழாமலர், 1972) 'தற்காலத் தமிழ் திறனாய்வுப் போக்குகள்'' (தாமரை 1973), ''தற்காலத் தமிழ் இலக்கியத்தின் அடிப்படைகள்' (வானொலி மஞ்சரி 1974), ''இலக்கியத் திறனாய்வும் உணர்வு நலனும்'' (சிந்தனை, 1976), தமிழில் திறனாய்வுக் கலை'' (5ம் உலகத்தமிழ் மாநாடு மலர், 1981) ''தமிழும் விமர்சன இலக்கியமும்'' (செம்மலர், 1981), போன்ற கட்டுரைத் தலைப்புகளை வகைமாதிரிக்காக இங்கு தருகிறேன். திறனாய்வு தொடர்பாகப் பல நூல்களைக் கைலாசபதி எழுதியுள்ளார். அவை வருமாறு

1. கவிதை நயம் (இணை. இ.முருகையன்) 1970
2. இலக்கியமும் திறனாய்வும், 1972
3. திறனாய்வுப் பிரச்சினைகள், 1980
4. நவீன இலக்கியத்தின் அடிப்படைகள் 1980
5. பாரதி நூல்களும் பாடபேத ஆராய்ச்யும் 1980
6. இலக்கியச் சிந்தனைகள், 1983

ஈழத்திலிருந்து தனித்துவம் மிக்க திறனாய்வாளராகக் கைலாசபதி போற்றப் பெற்றார். தமிழ்கூறும் நல்லுலகமெல்லாம் அவருடைய பெயர் நவீன திறனாய்வுத் துறையுடன் தொடர்புபடுத்தியே நினைவு கூரப்படுகின்றது.

## நவீன தமிழ் இலக்கியம்

பண்டைய இலக்கியங்களிலே ஆழமான அறிவும் ஈடுபாடும் கைலாசபதிக்கு இருப்பினும், அவருடைய முனைப்பான சிறப்பு நோக்கு நவீன தமிழ் இலக்கியப் பக்கமே யாகும். பல்கலைக்கழகத்திலும் மாணவர்களுக்குப் பண்டைய இலக்கியங்களுடன் நவீன இலக்கியங்கள் பற்றியும் விரிவுரைகள் ஆற்றுவார். நவீன தமிழ் இலக்கியத்தின் அடிப்படைகளைத் தெளிவாகக் கட்டுரைகள், நூல்கள் மூலமாகவும் விளக்கியுள்ளார். அவர் முன்னையகால இலக்கியங்களில் மிகுந்த ஈடுபாடு கொள்வதன்காரணம் நவீனஇலக்கியங்களின் போக்கினைத் தெளிவாக விளங்கிக் கொள்வதற்காகவேயாகும். அவருடைய தமிழ் நாவல் இலக்கியம் என்னும் நூலிலே வேதநாயகம்பிள்ளையின் பிரதாப முதலியார் சரித்திரம் மாதவையரின் பத்மாவதி சரித்திரம், ராஜமையரின் கமலாம்பாள் சரித்திரம் ஆகிய முதன் மூன்று தமிழ்நாவல்களும் தமிழிலே தோன்றிய உரை நடைக் காவியங்கள் என்று கூறுவர். செய்யுளிலே அமைத்து வந்த காவிய மரபின் செல்வாக்கு நவீன உரைநடை வடிவான நாவலிலே பதிவுற்றதின் பின்னணியைக் கைலாசபதி தெளிவுறுத்துமிடத்து அவருக்கிருந்த பண்டைய இலக்கியப் புலமை எவ்வாறு நவீன இலக்கியப் போக்கைத் தெளிவுறுத்த உதவியுள்ளது என்பதை உணர முடிகின்றது.

மேலைத் தேயத்தவருடைய வருகை, ஆங்கிலக் கல்வி, வரலாறு பற்றிய புதிய உணர்வு ஆகியன எப்படித் தமிழ் இலக்கியப் போக்கினை மாற்றியமைத்துள்ளன. என்று நோக்குமிடத்திலே அவர் இன்னொரு விடயத்தினையும் அணுகினார். தமிழிலே மூலபாடத்திறானய்வு எவ்வாறு நவீனதமிழிலக்கிய விழிப்புணர்வுடன் நவீனத்துவம் பெற்றது என்பதை உணர்ந்து கொண்டார். இதனாலேதான் பல்கலைக்கழகத் தமிழ்ப் பாடவிதானத்திலே நவீன தமிழ் இலக்கியத்துக்குச் சிறப்பிடம் கொடுக்குமிடத்து, மூல பாடத் திறனாய்வு என்றொரு பயில்நெறியினையும் அறிமுகப் படுத்தினார்.

## ஈழத்துத் தமிழ் இலக்கியம்

ஈழத்தமிழருடைய இலக்கியம் என்றொரு தனிப்பாகுபாடு உருவாகி, அது மிக ஆழமாகவும் அகலமாகவும் ஆராயப்பட வேண்டும் எனக் கைலாசபதி எண்ணங் கொண்டிருந்தார். ஈழத்தின் ''இலக்கிய வழி'' என்ன என்பதைப் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை கோடிட்டுக் காட்டியதை அவர் நன்கு அறிவர். இலக்கியத்திலே எதைப்பற்றிப் பேசினாலும், அது ஈழத்திலே எப்படி இருந்தது என்பதைப் பற்றி நோக்க அவர் மறப்பதில்லை. இங்கிலாந்திலிருந்து அவுஸ்திரேலியா, அமெரிக்கா ஆகிய இடங்களுக்குச் சென்ற ஆங்கிலேயர் ஆங்கில இலக்கியம் என்ற பொது அடிப்படைக்குள்ளிருந்து விடுபட்டுக் காலவோட்டத்திலே அவுஸ்திரேலிய இலக்கியம், அமெரிக்க இலக்கியம் எனத் தமக்குத் தனித்துவமான இலக்கியங்களைப் படைக்கத் தொடங்கிய போக்கினைக் கைலாசபதி ஈழத்தமிழிலக்கியம் பற்றிக் கூறும் போது குறிப்பிடுவார். 1955 லேயே ''ஈழத்துத் தமிழ் இலக்கியம்'' (சாந்தி) என்னும் கட்டுரையினை எழுதியுள்ளார்.

கொழும்புப் பல்கலைக் கழகத்திலே தமிழ் சிறப்பு மாணவர்களுக்கு ''ஈழத்துத் தமிழ் இலக்கியம்'' என்றொரு பயில் நெறியினைப் பாடவிதானத்திலே முதன்முறையாக அறிமுகப்படுத்தினார். யாழ்ப்பாணத்திலே பல்கலைக்கழகம் தொடங்கிய போது தமிழ்ச் சிறப்பு மாணவர்களுக்கு அப்பயில் நெறியினை அறிமுகஞ் செய்ததுடன், ஈழத்து இலக்கியம் தொடர்பாக இப் பல்கலைக்கழகத்திலே பட்டப்பின் ஆய்வுகள் நிறைய மேற்கொள்ளப்பட வேண்டும் என விரும்பினார் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலிருந்து

தமிழில் முதுகலைமாணிப் பட்டத்தினை முதன் முதல் பெற்ற யோகேஸ்வரி கணேச லிங்கம், மனோன்மணி சண்முகதாஸ், சித்திரலேகா மௌனகுரு, சி. வன்னியகுலம், துரை மனோகரன் ஆகிய ஐவருமே ஈழத்து இலக்கியம், மொழி பண்பாடு தொடர்பாக ஆய்வுகளையே மேற்கொண்டார். இது தமிழ்ப் பேராசிரியராயிருந்த கைலாசபதியின் தூண்டுதலின் விளைவு என்பதில் ஐயமில்லை.

எம்முடைய நிலத்தின் பல தனித்துவமான பண்புகள் எம்முடைய இலக்கியங்களிலே பதியத் தொடங்கிய காலம் ஆறுமுக நாவலருடைய காலம் எனக் கைலாசபதி கூறுவர். ஈழத்துக்கே தனித்துவமான மொழி, பண்பாட்டுக் கூறுகள் ஆகியன எம்மவர்கள் படைத்த இலக்கியங்களைத் தமிழ் நாட்டு இலக்கியங்களினின்று வேறுபடுத்திக் காட்டுவன. எனவே, இவை தனியாக நோக்கப்படவேண்டியன என்பது அவருடைய கருத்தாகும்.

## நிறைவு

கைலாசபதிக்கு முன்னர் பேராசிரியர் வி. செல்வநாயகமே சிறந்த விமரிசகராகப் பல்கலைக் கழகத்திலே கணிக்கப்பட்டார். பேராசிரியர் செல்வநாயகத்தின் மாணவனாகத் தமிழைச் சிறப்புறப் பாடமாக அவரிடம் படிக்கும் போது தொல்காப்பியம், இலக்கிய விமர்சனம் ஆகியனவற்றைக் கைலாசபதி கற்றார். நிறைய வாசிக்கும் பழக்கத்தையுடைய கைலாசபதி வாசிப்பனவற்றை நினைவிலே வைப்பதுடன், அவை பற்றி ஆழமாகச் சிந்திப்பவருமாவார். மீசையைப் பிடுங்குகிறார் என்றால் ஆழமாகச் சிந்திக்கிறார் என எண்ணலாம். பண்டைத் தமிழ் இலக்கியம், நவீன தமிழ் இலக்கியம், இலக்கியத் திறனாய்வு, ஒப்பியல் இலக்கிய ஆய்வு, ஈழத்து இலக்கியம் என்பனவற்றிலே மிகுந்த ஈடுபாடுடையவராகப் பேராசிரியர் கைலாசபதி திகழ்ந்தார். அவர் எழுதிய பல நூல்கள் தமிழ் மொழியின் சாகாவரம் பெற்றனவாக அமையும் என்பதிலே ஐயமில்லை. இன்னும் பல ஆண்டுகளுக்குக் கைலாசபதியை மேற்கோள் காட்டாமல் நவீன இலக்கிய, திறனாய்வு இலக்கியக் கட்டுரைகள் வெளிவரமாட்டா என நம்புகிறேன். திரு. அரணமுறுவல் என்பவர் கைலாசபதி தமிழியலுக்கு ஆற்றிய பங்களிப்புப் பற்றி விரிவாக ஆராய்ந்து கலா நிதிப் பட்ட ஆய்வேட்டினை எழுதிச் சென்னைப் பல்கலைக் கழகத்திலே கலாநிதிப்பட்டம் பெற்றுள்ளார்.

---

**குத்தகை தொழிற்பாட்டை பிரதான பணியாக கொண்டியங்கும் நிறுவனங்கள் மூன்று அவை**

1) **வரையறுக்கப்பட்ட லங்கா ஒறெக்ஸ் லீசிங் கம்பனி**

2) **வரையறுக்கப்பட்ட மேக்கன்டையில் லீசிங் கம்பனி**

3) **வரையறுக்கப்பட்ட கொமர்சல் லீசிங் கம்பனி**

# இறைக் கணக்கு/ தனியுரிமைக் கட்டணக் கணக்கு
# ROYALTY ACCOUNTS

செல்வி து. அனிதா
ஆண்டு - 13
வர்த்தகப் பிரிவு

இறை என்பது பொதுவாக அரசிற்கு செலுத்தப்படவேண்டிய பங்கு என்றே கருதப்படுகிறது எனினும் கணக்கியலில் இப்பதம் விரிவான கருத்தில் பயன்படுத்தப்படுகின்றது. குறிப்பிட்ட ஒரு நபரிற்குச் சொந்தமான ஓர் உரிமையினை (இங்கு உரிமை என்பது ஒரு நபரிடமுள்ள ஆதனம் அல்லது திறமை அல்லது உற்பத்திச் சக்தி ஆகியவற்றைக் குறிக்கின்றது) பிறிதொரு நபர் தனது பயன்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கான அனுமதியினைப் பெற்றுக் கொண்டமைக்காக, அனுமதியினை வழங்கிய உரிமையின் சொந்தக்காரருக்கு செலுத்துகின்றதான ஒரு கொடுப்பனவுத் தொகை இறை எனப்படும். இதனை இன்னொரு விதத்தில் கூறுவதாயின் குறிக்கப்பட்ட ஓர் உரிமையினை பிறருக்குச் சாட்டுதல் செய்வதன் மூலம் அவ்உரிமையின் சொந்தக்காரர் பெறும் ஒரு பெறவனவு இறை எனப்படும்.

இறையானது பொதுவாக பின்வரும் சந்தர்ப்பங்களில் வழங்கப்படலாம்.

1) நிலத்திலிருந்து கனிய வளங்களை (நிலக்கரி, கனிப்பொருட்கள் போன்றன) அகழ்ந்தெடுக்கும் பொருட்டு நில உடமையாளருக்கு(நிலக்கிழார்க்கு) இறை கொடுக்கப்படும்.

2) குறிப்பிட்ட நபரிற்குச் சொந்தமான ஆக்கவுரிமையினைப் பயன்படுத்தி குறிப்பிட்ட பொருள் ஒன்றை உற்பத்தி செய்யும் சந்தர்ப்பத்தில் ஆக்கவுரிமையின் சொந்தக்காரரான கண்டுபிடிப்பாளனுக்கு இறை செலுத்தப்படும்.

3) நூல் போன்றவற்றை வெளியிடு செய்வதற்கான பதிப்புரிமை பெறப்பட்டால் இந்நிலையில் பதிப்பகத்தாரால் குறிப்பிட்ட நூலாசிரியற்கு இறை செலுத்தப்படும்.

4) இசைத்தட்டுகளில் பாடல்களைப் பதிவு செய்யும் உற்பத்தியாளர்களால் (விற்ற இசைத்தட்டுக்களின் அடிப்படையில்) பாடகருக்கு இறைசெலுத்தப்படும்.

மேற்குறிப்பிட்டவற்றிற்காக அவை உற்பத்தி செய்யப்படும் அலகுகளிற்கோ அல்லது விற்பனைசெய்யும் அலகுகளிற்கோ இறையினைக் காண்பீடு செய்யமுடியும்.

## இழிவு வாடகை அல்லது வீழ்ச்சிம வாடகை (MINIMUM RENT)

இழிவுவாடகை என்பது குறிக்கப்பட்ட உரிமையினை பெற்றுக்கொண்டமைக்காக குறிப்பிட்ட காலத்தில் செலுத்தவேண்டிய ஆகக்குறைந்த இறையின் பெறுமதியைக் குறிக்கின்றது. அதாவது, இறையானது உற்பத்தி விற்பனை அளவுகளின் அடிப்படையில் கணிப்பிடப்படுவதனால் உற்பத்தி

விற்பனை அளவுகள் மாறுபடுவதற்கேற்ப சிலகாலப்பகுதியில் இறைத்தொகை குறைவாகவும், சிலகாலப்பகுதியில் உயர்வாகவும் இருக்கும். இதனால் இறைபெறுவோனின் வருமானம் பரந்தளவில் தளம்பல் உற்றுக் காணப்படும். இதனைத் தவிர்த்து நிலையான வருமானத்தை உரிமையாளன் பெற வகைசெய்யும் முகமாகவே இழிவுவாடகை நிர்ணயம் செய்யப்படுகின்றது. ஆயினும் தீர்மானிக்கப்பட்ட இழிவு வாடகையிலும் பார்க்க கணிப்பீடு செய்யப்பட்ட இறை உயர்வாக இருப்பின் இறையினையே செலுத்துதல் வேண்டும்.

## வேலைக் குறைவு அல்லது தொழிற் குறைவு (SHORT WORKING)

குறிப்பிட்ட ஒருடத்திற்குரிய வீழ்ச்சிம வாடகையிலும் பார்க்க கணிப்பீடு செய்யப்பட்ட தனியுரிமைக் கட்டணமானது குறைவாக இருப்பின் வித்தியாசம் வேலைக் குறைவு எனப்படும். வேலைக்குறைவானது இறை செலுத்துபவனுக்கு நட்டமாதலால் அதனை மீள எடுப்பது குறித்து உடன்படிக்கை ஏற்படுத்தப்படலாம். இதன்படி மீள் எடுக்கக்கூடிய வேலைக்குறைவு உடன்படிக்கையில் குறிப்பிட்டகால எல்லையினுள் இழிவு வாடகைக்கு மேல்வரும் தனியுரிமைக் கட்டணத்திலிருந்து மீள் எடுக்கலாம். இவ்வாறு மீள் எடுக்கக்கூடிய வேலைக்குறைவு. ஒரு கற்பனைச் சொத்தாக கருதப்படும். எதிர்காலத்தில் மீள் எடுக்க முடியாத வேலைக்குறைவு நட்டமாதலால் இலாப நட்டக் கணக்கிற்கு மாற்றப்படும் வேலைக் குறைவானது இறை செலுத்துபவரைப் பொறுத்து ஈடுசெய்யக்கூடிய வேலைக் குறைவு எனவும் இறைபெறும் உரிமையாளனைப் பொறுத்து அனுமதிக்கக் கூடிய வேலைக்குறைவு எனவும் அழைக்கப்படும்.

குறிப்பிட்ட ஆண்டுகளுக்குரிய வீழ்ச்சிம வாடகை 200000 ரூபாவாகவும், தனியுரிமைக் கட்டணம் 150000 ரூபாவாகவும் அமையின் அவ்வாண்டுக்குரிய வேலைக் குறைவு 50000 ரூபாவாக அமைகின்றது.

இறை கொடுக்கல் வாங்கல் தொடர்பில் இருசாராரின் ஏடுகளில் பதிவுகள் இடம் பெறும்.

1) இறை கொடுப்பவர் ஏட்டில் பதிவுகள்
2) இறைபெறும் உரிமையாளன் ஏட்டில் பதிவுகள்

இறை கொடுப்பவர் ஏட்டில் பதிவுகளைச்செய்யும் போது பிரதானமாக பி. வ. மூன்று வகையான கணக்குகள் பராமரிக்கப் படும்.

1) கொடுக்குமதி இறைக்க/கு
2) உரிமையின் சொந்தக்காரர்க/கு
3) ஈடுசெய்யக்கூடிய வேலைக்குறைவுக்க/கு

இறை கொடுப்பவர் ஏட்டில் இறை கொடுக்கல் வாங்கல் தொடர்பான கணக்குப் பதிவுகள் வருமாறு.

1) கணிப்பீடு செய்யப்பட்ட தனியுரிமைக் கட்டணத்திற்கு ஏற்பாடு செய்யும் போது
   கொடுக்குமதி இறைக/கு வரவு
   உரிமையின் சொந்தக்காரர் க/கு செலவு
   (இறை உரிமையாளர்)

2) வேலைக்குறைவு ஏற்படும் சந்தர்ப்பத்தில் அதற்கு ஏற்பாடு செய்யும்போது
   ஈடுசெய்யக்கூடிய வேலைக்குறைவுக் க/கு வரவு
   உரிமையின் சொந்தக்காரர் க/கு செலவு

3) உரிமையின்சொந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்யும் போது
   உரிமையின் சொந்தக்காரர்க/கு வரவு
   காசு / வங்கிக்க/கு செலவு

4) வேலைக்குறைவை மீள எடுக்கும் சந்தர்ப்பத்தில்
உரிமையின் சொந்தக்காரர் க/கு வரவு
ஈடு செய்யக்கூடிய வேலைக்குறைவுக் க/கு செலவு

5) மீள் எடுக்கமுடியாத வேலைக்குறைவை இலாப நட்டக்க/கு மாற்றும் போது
இலாப நட்டக்க / கு வரவு
ஈடு செய்யக்கூடிய வேலைக்குறைவுக் க/கு / செலவு

6) தனியுரிமைக்கட்டணக்க/கு மீதியை; உற்பத்தி அலகுகளில் கணிக்கப்பட்டிருப்பின் உற்பத்திக்க/குகிற்கும் விற்பனை அலகுகளில் கணிக்கப்பட்டிருப்பின் இ/ந க/குற்கும் மாற்றும் போது
உற்பத்திக் க/கு / இலாப நட்டக் க/கு வரவு
கொடுக்குமதி இறைக்க/கு செலவு

இறை பெறும் உரிமையாளன் ஏட்டில் பதிவுகளை செய்யும் போது பிரதானமாக பின்வரும் கணக்குகள் தயாரிக்கப்படும்.

1) வருமதி இறைக்க/கு
2) இறை கொடுப்போன் க/கு
3) அனுமதிக்கக்கூடிய வேலைக்குறைவுக் க/கு

இறைபெறும் உரிமையாளன் ஏட்டில் கணக்குப்பதிவுகள் வருமாறு

1) கணிப்பீடு செய்யப்பட்ட தனியுரிமைக் கட்டணத்திற்கு ஏற்பாடு செய்யும் போது
இறை செலுத்துவோன்க/கு வரவு
வருமதி இறைக்க/கு செலவு

2) வேலைக்குறைவு ஏற்படும் சந்தர்ப்பத்தில் அதற்கு ஏற்பாடு செய்யும் போது
இறை செலுத்துவோன்க/கு வரவு
அனுமதிக்கக்கூடிய வேலைக்குறைவுக் க/கு செலவு

3) இறை செலுத்துவோனிடம் பணம் பெறும் போது
காசு/வங்கிக் க/கு வரவு
இறைசெலுத்துவோன்க/கு செலவு

4) வேலைக்குறைவை மீள் எடுக்க அனுமதிக்கும் சந்தர்ப்பத்தில்
அனுமதிக்கக்கூடிய வேலைக்குறைவுக் க/கு வரவு
இறை செலுத்துவோன் க/கு செலவு

5) மீள் எடுக்க அனுமதிக்காத வேலைக் குறைவை இ/நக/கிற்கு மாற்றும்போது
அனுமதிக்கக்கூய வேலைக்குறைவுக்க/கு வரவு
இலாபநட்டக்க/கு செலவு

6) வருமதி இறைக்க/கு மீதியை இ/ந க/கிற்கு மாற்றும்போது
வருமதி இறைக்க/கு வரவு
இலாபநட்டக்க/கு செலவு

**உதாரணம்:-**

நவீனமயமான கைக்கடிகாரம் ஒன்றை உற்பத்தி செய்யும் ஆக்கவுரிமை ஐங்கரன் என்பவருக்குச் சொந்தமாக இருந்தது. இவ் ஆக்கவுரிமையைப் பயன்படுத்தி குறிப்பிட்ட கைக்கடிகாரத்தை உற்பத்தி செய்யும் அனுமதியினை வரையறுத்த கஸ்தூரி கம்பனி பின்வரும் நிபந்தனைகளின் கீழ் பெற்றுக் கொண்டது.

1) ஒவ்வொரு ஆண்டிலும் உற்பத்தியாகும் கைக்கடிகாரங்களுக்கு தனியுரிமைக் கட்டணம் பின்வருமாறு கணிக்கப்படும்.
முதல் உற்பத்தியாகும் 600 கைக்கடிகாரத்திற்கும் ஒன்றுக்கு 100 ரூபா வீதம்

அடுத்து உற்பத்தியாகும் 400 கைக்கடிகாரத்திற்கும் ஒன்றுக்கு 80ரூபா வீதம் எஞ்சிய உற்பத்தியாகும் கைக்கடிகாரங்களுக்கு ஒன்றுக்கு 50 ரூபா வீதம்

2) ஆண்டுக்குரிய இழிவுவாடகை 125000 ரூபா ஆகும்.

3) வேலைக் குறைவுகள் நிகழ்ந்த ஆண்டினைத் தொடர்ந்து வந்த இரண்டு ஆண்டுகளில் வேலைக்குறைவினால் ஏற்பட்ட இழப்புக்கள் மீளப்பெறத்தக்கவை.

• கடந்த 4 ஆண்டுகளில் இடம்பெற்ற வெளியீடு பின்வருமாறு

| ஆண்டு | கைக்கடிகாரம் (எண்ணிக்கை) |
|---|---|
| 1990 | 1200 |
| 1991 | 1500 |
| 1992 | 2100 |
| 1993 | 2500 |

சம்பந்தப்பட்ட ஆண்டின் இறுதியில் எல்லாக் கொடுப்பனவுகளும் செய்யப்பட்டன.

• மேலே தரப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்களைக் காட்டுவதற்கான பதிவுகளை இருசாராரின் புத்தகங்களிலும் காட்டுக.

## செய்கைகள்

90 ஆண்டுக்கான தனியுரிமைக் கட்டணக்கணிப்பு

1200 —
- 600 × 100 = 60000
- 400 × 80 = 32000
- 200 × 50 = 10000

102000

90 ம் ஆண்டு வேலைக் குறைவுக் கணிப்பு

| | |
|---|---|
| வீழ்ச்சிம வாடகை | 125000 |
| கொடுக்குமதி இறை | 102000 |
| வேலைக் குறைவு | 23000 |

(கணக்குகள் மறுபக்கத்தில்)

## உபகுத்தகை (SUB LEASE)

உடமையாளனிடமிருந்து குறிக்கப்பட்ட பொருள் ஒன்றை உற்பத்தி செய்வதற்கான உரிமையினைப் பெற்றுக்கொண்ட பிரதான குத்தகையாளன் (முதலாவது குத்தகையாளன்) அதனை ஒப்பந்தத்தின் மூலம் பெற்ற அதிகாரத்தை கொண்டு இறை பெறும் நோக்குடன் உபகுத்தகையாளன் (2வது குத்தகையாளன்) ஒருவருக்கு வழங்குவானாயின் அதனை உபகுத்தகை என அழைக்கப்படும் அதாவது பிரதான குத்தகையாளனுக்கும் உபகுத்தகையாளனுக்குமிடையிலுள்ள தொடர்பே உபகுத்தகை எனப்படும்.

### பிரதான குத்தகை ஒப்பந்தம்

இறை தொடர்பான கொடுப்பனவுகள் எவ்வாறு மேற்கொள்ளப்படல் வேண்டும் என உடமையாளனுக்கும் பிரதான குத்தகையாளனுக்குமிடையே ஏற்படுத்தப்படும் ஒப்பந்தமே பிரதான குத்தகை ஒப்பந்தமாகும்.

### உபகுத்தகை ஒப்பந்தம்

இறை கொடுப்பனவுகள் தொடர்பான நடைமுறைகள் பற்றி பிரதான குத்தகையாளனுக்கும் உபகுத்தகையாளனுக்குமிடையே ஏற்படுத்திக்கொள்ளப்படும் ஒப்பந்தமே உபகுத்தகை ஒப்பந்தம் எனப்படும்.

பிரதான குத்தகையாளன் உபகுத்தகைக்கு வழங்கும் சந்தர்ப்பத்தில், பிரதான குத்தகையாளனது உற்பத்தி அளவுக்கும் உப குத்தகையாளன் உற்பத்தி அளவுக்கும்

(தொடர்ச்சி 26ம் பக்கத்தில்)

**கஸ்தூரியின் ஏடு**

**கொடுக்குமதி இறைக்க/கு**

| | | | |
|---|---|---|---|
| 90 ஐங்கரன் | 102000 | உ/திக'கு | 102000 |
| 91 ஐங்கரன் | 117000 | ,, | 117000 |
| 92 ஐங்கரன் | 147000 | ,, | 147000 |
| 93 ஐங்கரன் | 167000 | ,, | 167000 |

**ஈடு செய்யக்கூடிய வேலைக்குறைவுக்க/கு**

| | | | |
|---|---|---|---|
| 90 ஐங்கரன் | 23000 | மீ/செ | 23000 |
| 91 மீ/வ | 23000 | மீ/செ | 31000 |
| ஐங்கரன் | 8000 | | |
| | 31000 | | 31000 |
| 92 மீ/வ | 31000 | ஐங்கரன் | 22000 |
| | | இ/ந க/கு | 1000 |
| | | மீ செ | 8000 |
| | 31000 | | 31000 |
| 93 மீ/வ | 8000 | ஐங்கரன் | 8000 |

**ஐங்கரனின் ஏடு**

**வருமதி இறைக்க/கு**

| | | | |
|---|---|---|---|
| 90 இ/ந க/கு | 10200 | 90 கஸ்தூரி | 102000 |
| 91 இ/ந க/கு | 117000 | 91 கஸ்தூரி | 117000 |
| 92 இ/ந க/கு | 147000 | 92 கஸ்தூரி | 147000 |
| 93 இ/ந க/கு | 167000 | 93 கஸ்தூரி | 167000 |

**அனுமதிக்கக்கூடிய வேலைக்குறைவுக்க/கு**

| | | | |
|---|---|---|---|
| மீ/செ | 23000 | 90 கஸ்தூரி | 23000 |
| மீ/செ | 31000 | 91 மீ/வரி | 23000 |
| | | கஸ்தூரி | 8000 |
| | 31000 | | 31000 |
| கஸ்தூரி | 22000 | 92 மீ/வ | 31000 |
| இ/ந க/கு | 1000 | | |
| மீ/செ | 8000 | | |
| | 31000 | | 31000 |
| கஸ்தூரி | 8000 | 93 மீ/வ | 8000 |

**ஆக்கவுரிமையாளன் (ஐங்கரன்) க/கு**

| | | | |
|---|---|---|---|
| காசு | 125000 | 90 கொடுக்குமதி இறை | 102000 |
| | | ஈ.செ வேலைக் குறைவு | 23000 |
| | 125000 | | 125000 |
| காசு | 125000 | 91 கொடுக்குமதி இறை | 117000 |
| | | ஈ செ வேலைக் குறைவு | 8000 |
| | 125000 | | 125000 |
| ஈ செ.வேலைக் குறைவு | 22000 | 92 கொடுக்குமதி இறை | 147000 |
| காசு | 125000 | | |
| | 147000 | | 147000 |
| ஈ செ வேலைக் குறைவு | 8000 | 93 கொடுக்குமதி இறை | 16 000 |
| காசு | 159000 | | |
| | 167000 | | 167000 |

**கஸ்தூரி க/கு**

| | | | |
|---|---|---|---|
| 90 வருமதி இறை | 102000 | காசு | 125000 |
| அ. கூ. வேலைக் குறைவு | 23000 | | |
| | 125000 | | 125000 |
| 91 வருமதி இறை | 117000 | காசு | 125000 |
| அ.கூ. வேலை குறைவு | 8000 | | |
| | 125000 | | 125000 |
| 92 வருமதி இறை | 147000 | அ. கூ. வேலை குறைவு | 22000 |
| | | காசு | 125000 |
| | 147000 | | 147000 |
| 93 வருமதி இறை | 167000 | அ.கூ. வேலை குறைவு | 8000 |
| | | காசு | 159000 |
| | 167000 | | 167000 |

பிரதான குத்தகை ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட அலகுக்கான இறைக்கட்டணத்தின் அடிப்படையில் கணிப்பீடு செய்யப்பட்டு வரும் திரண்டதொகையை பிரதான குத்தகையாளன் உடமையாளனுக்கு செலுத்துதல் வேண்டும்.

பிரதான குத்தகையாளன் புத்தகத்தில் உபகுத்தகையாளனிடமிருந்து வரவேண்டிய இறையானது (வருமதி இறை) வருமானமாக கருதப்படுவதுடன், உபகுத்தகையாளன் உற்பத்தி உரிமைக்காக பிரதான குத்தகையாளனால் செலுத்தப்படும் இறையானது செலவாக கருதப்படும். எனவே உபகுத்தகையினால் ஏற்படும் இலாபம் நட்டத்தை கணிப்பதற்கு வருமானமும் செலவும் முறையே இறை வருமதிக்கணக்கில் செலவாகவும் வரவாகவும் பதியப்படும் செலவுகள் அது சம்பந்தமான வருமானத்திற்கெதிராக சரிபார்க்கப்படுவதுடன் ஒதுக்கங்களும் செய்யப்படும் ஏதாவது வித்தியாசம் இருந்தால் அவை இக்கணக்கின் மீதியாக கீழே கொண்டு செல்லப்படும்.

இழிவு வாடகை நிர்ணயம், வேலைக் குறைவு ஈடுசெய்தல் போன்றன அவரவர் ஒப்பந்தத்தில் கூறப்பட்டபடி வரையறுக்கப்பட்டதாக இருக்கும்.

உபகுத்தகையால் மீட்புச் செய்யப்படும் வேலைக்குறைவு முதலாவது குத்தகையாளன் கணக்கில் பொறுப்பாக காட்டப்படும்.

**உதாரணம்**

புதிய வகையான கணனி ஒன்றின் ஆக்கவுரிமையாளரான இராமன் கணனிகளை உற்பத்தி செய்து விற்பனை செய்வதற்கான அனுமதியினை ராஜா என்பவருக்கு பின்வரும் நிபந்தனைகளின் கீழ் 01 - 01 - 90ல் வழங்கினார்.

I) உற்பத்தி செய்யப்படும் ஒவ்வொரு கணனிக்கும் இறை 25/-

II) ஆண்டுக்கான ஆகக்குறைந்த இறை 100000/-

III) வேலைக்குறைவு ஏற்படின் முதல் இரண்டு ஆண்டுகளில் மட்டும் ஈடு செய்யப்படலாம்

அதே திகதியில் ராஜா, சுஜாதா என்பவருக்கு அதே நோக்கத்திற்காக பின்வரும் நிபந்தனைகளின் கீழ் ஓர் உபகுத்தகையை வழங்கினார்.

I) உற்பத்தி செய்யப்படும் ஒவ்வொரு கணனிக்கும் இறை 50/

II) ஆண்டுக்கான இழிவு வாடகை 100,000/-

III) வேலைக்குறைவு ஏற்படின் தொடர்ந்து வரும் முதலாவது ஆண்டில் மட்டும் ஈடு செய்யலாம்.

கடந்த 3 ஆண்டுகளில் உற்பத்தி செய்யப்பட்ட கணனிகளின் விபரம் வருமாறு

| ஆண்டு | ராஜாவின் உ/தி | சுஜாதாவின் உ/தி |
|---|---|---|
| 1990 | 2000 | 1500 |
| 1991 | 2400 | 2000 |
| 1992 | 2400 | 2200 |

ராஜாவும் சுஜாதாவும் கொடுப்பனவுகளை உரிய நேரத்தில் செலுத்தினர் எனக் கொண்டு ராஜாவின் புத்தகத்தில் தேவையான பேரேட்டு க/குகளை தயார் செய்க.

ராஜாவின் ஏடு

### கொடுக்குமதி இறைக்க/கு

| | | | |
|---|---|---|---|
| 90 இராமன் | 50000 | இ/நக/கு | 50000 |
| 91 இராமன் | 60000 | ,, | 60000 |
| 92 இராமன் | 60000 | ,, | 60000 |

### ஈடுசெய்யக்கூடிய வேலைக்குறைவுக்க/கு

| | | | |
|---|---|---|---|
| 90 இராமன் | 12500 | மீ/செ | 12500 |
| 91 மீ/வ | 12500 | இராமன் | 10000 |
| | | இ/ந க/கு | 2500 |
| | 12500 | | 12500 |

### வருமதி இறைக்க/கு

| | | | |
|---|---|---|---|
| 90 இராமன் | 37500 | 90 சுஜாதா | 75000 |
| இ/நக/கு | 37500 | | |
| | 75000 | | 75000 |
| 91 இராமன் | 50000 | | |
| இ/நக/கு | 50000 | 90 சுஜாதா | 100000 |
| | 100000 | | 100000 |
| 92 இராமன் | 55000 | | |
| இ/நக/கு | 55000 | 93 சுஜாதா | 110000 |
| | 110000 | | 110000 |

### அனுமதிக்கக்கூடிய வேலைக்குறைவுக்க/கு

| | | | |
|---|---|---|---|
| மீ / செ | 25000 | 90 சுஜாதா | 25000 |
| இ/நக/கு | 25000 | 91 மீ/வ | 25000 |

### இராமன் க/கு

| | | | |
|---|---|---|---|
| வங்கி | 110000 | 90 கொடுக்குமதி இறை | 50000 |
| | | வ. இறை | 37500 |
| | | ஈ.செ.வேலைக் குறைவு | 12500 |
| | 100000 | | 100000 |
| ஈ. வேலைக் குறைவு | 10000 | 91 கொடுக்குமதி இறை | 60000 |
| வங்கி | 100000 | வ இறை | 50000 |
| | 110000 | | 110000 |
| வங்கி | 115000 | 92 கொடுக்குமதி இறை | 60000 |
| | | வ. இறை | 55000 |
| | 115000 | | 115000 |

### சுஜாதா க/கு

| | | | |
|---|---|---|---|
| 90 வருமதி இறை | 75000 | வங்கி | 100000 |
| அ. கூ. வேலைக் குறைவு | 25000 | | |
| | 100000 | | 100000 |
| 91 வருமதி இறை | 100000 | வங்கி | 100000 |
| 92 வருமதி இறை | 110000 | வங்கி | 110000 |

**Reference:**


1) Spicer and pegler's Book Keeping and Accounts By: D. W. Beckett

2) கணக்கியல் திருத்தப்பட்ட ஆசிரியர் கை நூல்


3) கணக்கியல் சுருக்கம் III
By. வே. அழகேசன்

4) கணக்கியல் கோட்பாடுகள்
By. இ. இரட்ணம்

# போக்குவரத்தும் அதன் அண்மைக்கால மாற்றங்களும்

செல்வன் யோ. பிரபானந்தன்
ஆண்டு - 13
வர்த்தகப் பிரிவு

ஆதிகாலத்தில் மனிததேவைகள் குறைவாக இருந்தது அப்போது அவர்களது தேவையும் குறைவாக காணப்பட்டது. ஆனால் தற்காலத்தில் சனத்தொகை அதிகரிப்புக்கு ஏற்ப அவர்களின் தேவைகளும் பெருகி வருகின்றன. இதனால் மக்கள் ஓரிடத்தில் இருந்தவாறே தமது தேவைகளை பூர்த்தியாக்க முடியாது உள்ளது. இவ்வாறு அவர்களது தேவைகளை அறிந்து உற்பத்தி நடைபெறுகின்ற வேளையில் அவ் உற்பத்திகளை தேவைக்கு ஏற்ப நகர்த்தவும் மக்கள் ஓரிடத்தில் இருந்து இன்னோர் இடத்துக்கு செல்வதற்கும் போக்குவரத்து அவசியமானதாகிறது. எனவே போக்குவரத்து என்பது பொருட்களையும் ஆட்களையும் ஓரிடத்தில் இருந்து இன்னோர் இடத்துக்கு எடுத்துச்செல்லல் எனப் பொருள்படும். தற்காலத்தில் இப்போக்குவரத்தானது வியாபாரத்தை சரிவர நடத்துவதற்கு பிரதான துணைநிலைச் சேவையாக விளங்குகிறது. போக்குவரத்து அவற்றின் மார்க்கங்களுக்கு ஏற்ப பின்வருமாறு வகைப்படுத்திவிட முடியும்.




மேற் கூறப்பட்ட வகையில் இவற்றை வகைப்படுத்தினாலும் அவை நடைபெறுகின்ற எல்லைகளுக்கு ஏற்ப உள்நாட்டு போக்குவரத்து வெளிநாட்டு போக்குவரத்து என வகைப்படுத்தி விடமுடியும். தெரு, புகையிரதம், கால்வாய், ஆறு, உள்நாட்டு விமானப் போக்குவரத்து என்பன உள்நாட்டிலும் கடல் சர்வதேச போக்குவரத்து என்பன வெளிநாட்டு போக்கு வரத்துடன் தொடர்புபட்டதாக அமையும். எனினும் எமது நாட்டில் கால்வாய், ஆறு, உள்நாட்டு விமானங்கள் என்பவற்றின் பாவனைகளின் அளவுகுறைந்த அளவிலேயே காணப்படுகின்றது. இப்போக்குவரத்து, எல்லா இடங்களிலும் கிடையாமை எல்லா வகையான பொருட்களையும் நகர்த்த முடியாமை, எந்தநேரமும் நடத்த முடியாமை போன்ற பிரதி கூலங்களைக் கொண்டு காணப்படுவதால் ஆகும் இருந்த போதும் ஏனைய போக்குவரத்துக்கள் மிகப் பிரபல்யமடைந்து வருகின்றது. இதன் காரணத்தினாலேயே காலத்துக்கு காலம் புதிய மாற்றங்களை செய்து போக்குவரத்து விருத்தி செய்யப்பட்டு வருகின்றது.

1) **தெருப் போக்கு வரத்து** என்பது தரைப் போக்குவரத்தில் முதன்மை பெறுகின்றது.

● இன்றைய அறிமுகம் ●

நவ நாகரிகத்திற்கேற்ப ஆடைகள்
தைத்துப் பெற்றுக் கொள்ள

சிற்றிபோய்
ரெயிலர்ஸ்

181, சிவன்பண்ணை வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

★ நாளைய நாகரீகம் ★

ஸ்ரீ கிருஸ்ணபவான்
சைவ உணவகம்

இல. 171 (37) கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

மலர் சிறப்புற மனப்பூர்வமான
நல்லாசிகள்

YARL TRADES CENTAR
Agents For Bata
11, Modern Market Hospital Road
JAFFNA.

KALYANI
CREAM HOUSE
73, KASTURIAR ROAD
JAFFNA.

மலர் சிறப்புறமனப்பூர்வமான
நல்லாசிகள்

தரமான கலப்படமற்ற
எரிபொருள்களுக்கு
நாடவேண்டியதோர் ஸ்தாபனம்

## கீதா
## எரிபொருள் விற்பனை நிலையம்

காங்கேசன்துறை வீதி,
சுன்னாகம்.

யா / ஸ்கந்தவரோதயா கல்லூரி
மன்ற வளர்ச்சிக்கு எமது
வாழ்த்துக்கள்.

- விளம்பரபோட்
- போஸ்ரர்
- லேடிஸ்டிசையின்
- றபர் சீல்
- சினிமா கினைட்
- சில்க்ஸ்கிறீன்
- பிளாஸ்ரிக் நேம் போட் நம்பர்
- பிளேட்
- புளொக் மேக்கிங்

அனைத்தும் செய்து கொள்ள
நீங்கள் நாடவேண்டிய இடம்

## செல்வம் ஆட்ஸ்

சுன்னாகம்.

வணிகநாதம் வாழ்க வாழ்கவென்று
வாழ்த்துகின்றோம்

❋ கறுப்பு - வெள்ளை ❋
❋ கலர் ❋
படப்பிடிப்பாளர்கள்

## பிறின்ஸ் ஸ்ருடியோ

கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம்.

யா / ஸ்கந்தவரோதயா கல்லூரி
கலை வர்த்தக மாணவர் மன்ற
வளர்ச்சிக்கு எமது மனமுவந்த
வாழ்த்துக்கள்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற
செல்வம்.

## சக்தி மருந்தகம்

கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம்.

மலர் சிறப்புற மனப்பூர்வமான வாழ்த்துக்கள்;

நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு
சிறந்த ஸ்தாபனம்

22 கரட் தங்க நகைகள்
ஓடருக்கு உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்.

# ஞான துர்க்கா நகை மாளிகை

தங்கப்பவுண் நகைவியாபாரம்

**218H கஸ்தூரியர் வீதி,**

**யாழ்ப்பாணம்.**

வணிகநாதம் சிறக்க எமது நல்லாசிகள்

பாண், பணிஸ் வகைகள், கேக் ஐசிங், பிஸ்கட் வகைகள்
என்பவற்றை சிறந்த முறையில்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

**சகிலா பேக் கவுஸ்**

● திருமண வைபவங்கள், பிறந்ததான் வைபவங்கள், பூப்புனித நீராட்டுவிழா வைபவங்கள் என்பவற்றிற்கான கேக், ஐசிங் ஓடருக்குச் சிறந்த முறையில் பெற்றுக் கொள்ள

# சகிலா பேக் ஹவுஸ்

இல. 141, கே. கே. எஸ். வீதி,

**சுன்னாகம்.**

உரிமையாளர்
**K. பாஸ்கரன்**

மலர் சிறப்புற மனப்பூர்வமான வாழ்த்துக்கள்;

முகூர்த்தப் பட்டுப் பிடவைகளுக்கு
பெயர் பெற்ற ஸ்தாபனம்

# காவேரி சில்க்ஸ்

கிளை:

## காவேரி ரெக்ஸ் சென்ரர்

48, பெரியகடை, 181, நவீன சந்தை,
யாழ்ப்பாணம். யாழ்ப்பாணம்.

---

தமிழீழத்தின் நல்வாழ்விற்கு வணிகநாதம் வளம் செய்ய
வாழ்த்துகின்றோம்.

சுகாதார முறையில் தயாரிக்கப்படும்
பாண், பனிஸ்வகைகள், கேக்வகைகள் போன்றவற்றை நிதானமான விலையில் பெறுவதற்கும், திருமண, பிறந்தநாள், பூப்புனித நீராட்டு விழாக்களுக்குரிய ஐசிங் கேக் வகைகளை ஓடருக்குச் செய்து கொள்ளவும் நாடவேண்டிய இடம்

# சுதன் பேக்கவுஸ்

டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

அமைக்கப்பட்டதெருக்களினூடாக சாதாரண போ + துசாதனங்களை பயன்படுத்தி பொருட்களையும் ஆட்களையும் எடுத்துச் செல்லும் செயல்பாட்டினை குறிக்கும். இப் போக்கு வரத்து ஏனைய போக்கு வரத்திலும் அபி விருத்தி அடைந்ததற்கான காரணங்களாக;

1) எந்தநேரத்திலும் எந்த இடத்துக்கும் போக்குவரத்தை மேற்கொள்ள முடியும்.

2) பாதைகளுக்கு ஏற்ப போக்குவரத்து சாதனங்கள் கிடைத்தல்.

3) அரசு கடன்வசதி வரிச்சலுகை என்பவற்றின் மூலம் பெருமளவு வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டமை.

4) வீதிப் போக்குவரத்தில் தனியார் போட்டியிட்டு சிறந்த சேவையை ஆற்றுதல்.

போன்ற பல காரணங்களால் தெருப் போக்குவரத்து பிரபல்யம் அடைகிறது. இப் போக்குவரத்துக்கு பொறுப்பாக பல அமைப்புக்கள் காணப்படுவதோடு அவை ஒவ்வொன்றும் பல பணிகளை புரிகின்றது. அவற்றில்

**1) வீதி அபிவிருத்தி அதிகார சபை**

இது பெருந்தெருக்கள் திணைக்களத்திற்கு பதிலாக உருவாக்கப்பட்டு பெருந்தெருக்களை அமைத்தல், பராமரித்தல், பாலங்களை அமைத்தல் பராமரித்தல், வீதிகளுக்கு அருகில் நடைபாதைகளை அமைத்தல் போன்ற பல பணிகளை புரிகிறது.

**2) மோட்டார் போக்குவரத்தாளர் திணைக்களம்**

இது இலங்கையின் மோட்டார் போக்குவரத்துக்கு பொறுப்பாக காணப்படும் அமைப்பாகும். இதனை கட்டுப்படுத்துபவராக மோட்டார் வாகன பதிவாளர் காணப்படுவர். இவற்றின் பணிகளாக

1) வாகனங்களை பரிசீலித்து பதிவு செய்தல்.

2) வாகனங்களின் உரிமைப் பதிவேட்டை பராமரித்தல்

3) வாகனங்களின் உரிமைகளை மாற்றிக் கொடுத்தல்.

4) வாகனங்களின் வருடாந்த அனுமதிப் பத்திரம் வழங்குதல்.

5) சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குதல். போன்றவற்றை குறிப்பிடமுடியும்.

**3) மோட்டார் போக்குவரத்தாளர் சங்கம்**

இது மோட்டார் வாகனசாரதி அனுமதிப் பத்திர முடையோரை அங்கத் தவராக கொண்டு மோட்டார் வாகன உடைமையாளர் நலன்களை பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டு பின்வரும் செயற்பாடுகளை புரிகின்றது.

1) சர்வதேச சாரதி அனுமதி பத்திரம் வழங்குதல்.

2) பாதைகளின் தடை ஏற்பட்டிருப்பின் சாரதிகளுக்கும், பயணிகளுக்கும் தெரியப்படுத்தல்.

3) வீதிகளின் நிலமை பற்றி வீதிப் பொலிசாருக்கு தெரியப் படுத்தல்.

4) வாகனங்களின் பெறுமதியை மதிப்பிடுதல்.
போன்றவற்றை மேற் கொள்கின்றன.

**4) தேசிய போக்குவரத்து ஆணைக்குழு**

இது பயணிகளுக்கான போக்குவரத்தினை தரமுயர்த்தும் நோக்குடன் பின்வரும் பணிகளை புரிகின்றது.

1) சாரதிகளின், வாகனங்களின் தகைமைகளை வரையறுத்தல்.

2) அனுமதி பத்திரக்கட்டணம் புதுப்பித்தற் கட்டணம் என்பவற்றை தீர்மானித்தல்

3) பயணிகளுக்கான போக்குவரத்துக்கு அனுமதி வழங்குவோருக்கு நியதிகளை பிறப்பித்தல்.

4) குறிப்பிட்ட பகுதியில் பயணிகளுக்கான போக்குவரத்து நடைபெற அனுமதி வழங்கல்.

என்ற பணிகளையும்

**5) தனியார் பஸ் போக்குவரத்து அமைச்சு**

இது தனியார் பஸ் போக்குவரத்தின் நடைமுறைகளை கண்காணிக்கவெனவும் கட்டுப்படுத்த வெனவும் அறிமுகப்படுத்திய அமைப்பு

1) தனியார் பஸ் போக்குவரத்து தொடர்பான சட்டங்கள் இயற்றுதல்.

2) தனியார் பஸ் சேவையில் ஈடுபடு வதற்கு வாகனங்களை அனுமதித்தல்

3) தனியார் பஸ் சேவைக்கான புதிய பாதைகளை அனுமதித்தல்.

போன்றபல செயல்பாடுகளை ஆற்றி வருகின்றது இவ்வாறு இவ் அமைப்புக்களி னால் வீதிப் போக்குவரத்துக்கு பல பணிகளை ஆற்றும்போது **தரைப் போக்குவரத்து தொடர்பாக அண்மைக் காலங்களில் புதிய மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளது. அவையாவன**

1) சர்வதேச வீதிக் குறியீடுகள் அறிமுகம் செய்தல்

2) இலங்கை போக்குவரத்து சபை மக்கள் மயமாக்கப்பட்டு சேவைகள் விஸ்தரிக் கப்பட்டன.

3) புதிய வாகனங்களின் இறக்குமதிக்கு நிதியுதவி, வரிசலுகை போன்றவை அளித்தமை.

4) வாகனங்களை இலகுவில் இனம் காண வேறுபட்ட நிற அளவுகளில் இலக்கத் தகடுகள் அறிமுகம் செய்தமை.

5) நெடுஞ்சாலைகள் வெளிநாட்டு உதவி யுடன் அபிவிருத்தி செய்தமை.

6) மேலதிக வீதி பொலிசார் சேவையில் ஈடுபடுத்தியமை.

போன்ற நடைமுறைகளை வழங்கிவீதிப் போக்குவரத்து விஸ்தரிக்கப்பட்டன.

**2) புகையிரதப் போக்கு வரத்து**

வீதிப் போக்குவரத்தை அடுத்து முதன்மை பெறுவது புகையிரதப் போக்கு வரத்து ஆகும். எமது நாட்டில் அரசதுறையி னரால் நடாத்தப்படும் இப்போக்குவரத்துக்கு பொறுப்பாக புகையிரத திணைக்களம் காணப்படுகின்றது. ஆயினும் அண்மையில் புகையிரத திணைக்களம் இலங்கை புகையி ரத அதிகார சபையாக மாற்றப்பட்டு பண் டங்கள், பயணிகளுக்கான சிறந்த புகையி ரதசேவையை நடாத்தவும் இலாபகரமான புகையிரத சேவையை நடாத்தவும் நடவ டிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

புகையிரத சேவையை நடாத்துவதுடன் தொடர்புடையதாக பின்வரும் அமைப்புக்கள் பின்வரும் பணிகளை ஆற்றுகிறது.

1) இலங்கை புகையிரத திணைக்களம்.

2) இலங்கை புகையிரத கம்பனி.

இது புகையிரதங்களை திருத்துதல், பரா மரித்தல் போன்ற பணிகளையும்

3) றெயில்வே கேற்ரறிங் சேவிசஸ் லிமிட டெட்- புகையிரத பயணிகளுக்கான சிற் றுண்டி வசதிகளையும் வழங்கி வருகின்றது எனினும் **புகையிரதப் போக்கு வரத்தினை விருத்தி செய்யும் நோக்குடன் அண்மையில் பல நடைமுறைகள் கொண்டுவரப் பட்டுள்ளது.**

குறிப்பாக

1) புகையிரதப் பாதைகள் புனரமைக்கப் பட்டது.

2) புகையிரத திணைக்களம் அதிகார சபை யாக மாற்ற நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றன.

3) விரைவான சேவைக்கென "நகர் சேர் சேவை" எனும் கடுகதி புகையிரத சேவை எனும் கடுகதி புகையிரதம் அறி முகப்படுத்தப்பட்டுள்ளது.

4) உல்லாசப் பயணிகளை கவர "வைஸ் றோஸ்" எனும் குளிரூட்டப்பட்ட புகை யிரத சேவை அறிமுகப்படுத்தப் பட்டுள் ளது.

5) மின்சார புகையிரத சேவை நடைமு றைப்படுத்தப்பட்டமை.

6) பாதைகளின் நிர்மானச் செலவைக் குறைக்க சீமெந்தினால் ஆன சிலிப்பர் கட்டைகள் உருவாக்கப்பட்டுள்ளமை.

போன்ற பல அபிவிருத்திகள் மேற் கொள்ளப்பட்டு உள்நாட்டில் தரைப் போக்கு வரத்து விருத்தி செய்யப் பட்டுள்ளது. இதனை விட சர்வதேச ரீதியில் கடல், விமானப் போக்கு வரத்தை நடாத்துவ தற்கென பல அமைப்புக்கள் காணப்படுகின் றன.

3) **கடல் போக்கு வரத்து** கடல் போக்கு வரத்து சர்வதேச வர்த்தகத்தினை வளர்ப் பதற்கு முக்கியம் பெறுகின்றது. இதனுடன் தொடர்புடைய அமைப்புக்கள்

**1) துறைமுக அதிகாரசபை**

இது துறைமுகங்களை அமைத்தல், பரா மரித்தல் கப்பல்கட்டணங்கள் அறவிடுதல் களஞ்சிய வசதி தொடர்பான சேவைகளை நடாத்திவரும். இவ்அமைப்பு பின்வரும்அமைப் புக்களை இணைத்துஉருவாக்கப்பட்டுள்ளது.

1) துறைமுக ஆணைக்குழு
2) துறைமுக சரக்கு கூட்டுத்தாபனம்.
3) துறைமுக ஒப்புநோக்கல் சரிபார்த்தல் கூட்டுத்தாபனம்.

**2) மத்திய கேள்வு பணியகம்**

1) கப்பல் வரும், புறப்படும், நேரங்கள் மற்றும் தகவல்கள் வழங்கல்.

2) இலங்கையில் இருந்து புறப்படும் கப் பலுக்கு போதியளவு சரக்குகளை வழங் குதல்.

3) கப்பல் வசதி கிடைப்பதை உறுதி செய் தல்.

4) கப்பல் கேள்வினை தீர்மானித்தல்.

5) வெளிநாட்டு கப்பல் கம்பனிகளின் சேவைகளை பெற உதவுதல்.

போன்ற பணிகளை ஆற்றி வருகின்றது.

**3. வரையறுத்த இலங்கை கப்பல் போக்கு வரத்து கம்பனி**

1991ம் ஆண்டு கப்பல் கூட்டுத்தாபன மாக அமைத்த நிறுவனம் 1992ம் ஆண்டு கம்பனியாக மாற்றப்பட்டு

1) சர்வதேச வியாபாரத்துக்கான கப்பல் சேவைகளை வழங்குதல்.

2) தேவைகளுக்கு ஏற்ப கப்பல்களை வாட கைக்கு பெற்று சேவையை வழங்குதல்

3) கப்பல் மகாநாடுகளில் பங்குபற்றி கப் பல் கேள்வை குறைக்க முற்படல்.

4) வெளிநாட்டு கப்பல் கம்பனிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தல்.

போன்ற பணிகளை புரியும்.

**4) வரையறுத்த கொழும்பு கப்பல் தள கம்பனி (கொழும்பு டொக்கியாட் லிமிட்டெட்)**

இது கப்பல் கம்பனியின் பிரதான துணைக் கம்பனி ஆகும். இது

1) பெரிய மீன்பிடி கப்பல் படகுகளை அமைத்தல்.

2) கப்பல் திருத்தும் வேலையை பூரண மாக நடாத்துதல்.

3) கப்பல் திருத்தும் புதிய உலர் தளத்தை அமைத்தல்.

போன்றதான பணிகளையும் செய்து வருகின்றது. இதனை விட

1) சிலோன் சிப்பிங்ஸ் லைன் LTD
2) இலங்கை துறைமுக சேவை கம்பனி
3) வரையறுத்த இலங்கைதாங்கிகள் கம்பனி
4) கொழும்பு ரைடொக்ஸ் லிமிட்டெட்

போன்ற பல அமைப்புக்கள் கப்பல் போக்கு வரத்துடன் தொடர்புடையதாக காணப்படுகின்றது. எனினும் இதன் முன்னேற்றம் கருதி

**கப்பல் போக்குவரத்துக்கு அண்மையில் பல மாற்றங்கள் நடைபெற்றுள்ளன.**

1) கப்பல் கூட்டுத்தாபனம் கப்பல் கம்பனியாக மாற்றப்பட்டமை.

2) யப்பானின் உதவியுடன் ஜெயா கொள்கலன் இறங்குதுறை அமைக்கப்பட்டு வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.

3) கட்டுநாயக்கா முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் உலர் துறைமுகம் அமைக்கப்பட்டு கப்பல் சேவைக்கு உதவி அளிக்கப்பட்டமை.

4) கொழும்பு டொக்கியாட்ஸ் லிமிட்டெட், கொழும்பு ரைடெக்ஸ் லிமிட்டெட் என்பன வெளிநாட்டு முதலீடுகளுடன் இணைந்து இலாபகரமான முயற்சியை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல்.

5) வெளிநாட்டு உதவியுடன் கொழும்பு துறைமுக வேலைகள் நவீனமயமாக்கப்பட்டது.

போன்ற பல மாற்றங்களினால் கப்பல் போக்குவரத்து **திறம்பட நடைபெற்று வருகின்றது.**

**4) விமானப்போக்குவரத்து**

கப்பல் போக்குவரத்தை அடுத்து சர்வதேசரீதியில் அதிகளவில் பயணிகள் போக்குவரத்துடன் தொடர்புபட்டதாக விமானப்போக்குவரத்து அமைகின்றது. விமானப் போக்குவரத்துடன் தொடர்புடையதாகவும் ஏனைய போக்குவரத்தை போல் பல அமைப்புக்கள் காணப்படுகின்றன. இவ் அமைப்புக்கள் பல பணிகளை புரிவதன்மூலம் விமானப்போக்குவரத்தானது முன்னேற்றம் கண்டுள்ளது.

**1) வரையறுக்கப்பட்ட ஏயாலங்கா லிமிட்டெட் (விமானப் போக்குவரத்துச் சபை )**

இது பின்வரும் பணிகளை புரிகின்றது. அவையாவன

1) பிற நாடுகளிடையே பயண சேவை, தபால்சேவை வழங்குதல்.

2) சரக்கு விமான சேவையை நடாத்துதல்

3) துணைக்கம்பனிகளை அமைத்து ஆசனப் பதிவு, இட ஒதுக்கீடு, விமானச் சீட்டு வழங்கல் போன்ற பல சேவைகளை நடாத்துதல் இதனை விட

**2 விமானத்தள அதிகார சபை வானூர்தி திணைக்களம் )**

விமான நிலையங்களை அபிவிருத்தி செய்வதாகவும் ஏயாலங்கா கேற்ரறிங்சேவிசஸ் நிறுவனம் விமான பயணிகளுக்கு சிற்றுண்டிகளை வழங்கும் அமைப்பாகவும் விமான நிலைய விமான தள கம்பனியோ விமான நிலையங்களை பராமரித்தல், பாது காப்பு அளித்தல், விமானநிலையங்களில் தீர்வை அற்ற வர்த்தக கடைகளை நடாத்துதல் போன்ற பணிகளில் ஈடுபடுகின்றது. ஏனைய போக்குவரத்துடன் ஒப்பிடும் போது வேகம் கூடியது வசதித் தன்மை என்பவற்றினால் இது விரும்பப்படுகிறது. இதன் **விருத்தி கருதி அண்மையில் பலமாற்றங்கள் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது** அவை

1) புதிய விமானங்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன.

2) 2வது சர்வதேச விமான நிலையம் புதிதாக ஹிங்கிராண் கொடையில்

அமைக்கப்பட்டு l வது ஒடுபோதை பூர்த்தியாக்கப் பட்டுள்ளது.

3) கட்டுநாயக்கா விமான நிலையத்தில் அமைக்கப்பட்டிருந்த ராடரைவிட மேலதிகமாக மத்திய மலை நாட்டில் பேதுறுதாலகால மலையில் ராடர் ஒன்று பொருத்தப்பட்டுள்ளது.

4) புதிய விமானசேவைகளை நடாத்துதல் உ + ம்:- இந்தியா, சிங்கப்பூர், ஜேர்மன், அவுஸ்திரேலியா

5) விமான நிலையங்கள் கணனி மயமாக்கப்பட்டுள்ளமை.

போன்ற வற்றால் விமானப் போக்குவரத்தை விருத்தி செய்யப்பட்டுள்ளது. இதனைவிட விமானநிலையத்தில் உள்வரும் பயணிகளின் சுங்கத்தீர்வு பரிசோதனையில் ஏற்படும் காலதாமதத்தை தீர்க்கும் பொருட்டு விசேட வாயிலை அமைத்து வெளியேறும் பயணிகளுக்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

**விமானப் பிரயாண முகவர் நிலையம்**

விமானப் பயணிகளுக்கு தேவையான சேவைகளை வழங்க என விமான பிரயாண முகவர் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இதிலே பிரயாணிகளுக்கான ஆசனப்பதிவு, இடஒதுக்கீடு, தங்குமிடவசதி போன்றவை செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் விமானச் சீட்டுக்களை பெறுபவர்கள் குறைந்த விலையில் சீட்டுக்களை பெற முடிதல், விரைவாக சேவையை பெறமுடிதல் என்ற நன்மைகள் கிடைக்கமுடியும். இது குறைந்த விலையில் சீட்டுக்களை வழங்க காரணம் கழிவு அடிப்படையில் விமான கம்பனியிடம் இருந்து சீட்டுக்களை பெற்று அந்தக் கழிவின் அடிப்படையில் குறைந்த விலையில் சீட்டுக்களை விற்பனை செய்கின்றனர்.

**போக்குவரத்துச் சாதனத்தின் தெரிவு**

இவ்வாறு வீதிப் போக்குவரத்து, புகையிரதப்போக்குவரத்து, கடல் போக்குவரத்து விமானப் போக்குவரத்து என்பன காணப்பட்ட போதும் ஒருவர் எந்த போக்குவரத்தின் சாதனத்தினூடாக போக்குவரத்தை மேற்கொள்வது என்பது அவற்றின் செலவு தூரம், விரைவு பயணத்தின் ஆபத்து, கிடைப்பனவு, அனுப்பும் பொருளின் தன்மை, குறித்த போக்குவரத்துமுழு ஒப்படைப்பையும் ஆற்றுமா எனும் தன்மை, ஒழுங்கு என்பவற்றின் அடிப்படையில் தெரிவு செய்யப்படும்.

**போக்குவரத்தின் அடிப்படை**

போக்குவரத்து ஆனது அதன் வழமையின் அடிப்படையில் அவற்றினை வகைப்படுத்துவர் இது எந்த மார்க்கம் எனும் அடிப்படையில்வீதி, புகையிரதம், கடல், வான் எனவும் ஊடகத்தின் அடிப்படையில் பஸ்/லொறி, புகையிரதம், கப்பல், விமானம், நிறுத்துமிட அடிப்படையில் பஸ்தரிப்பு நிலையம், புகையிரத நிலையம், துறைமுகம், விமானநிலையம் எனவும், செயற்படும் சக்தியின் அடிப்படையில் பெற்றோல், டீசல், மின்சாரம் போன்ற வலுப் பொருட்களின் அடிப்படையிலும் வகைப்படுத்துவர் இதனையே போக்குவரத்தின் அடிப்படை முறைமைகள் என்பர்.

**போக்குவரத்தினால் பயன்படுத்தும் ஆவணம்**

இப் போக்குவரத்தில் பயன்படுத்தப்படும் ஒவ்வொரு ஆவணங்களையும் இச்சானத்தின் அடிப்படையில் வகுப்பர் (1) லொறி வண்டியில் பொருட்கள் ஒப்படைக்கப்பட்டமையை உறுதிப்படுத்தி ஒப்படைப் பத்திரமும் (2) புகையிரதத்தில் ஒப்படைத்தமைக்கு ஒப்படைச்சீட்டும் (3) கப்பல்லே பொருட்கள் ஒப்படைத்தமைக்கு வர்நாமம் அல்லது சுமைச் சீட்டும் 4) ஆகாய விமானத்தில் ஆகாய மார்க்க சீட்டும் பயன்படுத்தப்பட்டு வரும்;

இந்தவகையிலே போக்குவரத்தில் பயன்படும்ஆவணம் இருந்தாலும் சர்வதேசரீதியில் சுமைச்சீட்டும், ஆகாயமார்க்கச்சீட்டும் பயன்பட்டு வரும் இதிலே சுமைச்சீட்டு முக்கியம் பெற்றிருக்கும் ஆகாயமார்க்க சீட்டை சுமைச் சீட்டைபோல் கைமாற்ற முடியாது.

**உசாத்துணை நூல்கள்**

1) தேவராயன்—ஜெயராமன் வர்த்தகமும் நிதியும் (1992) அலகு I
2) இரட்ணம் - தேவா

**(நடைமுறை வணிகம்)**

# வணிக வங்கியியல்

செல்வி. கிருஷ்ணன் தேவரஞ்சனி
விரிவுரையாளர்
வணிக முகாமைத்துவத்துறை
யாழ் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்.

19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் செட்டிமார்களின் வர்த்தக நடவடிக்கைகள் வளர்ச்சி அடையவும் செழிப்படையவும் தலைப்பட்ட அதேவேளையில் இலங்கையின் வர்த்தகத்தில் குறிப்பிடத்தக்களவு பகுதி இவர்களாலேயே நிதியீட்டம் செய்யப்பட்டது. பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் முதல் கட்டங்களில் பணத்தேவைகள் பெருமளவிற்கு அரசியல் தேவைகள் மட்டும் பூர்த்தி செய்தால் போதும் என்ற நிலை காணப்பட்டது. பின்னர் இலங்கைப் பொருளாதாரம் இலாபம் கருதி பெருந்தோட்டச் செய்கையில் காலடி வைத்த போது அது வெளிநோக்கிய வர்த்தகமாக வளர்ச்சியடைய நாணயக்கொள்கை விரிவடைய வேண்டிய தேவையும் ஏற்பட்டது. இதன் பயனாக பிரித்தானிய மூலதனம் உள்வரவும், பெருந்தோட்ட இலாபம் வெளிச் செல்லவும், பிரித்தானியாவின் ஸ்ரேலிங் பவுண் 1825ல் சட்டரீதியாக ஏற்றுக் கொள்ளவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதன் காரணமாக 1828ல் முதன்முதலாக இலங்கையில் வங்கியானது ஆரம்பிக்கப்பட்டது. இதன்பின்னர் 1841ல் வில்லியம்தோம்ஷன் என்பவரினால் 125,000/- மூலதனம் இடப்பட்டு இலங்கை வங்கி என்ற பெயரில் கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பனி ஒன்று உருவாக்கப்பட்டது. இவ்வாறாக 1854ம் ஆண்டின் பின்னர் கடல் கடந்த வணிக வங்கிகளின் தோற்றமும் அவற்றின் தொழிற்பாட்டினையும் நோக்குகின்ற போது அவை பெருந்தோட்ட வளர்ச்சிப் போக்குகளின் பிரதி பலிப்பாகவே காணப்படுகிறது. இலங்கையில் போக்குவரத்து, காப்புறுதி, வர்த்தகம் ஆகிய துறைகளில் ஏற்பட்ட வளர்ச்சியை போன்று பங்குத் தொழிற்பாடுகளிலும் வளர்ச்சியானது காணப்பட்டது. 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றிய சகல வங்கிகளையும் அவற்றின் தொழிற்பாட்டினையும் இரு துறைகளாக நோக்க முடிகின்றது.

(i) உள்நோக்கிய தொழிற்பாடு
(ii) வெளிநோக்கிய தொழிற்பாடு

உள்நாட்டு வணிக வங்கிகளை நோக்குமிடத்து ஆரம்பத்தில் முழுமையாக தனியுரிமை உடைய வெளிநாட்டு வங்கிகளாக காணப்பட்டன. இவை கிராமிய துறையினரையும், உள்ளூர் வர்த்தகரையும் புறக்கணித்து நகர்சார்பான பங்குத்தொழில்களை மேற்கொண்டுவந்தன. இவ்வாறான குறைபாடுகளை நீக்கும் முகமாகவும் நாட்டின் தேவைப்பாடுகளை ஆராயும் முகமாகவும் 1934ம் ஆண்டு வங்கி ஆணைக்குழு (The Banking Commision) ஆனது இந்திய வங்கித் துறை நிபுணரான Sri Sarabati Pockhanawala வின் தலைமையில் நியமிக்கப்பட்டது. இந்த ஆணைக்குழுவின் அறிக்கையின் பிரகாரம் இலங்கையின் தேவைகளுக்கு இணங்க அதிக பாதுகாப்பான முறைஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும் என்று 1939ம் ஆண்டில் வழமையான வைப்பு நாணய மாற்று வங்கி ஒன்று ஆரம்பிக்கப்பட அங்கிகாரம் அளித்தது. இவ்வாறாக உள்நாட்டு வணிக வங்கியாக முதன்முதலில் இலங்கைவங்கி உருவாக்கப்பட்டது. பின்னர் இது 1960ல் தேசிய

மயமாக்கப்பட்டது. பின்பு மக்கள்வங்கி தேவைக்கு ஏற்ப 1961ல் சமஷ்டி கூட்டுறவு பண்பினை ஒன்றிணைத்து உருவாக்கப்பட்டது. அத்துடன் இலங்கையில் வரையறுக்கப்பட்ட தனியார் வங்கிகளும் தோற்றம் பெற்றன. அவற்றில் இலங்கை வர்த்தக வங்கி 1969ம் ஆண்டும் ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் 1970 ஆண்டும், சம்பத் வங்கி 1987ம் ஆண்டும் செலான் நம்பிக்கை வங்கி 1988லும் தோற்றம் பெற்றன

## இலங்கையின் உள்நாட்டு வணிக வங்கிகளின் தொழிற்பாடுகள்

ஒரு நாட்டின் வணிக வங்கிகளின் தொழிற்பாடுகள் தனியே வைப்புக்களைத் திரட்டி கடனை வழங்குவதோடு அல்லாமல் புதிய பல்வேறு வங்கித் தொழில்களை விரிவாக்கப்படவேண்டிய தேவை அவசியமானதாக காணப்படுகின்றன மூலதனச் சந்தைகள், நிதிஸ்தாபனங்கள், கழிவு நிலையங்கள் என்பவற்றின் ஓர் அம்சமாக உள்நாட்டு வணிகவங்கிகள் பிரதிபலிக்கின்றன. வணிக வங்கித் தொழிலினை இரு பெரும் பிரிவாக பிரித்து நோக்கலாம் அவையாவன

(i) முதன்மைத் தொழிற்பாடு

ii) இரண்டாம்தரத் தொழிற்பாடு

நாட்டின் பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்துவதில் வணிகவங்கிகள் நிச்சயமாக உதவமுடியும் என்பதே ஆகும். இலங்கை நாணயக் கட்டுக்கோப்பில் இது எவ்வாறு சாத்தியப்படும் என உற்றுநோக்குகின்றபோது அபிவிருத்தி துறைகளில் பெருமளவிலான முயற்சிகள் வளர்ப்பதன் மூலம் முதலீடுகளுக்கும், நாட்டின் பொதுக்கம்பனிகளுக்கும் வளர்ச்சியை உற்சாகப் படுத்துவதிலும் அது ஆக்கபூர்வமான பங்களிப்பினை வழங்கமுடியும். அத்துடன் வேலை வாய்ப்புக்களையும் வேலைகளையும் கட்டி எழுப்புவதில் அத்துணை முக்கியம் பெற்றுள்ள நாடுகளில் இத்தகைய முதலீடுகள் உயிர்நாடியாக அமைந்து காணப்படுகின்றன. இவற்றைவிட இலங்கையில் பொருளாதார அபிவிருத்தியில் நவீன பங்களிப்பை ஏற்படுத்துவதற்காக அபிவிருத்தி வங்கிகளின் செயற்பாடுகளும் அவசியமானதாக அமைகின்றன. நடுத்தரகால, நீண்டகால நிதிவசதிகளை ஏற்படுத்தி பொருளாதார அபிவிருத்தியை முடுக்கி விடுகின்றன குறிப்பாக இலங்கையில் சமீபகாலங்களில் அமைக்கப்பட்ட தேசிய அபிவிருத்தி வங்கி, அரச ஈட்டு முதலீட்டு வங்கி, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுஸ்தாபனம் ஆகிய வங்கிகள் அபிவிருத்தி சார்ந்த குறிக்கோள்களை அடிப்படையாக கொண்டு பல செயற்பாடுகளை செய்துவருகின்றன.

நாடுகளில் பொருளாதார மேம்பாட்டிற்கு வங்கிகளின் பங்கு முக்கியமானதாகும். குறிப்பாக இங்கிலாந்தின் தொழில் புரட்சி ஏற்பட்டதற்கு வங்கிகளின் சேவை துணைநின்றது. தொழில் வளர்ச்சிக்கான மூலதனத்தை திரட்டுவதில் வங்கிகள் அத்துணை முக்கியம் வகிக்கின்றன வர்த்தகத்திற்கும் தொழில் நுட்ப நடவடிக்கைகளுக்கும் வங்கிகள் பாரியளவு சேவைகள் ஆற்றி வருகின்றன மேலும் அவற்றிற்கு கடன் வசதிகளை அளித்து வளர்ச்சியுறச் செய்வதுடன் நாட்டுமக்களின் சிறு, சிறு சேமிப்புக்களை ஏற்று திரட்டி, பாரியளவு மூலதனமாக்கி செயற்திட்டங்களில் அவற்றை ஈடுபடுத்தி வருகின்றன.

இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனம், தேசிய அபிவிருத்தி வங்கி போன்ற பல்வேறு நவீன நிறுவனங்களும் நாட்டின் நிதிமுறையை பலப்படுத்துவதற்கு தோற்றுவிக்கப்பட்டன. பல்வேறு நிதித்தேவைகளையும் குறிப்பாக வீடமைப்பு துறையில் நிதியளிக்கும் வகையில் அரச ஈட்டு முதலீட்டு வங்கி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனவே வங்கித் தொழிற்

பாடுகள் வளரமுற்பட்டமை அது நாட்டின் பொருளாதார அபிவிருதிக்கு பாரியளவில் செயற்பட்டு அபிவிருத்தியை ஏற்படுத்தி விடும் ஆகையால் அது வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாக விளங்குகின்றது.

வணிக வங்கிகளின் முதன்மைத் தொழிற்பாடுகள்:-

1) வைப்புக்களைத் திரட்டுதல்

வணிகவங்கிகள் பல்வேறு கணக்குகளினூடாக பொதுமக்களிடம் இருந்தும் ஏனைய நிறுவனங்களிடம் இருந்தும் வைப்புக்களை பெறுவதாகும். அவையாவன:

I) கேள்வி வைப்பு அல்லது நடைமுறைக் கணக்கு:-

இது அன்றாட கொடுக்கல், வாங்கல் நோக்கத்திற்காக பணத்தினை வைப்பிலிடும் முறையினைக் குறிக்கின்றது. இதற்கு வட்டி வழங்கப்படமாட்டாது.

II) சேமிப்புக் கணக்கு:-

பணத்தினை சேமிக்கு முகமாக வங்கியில் வைப்பிலிடுவதாகும் இதற்கு வட்டி வழங்கப்படும்.

III) நிலையான வைப்பு:-

இது குறிக்கப்பட்டளவு தொகை பணத்தினை குறிப்பிட்ட காலத்திற்கு என வைப்பிலிடுவதனைக் குறிக்கின்றது இது சேமிப்பு வைப்பிலும் பார்க்க உயர்ந்த வட்டி வீதத்தினை வழங்கும்.

IV) வைப்புச் சான்றிதழ் திட்டம்:-

கறுப்பு பணத்தினை வெளியில் கொண்டு வரும் நோக்கில் வங்கிகளால் ஆரம்பிக்கப்பட்ட திட்டமாகும். அத்துடன் சான்றிதழ்கள் வாங்குபவர்பெயர், விலாசம் என்பன சேர்க்காததுடன், காசாக மாற்றும் போது அடையாளத்தையும் நிரூபிக்க கேட்கமாட்டாது.

V) வதியாதோர் அந்நியநாணயக் கணக்கு:

இது வெளிநாட்டில் வாழும் 6 மாதங்களுக்கு மேல் இருக்கும் போது அல்லது இலங்கைக்கு திரும்பி 90 நாட்களுக்குள் இக் கணக்கினை ஆரம்பிக்க முடியும்.
இதில் அங்கீகரிக்கப்பட்ட சில நாணயங்கள் உள்ளன.

2) கடன்களை வழங்குதல்:-

வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு வட்டியுடன் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும் என்ற அடிப்படையில் வழங்கப்படும் முற்பணமே கடனாகும். கடனை திரட்சியாக வட்டியுடன் உடன்பாடு தெரிவிக்கப்பட்ட திகதியில் திருப்பிச் செலுத்தலாம் அல்லது பகுதி பகுதியாக வட்டியுடன் திருப்பிச் செலுத்தலாம்.

3) முதலீடுகளை ஊக்குவித்தல் :-

கிடைக்கக்கூடிய மூலவளங்களை மூலதனத்தின் உதவியுடன் பயன்படுத்தி நாட்டு மக்களுக்கு தேவையான பொருட்களையும், சேவைகளையும் உற்பத்தி செய்வதனாலேயே பொருளாதார அபிவிருத்தி ஏற்படுகின்றதெனலாம் வளர்முகநாடுகள் பல இன்றும் அதன் சிக்கலான பிரச்சினையால் மூலதனப் பற்றாக்குறையை எதிர்நோக்குகின்றன. கைத்தொழில், விவசாயம் போன்ற துறைகளுக்கு நெடுந்தவணை நிதிகளை வழங்குகின்றன.

4) கொடுக்கல் வாங்கல்களை இலகுபடுத்தல்:-

ஒரு வங்கியின் வாடிக்கையாளர் இன்னொரு வங்கியில் இருந்தோ அல்லது அதே

வங்கியில் இருந்தோ பெறப்பட்ட காசோலையை அவ்வங்கியில் வைப்புச் செய்கையில் அவ்வங்கி ஒரு திரட்டும் நிலையமாக செயற்படுகின்றது. அல்லது காசோலைகளுக்கான பெறுமதியை பணத்தை பெறவேண்டியவருக்கு ஏற்கனவே கொடுத்து இருப்பின் அது தனக்காக அக்காசோலையை திரட்டுகின்றன. இவ் இருசந்தர்ப்பங்களில் வங்கி ஓர் திரட்டு நிலையமாக பணி ஆற்றுகின்றது.

**5) அந்நிய நாணயமாற்று சேவைகள்:-**

வணிக வங்கிகளின் சர்வதேசப் பிரிவு அந்நிய செலாவணி மாற்றீடுகள் செய்து வருகின்றன. இவை உள்நோக்கிய மாற்று எனவும், வெளிநோக்கிய மாற்று எனவும இருவகைப்படும் உள்நோக்கிய மாற்று என்பது வர்த்தக வங்கிகளின் ஊடாக அனுப்பப்படும். உள்வரவுகளைக் குறிக்கும் மாறாக இலங்கையில் இருக்கும் ஒருவர் வெளிநாட்டில் இருக்கும் ஒருவருக்கு கொடுப்பனவை மேற்கொள்வது வெளிநோக்கிய மாற்று எனப்படும் இக்கொடுப்பனவு பெறுவனவு பின்வரும் 4 கருவிகள் மூலம் மேற்கொள்ளப்படலாம்.

I) வங்கி வரைவு II) தபால் மாற்று III) தந்தி மாற்றுIV) சொந்தக்காசோலை

மேற்கூறப்பட்டவாறு பணத்தினை அந்நிய செலாவணிக் கட்டுப்பாட்டாளர் இடம் இருந்து அனுமதி பெறுதல் வேண்டும்

**2) இரண்டாந்தரத் தொழிற்பாடுகள்:**

வர்த்தக வங்கிகள் வாடிக்கையாளருக்கு வழங்கும் சேவைகளை கருதியும், மேலும் சிலபணிகளை ஆற்றி வருகின்றன. இப்பணிகள் வணிக வங்கிகளின் இரண்டாந்தர பணிகளாகவே கருதபபட்டு செயற்படுவதனால் இவை இரண்டாந் தர தொழிற்பாடுகள் எனவும் முதன்மைத் தொழிற்பாட்டினை பூரணப்படுத்தும் நோக்குடன் செய்யப்படுவதாகும் பின்வரும் தொழிற்பாடுகளின் மூலம் இதனை அறியலாம்.

**1) உண்டியல்களை கழிவு செய்தல்:-**

நிறுவனங்கள் கொண்டு வரும் உண்டியல்களை வாணிபத்தைப் பெருக்கும் நோக்குடன் வணிக வங்கிகள் கழிவு செய்து அவற்றுக்குரிய பணத்தை அச்சடித்ததற்குரிய முதிர்வு காலத்திற்கு முன்பாகவே குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு கொடுத்து உதவி புரிகின்றன. வியாபார நடவடிக்கைகளில் பண்டங்களை பணத்திற்கு மட்டும் விற்பனை செய்வது இல்லை. உண்டியல் மூலமும் வியாபாரம் நடைபெறுவதனால் வங்கி செய்யும் இவ்வாறான சேவைகள் வாடிக்கையாளனுக்கு பெரும் உதவியாக இருக்கும். பண்டங்கள் கடனுக்கு விற்கப்படும் போது கடன்பட்டோரினால் ஒப்புக்கொள்ளப்பட்டு கடன்கொடுத்தோருக்கு கொடுக்கப்பட்ட அல்லது குறிக்கப்பட்ட திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் குறிக்கப்பட்ட தொகையைத் தருவார் என்று ஆணையிட்டு உறுதிப்படுத்தி கொள்ளும் ஆவணமே உண்டியல் எனப்படும்.

**I) வங்கி மேலதிகப் பற்றுக்களை வழங்குதல்:-**

வர்த்தகவங்கிகளில் நடைமுறைக்கணக்கை வைத்திருக்கும் வாடிக்கையாளர் தன்னுடைய கணக்கிலுள்ள தொகையிலும் பார்க்க கூடிய தொகையை பெறக் கூடிய நிலையினை வங்கி மேலதிகப் பற்று என அழைப்பர். இங்கு முன்கூட்டியே வங்கியினால் அனுமதியினை பெறவேண்டும். இங்கு வட்டி அறவிடல் எனவும், தற்காலிக மேலதிகப்பற்று எனவும் இருவகையாக வழங்கப்படும்.

III) நாணயமாற்றுக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல்:-

ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தில் ஈடுபடும் வர்த்தகத்திற்கு தேவையான நாணயமாற்றுக் கொடுப்பனவுகளை மேற்கொள்கின்றன. பொருட்களை இறக்குமதி செய்பவரின் நிதி நிலைமை நாணயம் என்பவற்றினை உள்ளடக்கிய இறக்குமதியாளனின் அந்தஸ்து தொடர்பான அறிக்கைகளை தயாரித்து அளிக்கின்றது.

IV) பாதுகாப்பு அறைகளை வழங்குதல்:

தமது வாடிக்கையாளருக்கு பாதுகாப்பு அறைகளை வழங்குவதன் மூலம் வாடிக்கையாளர் நம்மிடம் இருக்கும் பெறுமதி மிக்க ஆவணங்களையும், நகைகளையும் பாதுகாப்பாக வைத்திருக்க முடியும்.

(V பிரதிகர்த்த சேவைகளை வழங்குதல்

தன்னுடைய வாடிக்கையாளருக்கு பின் வரும் பிரதிகர்த்தா சேவைகளை வழங்குகின்றது.

அ) நிலையான கட்டளை:-

வாடிக்கையாளர் வழங்கப்படவேண்டிய கொடுப்பனவுகளை வங்கி நிலையான கட்டளை என்ற வாடிக்கையாளர் பிறப்பித்தால் வங்கியானது அதன்படி மேற்கொள்ளும். இதன்மூலம் வங்கி ஓர் தரகினைப் பெறும் அத்துடன் இக்கட்டளையை வங்கியானது ஏற்கும்போது வாடிக்கையாளன் கணக்கில் பணம் இருப்பதனை உறுதிப்படுத்தவேண்டும்.

ஆ) காசோலைகளை தீர்த்தல்:-

வாடிக்கையாளனின் சார்பில் வங்கி பிறவங்கிக் காசோலைகளை பெற்றுக் கொண்டு அத்தொகையை அறவிட்டு வாடிக்கையாளனின் கணக்கில் சேர்த்துக் கொள்ளும்: இதனால் வாடிக்கையாளர்கள் வேறு வங்கிகளுடன் தொடர்புகொள்ளத் தேவையில்லை.

இ) உத்தரவாதம் வழங்குதல்:-

இது எழுத்தின் மூலம் ஒருவரினால் இன்னொருவருக்கு (3ம் தரப்பினால்) ஏற்படும் கடன் அல்லது இழப்பை வழங்குவதாக உறுதிப்படுத்தும் நடவடிக்கையாகும் இதற்கு வங்கியினால் தரகு அறவிறப்படும் உதாரணமாக சப்பல் உத்தரவாதம்

II) நெல்குத்தும் உத்தரவாதம்

ஈ) அறிமுகக்கடிதம் வழங்குதல்:

வாடிக்கையாளர் ஒருவர் வெளிநாட்டிற்குச் செல்லும் போது அந்நாட்டில் வியாபாரம் சம்பந்தமாக தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு வங்கி தனது வெளிநாட்டில் உள்ள வங்கிக் கிளைக்கு அல்லது முகவருக்கு வாடிக்கையாளரை அறிமுகப்படுத்தி ஒரு கடிதம் ஒன்றினை வழங்கும்.

மேற்கூறிய தொழிற்பாடுகள் அனைத்தையும் இலங்கையில் உள்நாட்டு வணிக வங்கிகள் மேற்கொண்டு வருகின்றன இவ்வாறான தொழிற்பாடுகள் மூலம் வாடிக்கையாளர் தமது தொழில் சார்பான பிரச்சனைகளை இலகுவில் தீர்க்கக் கூடியதுடன் நாட்டின் பொருளாதார அபிவிருத்திசெயற்பாடுகளில் முற்றுமுழுதாக ஈடுபடவாய்ப்பு அளிக்கின்றது.

---

சிலிங்கோ நிறுவனம் முதலாவது காப்புறுதி கல்லூரியை ஆரம்பித்துள்ளது. 700 அலுவலர்கட்கு உடனடி பயிற்சி வழங்கப்படும்.

# நிலநடுக்கமும் அவற்றின் விளைவுகளும்

செல்வன். கு. நிமலகுமாரன்
பல்கலைக்கழக புகுமுக ஆண்டு
வர்த்தகப் பிரிவு

நிலநடுக்கத்தினைப் பற்றி ஆராய முன்னதாக புவியின் அமைப்பினைப்பற்றி ஆராய்வது முக்கியமானதாகும்.

## புவியின் உள்ளகம்

புவியின் உள்ளமைப்பு பற்றிய தகவல்களைப் புவிச்சரிதவியலறிஞர்கள் ஆரம்பத்தில் எரிமலைக் கக்குகையின் மூலம் பெறப்பட்ட பொருட்களில் இருந்து பெற்றுக் கொண்டனர். புவியின் உள்ளமைப்புப்பற்றி அறிவதற்கு இன்று அறிஞர்களுக்கு கை கொடுப்பது ''புவி நடுக்கவியல்'' (*Seismology*) தரவுகளாகும். அவர்கள் கண்டறிந்த அண்மைக்கால ஆய்வுகளின்படி புவி மூன்று படைகளைக் கொண்டு அமைந்திருக்கின்றது என்று அறியமுடிகின்றது. அவையாவன

(1) புவியோடு (*Earth Crust / Lithosphere*)
(2) இடையோடு / மான்ரில் படை (*Meso - sphere / Mantle*)
(3) கோளவகம் (*Centrosphere*)

## புவியோடு

புவியின் மேற்படையே புவியோடு ஆகும். இது கடினமான கற்கோளமாகக் காணப்படுகிறது. இப்புவியோடு 10 கிலோ. மீற்றர்களிலிருந்து 50 கிலோ மீற்றர் வரையில் தடிப்பானது. புவியோட்டின் கண்ட ஓட்டை சியல்படை என வழங்குவர். இது 30 கி. மீ தொடக்கம் 50 கி. மீ வரையான தடிப்பினைக் கொண்டுள்ளது இது சிலிக்காவையும், அலுமினியத்தையும் அதிகளவில் கொண்டுள்ளது. புவியோட்டின் சமுத்திர வோட்டை சீமாப்படை என்பர். இது சராசரியாக 10 கி. மீ வரையிலான தடிப்பினைக் கொண்டது. இது சிலிக்காவையும், மக்னீசியத்தையும் அதிகளவில் கொண்டுள்ளது.

## இடையோடு

இடையோடு புவிமேற்பரப்பிலிருந்து ஏறத்தாழ 2900 கி. மீற்றர் வரையில் அமைந்துள்ளது. புவியோட்டிற்குக் கீழே வேறுபட்ட பாறைகளைக் கொண்டமைந்ததே இடையோடாகும். புவியோட்டிற்கும் இடையோட்டிற்கும் இடையில் ஒருமெல்லிய இடைவெளி காணப்படுகின்றது. இதனை மொஹோறோவிச் என்பவர் கண்டறிந்ததால் இவ்விடைவெளி ''மொஹோ இடைவெளி'' எனப்படுகின்றது.

## கோளவகம்

இடையோட்டிற்குக் கீழ் காணப்படுவது கோளவகம் எனப்படும். உள்ளீடாகும். இது நிக்கல், இரும்பு என்னும் உலோகங்களின் சேர்க்கையாலானது. கோளவகம் புவிமேற்பரப்பிலிருந்து ஏறத்தாழ 2900 கி. மீ. கீழ் காணப்படுகிறது. இடையோட்டிற்கும் கோளவகத்திற்கும் இடையில் ஒரு இடைவெளி கண்டன்பேக் என்பவரால் கண்டறியப்பட்டதால் இவ்விடைவெளி ''கண்டன்பேக் இடைவெளி'' எனப்படுகிறது. இக்கோளவகத்தின் வெப்பநிலை ஏறத்தாழ 2000° செல்சியஸ் (3632°ப) ஆகும் கோளவகத்தை உட்கோளவகம், வெளிக்கோளவகம் என இரண்டாக வகுப்பர்.

✱ புவியின் மேற்பரப்பு காலப்போக்கில் சிதைவடைந்து கொண்டு செல்வதால் புவியோடு பலவீனமடைகின்றது. புவியோட்டின் கீழுள்ள உருகிய பாறைக்குழம்பு வெப்பநிலை அமுக்கம் காரணமாக அங்குமிங்கும் அசையத்தொடங்குகிறது. அவ்வாறு அசையும் பாறைக்குழம்பு புவியோட்டின் பலவீனமான பகுதியைத் தகர்த்துக் கொண்டு வெளியே பாய்வதனையே ''எரிமலைக் கக்குகை'' என்பர். குத்தான கண்ட மேட்டுச் சாய்வுகள் பலவீனமாகக் காணப்படுவதால் கடற்கரையோரங்களை அடுத்து எரிமலைகள் அமைந்திருப்பதனைக் காணலாம்.

அண்மைக்காலத்தில் பூகம்பம், புவிநடுக்கம், பெருவெள்ளம் கடல்வற்றுப்பெருக்கு எரிமலை சூறாவளி போன்ற இயற்கை அழிவுகளால் உலகம் பலமுறை பாதிக்கப்பட்டுள்ளது

## நிலநடுக்கம் தொடர்பான கோட்பாடு

பொதுவாக புவி உருண்டையானது என்பதும், அது திண்மத்தாலும் திரவத்தாலும் ஆனது என்பதும் நாம் அறிந்த உண்மைகளே. எனினும் புவி மேற்பரப்பிலிருந்து பூமிக்குள் செல்லச் செல்ல 64 அடிக்கு ஒரு பாகை பரண்ஹீட் வீதம் வெப்பம் அதிகரித்துச் சென்று இறுதியில் புவி நடுமத்தியப் பகுதியில் கொதி நிலையில் எரி குழம்புகளே நிறைந்துள்ளன. எனவே இந்த எரி குழம்பைச் சுற்றி புவியோடு போன்ற அமைப்பில் புவிமேற்பகுதி அமைந்துள்ளது. புவியோட்டின் தடிப்பம் எல்லா இடத்திலும் சமமானதாகவும், ஒரேதன்மையானதாகவும் இல்லை. சிலபகுதிகள் தடிப்புக் குறைந்ததாகவும் மென் பொருள்களால் ஆனதாகவும் உள்ளன. எனவே புவியோட்டுக் கீழ் பல்வேறு விசைகளின் தாக்கங்களால் ஏற்படுகின்ற விளைவுகள் புவியோட்டின் மென்மையான பகுதிகளினூடாக மேற்பரப்பிலும் மாற்றங்களை உண்டு பண்ணுகின்றன. கண்டங்கள், சமுத்திரங்கள் மலைகள் பள்ளத்தாக்குகளின் உருவாக்கத்திலும் மற்றும் புவிமேற்பரப்பு நில உறுப்புக்களின் தோற்றத்திலும் இவைபெரும் செல்வாக்கு செலுத்துகின்றன.

மேற்படி புவிக்கீழ் விசைகளின் தொழிற்பாட்டின் விளைவாக ஏற்படும் நில உயர்ச்சிகள், தாழ்வுகள், பிளவுகள், மடிப்புகள், பள்ளத்தாக்குகள் போன்றன புவி உள்விசைகளின் கிடையான, எதிர் எதிரான, மேலும் கீழுமான செயல்பாட்டின் விளைவாக ஏற்பட்டவைகளே இத்தகைய தாக்கத்தின் போது புவி மேற்பரப்பின் மீது உள்ள சகலதும் மாற்றியமைக்கப்படுகின்றன. கட்டடங்கள் உடைந்து சுக்குநூறாகி விடுவதுடன் புதையுண்டும் போகின்றன. இதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கே யப்பான் போன்ற நாடுகளில் மரப்பலகையிலான வீடுகள் அமைக்கப்படுகின்றன.

## நிலநடுக்கம் ஏன் எப்படி ஏற்படுகின்றது

புவியை மூடியிருக்கும் புவியோடு ஒரே தன்மையுடையதாக இல்லை அது பல்வேறு வடிவங்களிலும், உருவங்களாகவும் பரந்த மேடைகளாகக் காணப்படுகின்றன. இவை ''டெக்டோனிக் பிளேட்'' (Tectonic plates) என்று அழைக்கப்படுகின்றன நீண்டு பரந்தும் தொகுதி தொகுதியாகவும் காணப்படுகின்ற இந்த புவியோட்டின் பகுதிகள் புவிக்கீழ் ஏற்படுகின்ற பௌதீக, இரசாயண மாற்றங்களால் அசைவுக்குட்படுத்தப்படுகின்றன. சில போது இவை மெதுவாக நகர்ந்து செல்கின்றன. வருடாந்தம் சில சென்டிமீற்றர்கள் வரையில் கண்ட நிலப்பரப்புக்கள் நகர்ந்து செல்வதாக விஞ்ஞானிகள் கருதுகின்றனர். அதனால் தான் இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு

முன்பிருந்த கண்டங்களினதும் பிரதேசங்களினதும் அமைப்புக்கள் இன்றில்லை.

சடுதியாக புவியின் உள்ளிருந்து எழுகின்ற விசைத்தாக்கங்கள் புவியோட்டின் மேற்படி "டெக்டோனிக் பிளேட்" எல்லைகளினூடே (Plate Boundaries) வெளியுலகத்தைத் தாக்குகின்றன. மிகத் தடிப்பாகவும், கெட்டியாகவும் உள்ள புவியோட்டுப் பகுதியினை இவை தாக்குவதில்லை. எனவே தான் எங்கே இந்த ஓடு மெல்லியதாகவும், பலவீனமாகவும் அமைந்துள்ளது என விஞ்ஞானிகள் ஆய்வுகள் மேற்கொண்டு, அறிந்து நிலநடுக்கம் ஏற்படக்கூடிய பகுதிகள் அல்லது வலயங்கள் (Earth Quakezones) என்று இனம் கண்டுள்ளனர்.

புவிக்கீழ் ஏற்படும் இரசாயண மாற்றத்தால் ஏற்படும் விசையால் உள்ளிருக்கும் பாறைகள் மேல்நோக்கி உந்தப்படும் இந்தப் பாறை போன்ற திண்மப்பொருள் புவிமேற்பரப்பு நோக்கி உந்தப்படும் போது மேலும் கெட்டியடைந்து பலமாகத் தாக்குகின்றது அதனாலேயே பெரும் விசையும் அதிர்ச்சியும் ஏற்படுகின்றன. இவை புவியோட்டில் பிளவுகள் மடிப்புகள் முறிவுகள் என்பவற்றைத் தோற்றுவிக்கின்றன.

பல சமயங்களில் மேற்படி ஓடுகளின் சடுதியான நகர்வுகளால் அவை பலமாக மோதிக்கொள்கின்றன அல்லது உரசுகின்றன அவை மேலும் மேலும் நெருக்கி அமுக்கப்படும்போது பிதுக்கங்கள் ஏற்படுகின்றன. இதனால் ஏற்படும் அதிர்ச்சி மிகப்பாரதூரமானதாக இருக்கின்றன இவை விசை அதிர்ச்சி அலை, போன்றவற்றைத் தோற்றுவித்து நில நடுக்கத்தினை மேலும் உக்கிரப்படுத்துகின்றன.

## நிலநடுக்க மையம்

நிலநடுக்கம் ஒன்று ஏற்படும் போது நில நடுக்க மையத்திலிருந்து சக்தி வெளிப்பட்டு சீஸ்மிக் அலை (Seismic Waves) வடிவத்தில் நிலப்பகுதியில் பரப்பப்படுகின்றது. இவை மூன்று வகைப்படும் அவையாவன.

1) ஆரம்ப அலை
2) கத்திரி அலை
3) மேற்பரப்பு அலை

இவற்றில் ஆரம்ப அலையே மிக விரைந்து பரவுகின்றது இவை பாறைகளை சுருங்கி விரிவடையச் செய்கின்றன. பாறைகளைக் கடந்து செல்லும்போது அவை நொறுங்கிச் சிதறுகின்றன. இரண்டாம்நிலை அலை பாறைச் சிதைவுகளில் மேலும் அதிர்வுகளை ஏற்படுத்துகின்றன. இந்த அலைகள் நிலமேற்பரப்பில் இரண்டு வகையான அசைவுகளை ஏற்படுத்துகின்றன.

1) உருட்டுதல் செயல்ப்பாட்டு அசைவு:- இவை கடல் அலைகள் போன்றவை

2) பக்கம் பக்கமாக ஏற்படும் அசைவு:- மேற்பரப்பு அலை மிக மெதுவாக ஏற்பட்டாலும் இவையே மிகப்பெரிய அழிவை ஏற்படுத்துவன.

## நிலநடுக்கத்தின் விளைவுகள்

நிலநடுக்கங்கள் அவை ஏற்படுத்தும் விசை, அதிர்வு அலைகள் ஆகியவற்றால் மனிதர்களுக்குத் தீங்கு ஏற்படுத்துவதில்லை. அவை மரணங்களை மறைமுகமாகவே ஏற்படுத்துகின்றன. புவிமேற்பரப்பில் மனிதனால் உருவாக்கப்பட்ட கட்டடங்களையும், பாலங்களையும், நீர்த்தேக்கங்களையும் நிலைமாற்றி இடிந்து விழப்பண்ணுகின்றன. அதன் காரணமாகவே பெரும் அழிவுகள் ஏற்படுகின்றன. ஆதலால் தான் மனிதன் செறிந்து வாழுகின்ற பகுதிகளில் ஏற்படும் பூகம்பம் அதிக மனித அழிவுகளை ஏற்படுத்துகின்றன.

## சில முக்கிய நில நடுக்கங்கள்

1) 1993ம் ஆண்டு இந்தியாவில் மகாராஷ்டிராவில் ஏற்பட்ட நில நடுக்கத்தின் போது 35000 பேர் கொல்லப்பட்டனர்.

2) 1989ம் ஆண்டு அமெரிக்காவின் சென்பிரான்சிஸ் கோவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின்போது 62 பேர் கொல்லப்பட்டனர். இந் நில நடுக்கத்தின் முழுமையான சேதம் 6 பில்லியன் யு.எஸ் டொலராகும். இந் நில நடுக்கம் 7.1 ரிச்டர் அளவில் ( Richter Scale ) இடம் பெற்றது. (நில நடுக்கத்தின் சக்தி வெளிப்பாட்டினை அளக்கும் அளவு ரிச்டர் ஆகும்.

3 1988ம் ஆண்டு சோவியத் ரஷ்யாவின் ஆர்மேனியாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் போது 2500 பேர் கொல்லப்பட்டனர். இந்நிலநடுக்கத்தின் முழுமையான சேதம் 20 மில்லியன் யு. எஸ் டொலராகும். இந்நிலநடுக்கத்தின்போது கட்டிடங்களிற்கு ஏற்பட்ட சேதம் மிக அதிகமாகும். இந்நிலநடுக்கம் 6.7 ரிச்டர் அளவில் இடம்பெற்றது.

4) 1994ம் ஆண்டு அமெரிக்காவின் தென் கலிபோர்னியால் உள்ள ''லொஸ் ஏஞ்சல்ஸி'' ஏற்பட்ட பூகம்பத்தின் போது 29 பேர் உயிரிழந்தனர். இப் பூகம்பத்தின் தாக்கம் 6.6 ரிச்டர் அலகில் காணப்பட்டது. கடந்த 20 ஆண்டுகளில் ஏற்பட்ட மிகப் பெரிய பூகம்பம் இது வென்று அறிவிக்கப்படுகின்றனது.. பாதிக்கப்பட்ட இந் நகரை பேரழிவுப் பிரதேசம் என்று அமெரிக்க ஜனாதிபதி திரு பில் கிளின்ரன் பிரகடனம் செய்துள்ளார்.

ஆர்மேனிய நிலநடுக்கம் சென்பிரான்சிஸ்கோ நிலநடுக்கத்திலும் குறைவான அளவில் இடம்பெற்றுள்ள போதும் ஏற்பட்ட சேதம் அளப்பரியது என்பது இங்கு கவனிக்கத்தக்கது. காரணம் இங்கிருந்த கட்டடங்கள் நிலநடுக்கத்திற்கு தாக்குப் பிடிக்கத் தவறியமையாகும். மாறாக சென்பிரான்சிஸ்கோவில் மிகச் சில கட்டடங்களே பாரதூரமாகப் பாதிக்கப்பட்டன. எனவே நில நடுக்கம் மனிதனின் செயற்பாட்டினாலேயே அதிக அழிவுகளை ஏற்படுத்துகின்றது.

※ நிலநடுக்கம் புவிக்கடியில் பல கிலோமீட்டர் ஆழத்தில் இருந்து ஏற்படும் போது அதன் தோற்றத்தின் மூலத்தினை ''குவியம் ( Focus ) என்று கூறுகின்றனர். இந்தக் குவியத்திலிருந்தே ''குறைகள்'' நகர்கின்றன. இந்த குவியத்திற்கு சரிநேராக புவி மேற்பரப்பில் காணப்படக்கூடிய இலக்கு எபிசென்டர் (Ep nter) என்று அழைக்கப்படுகின்றது. நில நடுக்க அலைகள் பூமியெங்கும் பரவிச் செல்கின்றன.

இலங்கையில் 1993ம் ஆண்டு டிசம்பர் மாதம் 7ம் திகதி பல பாகங்களில் நில நடுக்கம் ஏற்பட்டது. இந்த நில நடுக்கம் சில கணங்கள் நீடித்த போதும் அழிவுகள் எதும் ஏற்படவில்லை. ஆயினும் இலங்கையிலும் நிலநடுக்கம் ஏற்படலாம் என்பதை ஊர்ஜிதம் செய்துள்ளது. இந்நில நடுக்கம் பாரிய நில நடுக்கம் ஒன்றின் முன்னறிவிப்பாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

5) இந்தோனேசியாவில் வட சுமாத்திராவில் 16-12-93 அன்று ஏற்பட்ட பாரிய பூமி அதிர்ச்சியில் 120க்கும் மேற்பட் இறந்தனர். 1250க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். பெருமளவு கட்டடங்களும் சேதமாகியது. மேலும் இப் பகுதியில் பூகம்பம் ஏற்படலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

**இக்கட்டுரை ஆக்கத்திற்கு உதவிய நூல்கள், பத்திரிகைகள்**

உதயன் பத்திரிகை (19-01-94, 20-01-94)
வீரகேசரி பத்திரிகை (26-12-93)
ஈழநாடு பத்திரிகை
பௌதீகச்சூழல் நிலவுருவங்கள். அறிவுக் களஞ்சியம் (20வது நூல்)

# "பழையன கழிதலும் புதியன புகுதலும்"

**செல்வன். ஏ. அனுசாந்தன்**
ஆண்டு - 13
கலைப்பிரிவு

"காலத்தின் தேவையினையொட்டியே இலக்கியங்கள் தோன்றும்" என்பதனையும், "ஒரு மொழிபேசும் மக்கட்கூட்டத்தினரின் அரசியல், சமய, சமூக, கலை, கலாச்சாரப் பண்புகளைப் பிரதிபலித்துக் காட்டும் கண்ணாடி போன்றனவே அம்மொழியிலெழும் இலக்கியங்கள்" என்பதனையும் ஏற்றுக் கொண்ட மொழியியலறிஞர் பலரும் "இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் செப்புதல்" எனும் மரபினை ஏற்கத் தவறவில்லை.

உலகச் செம்மொழிகளில் ஒன்றாகிய தமிழ் மொழியிலே யும்காலதுக்குக்காலம் இலக்கிய பொருள்மரபுமாற்றமுற்று வந்தவாற்றினையும், அம்மாற்றங்களுக்கேற்ப இலக்கண மரபுகளும் மாற்றங்கள் பலவற்றைச் சந்தித்து வருமாற்றினையும் தமிழின் இலக்கிய, இலக்கண வரலாறுகள் தெளிவுபடுத்துகின்றன. குறிப்பாக பவணந்தியடிகள் இயற்றிய நன்னூல் இலக்கணத்தின் இறுதிச்செய்யுளாகிய

"பழையன கழிதலும்புதியன புகுதலும்
வழுவல கால வகையி னான"

எனும் சூத்திரம் இக் கருத்தினைப் புலப்படுத்துவதேயாகும். இக் கருத்தின் பொருத்தப்பாட்டினை தமிழிலக்கணப் பெரும்பரப்பின் "எழுத்தியல்" எனும் பகுதியை ஆதாரமாகக் கொண்டு நோக்கும் பொழுது; எழுத்துக்களின் வரிவடிவம் எழுத்துக்களின் வகைகளும், அவற்றின் தொகை, கூட்டெழுத்துக்கள் என அழைக்கப்படும் சந்தியக்கர எழுத்துக்கள் பற்றிய இலக்கணம், மொழிக்கு முதலில் வரத் தக்க முதனிலை எழுத்துக்கள், மொழிக்கு இடையில் வரத் தக்க இடைநிலை எழுத்துகள், மொழியின் இறுதியில் வரத்தக்க இறுதிநிலை எழுத்துத்கள் முதலான பல்வேறு கோணங்களிலும் புதியபுதிய வரைவிலக்கணங்களையும், வழக்கமுறைகளையும் பெற்று வந்திருப்பதனையும், வருவதனையும் கண்கூடாகக் காண முடிகின்றது.

முதலிலே தமிழ் எழுத்துக்களின் வரிவடிவங்கள் மாற்றமுற்றுவந்தமையினை நோக்கின்; தொல்காப்பியர் முதலாக நன்னூலார் வரையான பல்வேறு தமிழிலக்கண நூல்களிலும் காட்டப்பட்டிருக்கும் எகர, ஒகர உயிரெழுத்துக்களின் வடிவங்கள் மேலே புள்ளி பெற்று பின்வருமாறே வழங்கிவந்தன.

எகரம் — எ̇

ஒகரம் — ஒ̇

இவ்வரிவடிவங்களை இன்றைய வடிவத்தில், மேற்புள்ளியிடாது எழுதப்படும் முறையில் திருத்தியமைத்த வீரமாமுனிவர் பற்றி அறிகின்றோம். இம்மாற்றம்மட்டுமே இன்றி மிகச்சமீபகாலத்தில் தமிழில்திருத்தியமைக்கப்பட்ட எழுத்துக்களும் பழையன கழிந்துபுதியன புகுதல் விதிக்குதக்க சான்றுகளாகும். அவற்றின் மாற்றங்களை பின்வருமாறு காட்டலாம்:

ஞ— ணா ஞு — ணா ரு — றா ஃல லை .
ஃன - னை ஃண — ணை ஃள - ளை ஞொ னொ
ஞெ ணொ ரஞோ ணோ றொ றா றோ றோ

இத்தகைய சீர்திருத்தங்கள் உருவாக்கப்படுவதற்கு பல காரணங்கள் வழிசமைத்தன.

தமிழ் எழுத்துக்களிடையே ஒரு பொது மையான வடிவத்தினை உருவாக்கும் நோக்குடனும் பிறநாட்டவரும், பிறமொழிபேசும் மக்களும் தமிழ் மொழியைக் கற்குமிடத்து ஏற்படும் எழுத்து மயக்கங்களைத் தீர்ப்பதற்காகவும், தட்டச்சு வேலைகளில் ஏற்படும் தவறுதல்களைத் தவிர்த்தற் பொருட்டாகவுமென இன்னோரன பல காரணங்களைக் குறிப்பிடலாம்.

அடுத்தபடியாக தமிழ் எழுத்துக்களின் வகைகள் பற்றி நோக்குமிடத்து அவை முதல் எழுத்து, சார்பெழுத்து என வகைப் படுத்தப்படுகின்றன. முதல் எழுத்துக்கள் பற்றி நன்னூலர் கூறுமிடத்து;

''உயிரு முடம்புமாம் முப்பது முதலே''

என்கிறார். அதாவது

''அகர முதலான பன்னிரண்டு எழுத்துக் களும், ககர முதலான பதினெட்டு மெய்களும் சேரவரும் முப்பது எழுத்துக்களுமே முதல் எழுத்துக்களாகும்.'' இந்த உயிர் எழுத்துக்களை குறில், நெடில் எழுத்துக்களென மேலும் இவர் வகைப்படுத்திக் கூறு கின்றார். ஆனால் இன்றைய தமிழிலக்கண அறிஞர் பலர் உயிர்நெட்டெழுத்துக்களிலுள்ள ஐ, ஔ ஆகிய எழுத்துக்களிரண்டினையும பிரித்தெடுத்து ''கூட்டெழுத்துக்களென வகைப்படுத்தி, உயிரெழுத்துக்களை;

குறில் எழுத்துக்கள் – அ, இ, உ, எ, ஒ
நெடில் எழுத்துக்கள் — ஆ, ஈ, ஊ ஏ, ஓ
கூட்டு எழுத்துக்கள் — ஐ, ஔ

என மூவகைப்படுத்திக் கூறுகின்றனர். இவ்வாறு வகைப்படுத்திக் கூறுவதற்கு ஒருவகையில் நாவலரின் இலக்கணம் வழி வகுத்ததெனலாம், ஏனெனில் தொல்காப்பியர், நன்னூலார் முதலிய இலக்கணகாரர்கள்,

அ+இ = ஐ எனவும்,
அ+உ = ஔ எனவும் கூற நாவலர் தமது இலக்கணச் சுருக்கத்திலே இவ்வெழுத்துக்கள் பற்றிக் கூறுமிடத்து,

அ+ய் = ஐ எனவும்
அ+வ் = ஔ எனவும் கூறுகின்றார். இதன்படி இவ்வெழுத்துக்களின் மாத்திரை அளவுகள் வருமாறு அமையும்.

அ + ஐ ⇒
ஒரு மாத்திரை + அரை மாத்திரை =
ய் ஒன்றரை மாத்திரை]
2. அ + வ் = ஔ
(ஒருமாத்திரை + அரைமாத்திரை
= ஒன்றரைமாததிரை)

ஆனால் உயிர்நெட்டெழுததுக்களின் மாததிரையளவு இரண்டாகும் என்றே இலக்கணம் கூறுகின்றது. ஆகவே ஒன்றரை மாததிரை கொண்ட இக் கூட்டெழுததுக் களை நெட்டெழுததுக்களுள் உள்ளடக்கு தல் பொருத்தமற்றதாகும். எனவேதான் பேராசிரியர் அ. சண்முகதாஸ் முதலான மொழியியலறிஞர்களால் இப் புதிய வகையீடு தோற்றுவிக்கப்பட்டு வளர்த்து வரப் படுகின்றது.

அடுத்தபடி சார்பெழுத்துக்கள் பற்றிய தற்கால மாற்றங்களை நோக்கின்; அவற் றின்வகை, தொகை முதலான விடயங்களை நன்னூலார் வருமாறு கூறுகின்றார்.

''உயிர்மெய் இரட்டு நூற்றுஎட்டு: உயர் ஆய்தம்
எட்டு: உயிர் அளபு எழுமூன்று: ஒற்றளபடை
ஆறேழ்: அஃகும் இம்முப் பானேழ்:
உகரம் அறாறு: ஐகான் மூன்றே:
ஔகான் ஒன்றே: மஃகான் மூன்றே:
ஆய்தம் இரண்டொடு சார்பெழுத் துறுவிரி

ஒன்றொழி முந்நூற்று எழுபான் என்ப'
அதாவது உயிர் மெய்யெழுத்துக்கள் இரு

நூற்றுப்பதினாறு, முற்றாயுதம் எட்டு, உயிரளபெடை இருபத்தொன்று, ஒற்றளபெடை நாற்பத்து இரண்டு, குற்றியலிகரம் முப்பத்தேழு, குற்றியலுகரம் முப்பத்தாறு, ஐகாரக்குறுக்கம் மூன்று, ஔகாரக் குறுக்கம் ஒன்று, மகரக்குறுக்கம் மூன்று ஆய்தக்குறுக்கம் இரண்டு என மொத்தம் முந்நூற்று அறுபத்தொன்பது எழுத்துக்கள் சார்பாகுமென்கிறார்''.

ஆனால் இன்றைய தமிழில் ஔகாரம் பற்றிய நன்னூல்விதியானது மீறப்பட்டு வழங்கக் காணலாம். அதாவது 'ஔவும் முதலற்று ஆகும்'' என்று கூறிய நன்னூலாரின் விதி மீறப்பட்டு ''ஔகாரமானது மொழியிடையிலும் குறுகி ஒலிக்கிறது'' எனப் பிரபல மொழியியலறிஞர் பலரும் கூறுகின்றனர்.

உ+ம் 'திரௌபதை' எனும் சொல்லில் வரும் ஔகாரம் குறுகியொலிப்பதனைக் குறிப்பிடலாம். ஆயினும் இச்சொல் ஒரு வடமொழிச் சொல்லேயாகும். இவ்வாறு இவ்விதி மீறப்பட்டு வழங்கப்படுவதற்கு மூலகாரணம் வடமொழிக் கலப்பே எனலாம். அதாவது தமிழிலுள்ள பெருந்தொகையான இலக்கிய, இலக்கணங்களை ஆக்கியளித்தோர், வடநாட்டிலிருந்துவந்த சமணத்துறவிகளும், பௌத்த சன்னியாசிகளுமே ஆவர். எனவே தமிழில் வடமொழிக்கலப்பு என்பது தவிர்க்கமுடியாத ஒன்றேயாகும்.

இவ்வாறாகவே மொழிக்கு முதலிலே வரும் எழுத்துக்களாகிய முதனிலை எழுத்துக்கள் பற்றிய விதிகளும், மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துக்களாகிய இறுதி நிலை எழுத்துக்கள் பற்றிய ,விதிகளும் மொழியிடையில் வரும் எழுத்துக்ள்பற்றிய விதிகளும் தற்காலத் தமிழிலே மீறப்பட்டு வழங்கப்படுதலைக் காணலாம். முதலிலே நன்னூலார் கூறும் முதனிலைபற்றிய விதிகள் மீறப்படுமாற்றினை நோக்குவோம்.

''பன்னீருயிரும் க, ச, த, ப, ந, ம, வ, ய, ஞ, ங, ஈர், ஐந்துயி மெய்யும் மொழிமுதல்''

என்பது நன்னூலாரின் பொதுவிதியாகும். பன்னீருயிரும் மொழிமுதலாவதற்கு உ—ம். கள் வருமாறு:

அணி, ஆடு, இலை, ஈட்டி, உறி, ஊசி, எலி, ஏணி, ஐயர், ஒட்டகம், ஓடம், ஔவை

இவ்வாறே ககர, சகர, தகர, பகர, நகர, மகர மெய்களும் பன்னீருயிரொடும் தனித்தனியே கூடி மொழி முதலாகுமென்பது சிறப்பு விதியாகும். இவை முறையே பன்னீருயிரோடும் கூடி மொழி முதலாவதற்கு உ—ம். கள் வருமாறு.

ககரம் :- கல்வி, காடு, கிளி, கூடு, கெட்டு, கேடு. கை, கொக்கு, கோடு, கௌதாரி, கீரை, கிளி

சகரம்:- சங்கு, சாமி, சினம், சீப்பு, சுருள், சூடு, செம்பு, சேவல், சைவம், சொல், சோதி, சௌரம்,

தகரம்:- தம்பி, தாரம், திம்பு, தீ, தும்பி தூசி, தெங்கு, தேன், தையல், தொட்டில், தோடை, தௌ,

பகரம்:- பட்டு பாம்பு, பிட்டு, பீடை, புடோல், பூனை, பைந்தமிழ், பொட்டு, போர், பௌர்ணமி.

நகரம்:- நம்பி, நாடு, நிலம், நீர், நுங்கு, நூல், நைதல், நொய்து, நோக்கு, நௌ.

மகரம்:- மகன், மாடு, மின்னல், மீன், முயல், மூக்கு, மெட்டு, மேகம், மையல், மொட்டு. மோர். மௌனம்.

வகரமெய் அ, ஆ, இ, ஈ, எ, ஏ, ஐ, ஔ ஆகிய தவிர்ந்த எட்டு உயிர்களுடனும் கூடிமட்டுமே மொழி முதலாகுமென்பதும், யகரமெய் அ, ஆ, உ, ஊ, ஒ, ஔ ஆகிய ஆறு உயிர்களுடனும்

மட்டுமேகூடி மொழிமுதலாகுமென்பதும், ஞகரமெய்யானது அ, ஆ, எ, ஒ, ஆகிய நான்கு உயிர்களோடு மட்டுமே கூடி மொழி முதலில் வருமென்பதும், ஙகரமெய் அகர உயிரோடு கூடிமட்டுமே சுட்டின்முன்னும், வினாவின் முன்னும் வருமென்பதும் சிறப்பு விதிகளாகும். இவற்றிற்குரிய உதாரணங்கள் முறையே பின்வருமாறமையும்.

வகரம்:- வழி, வாழி, விடு, வீடு, வெள்ளை, வேனில், வையகம், வௌவால்.
யகரம்:- யவனர், யானை, யுகம், யூகம், யோகி, யௌவனம்.
ஞகரம்:- ஞமலி, ஞானம், ஞெகிழன், ஞொல்கிற்று.
ஙகரம்: அங்ஙனம், எங்ஙனம்.

இவ்வாறாக பன்னீருயிரும், க, ச, த, ப, ந, ம ஆகிய ஆறு மெய்களும் பன்னீருயிரொடும் கூடிவரும் எழுபத்திரண்டு எழுத்துக்களும், வகரம் எட்டு உயிர்களுடனும், யகரம் ஆறு உயிர்களுடனும் ஞகரம் நான்கு உயர்களுடனும் ஙகரம் ஒருஉயிருடனும் சேரவரும் மொத்தம் நூற்றிமூன்று எழுத்துக்களுள் மொழிமுதலாகுமென்பது இலக்கணமாகும்.

ஆனால் தற்காலத்தமிழிலே ஞகரமெய்யானது, அ, எ, ஒ என்பவற்றோடு கூடிவருதல் அருகிக் காணப்படுகின்றது. அதேசமயம் வகர மெய்யானது ஊ, ஒ ஓ என்பவற்றுடனும், யகரமெய் எ, ஏ ஆகியவற்றுடனும் கூடி மொழிமுதலாகி வருகின்றது. இவற்றுக்கான உதாரணங்கள் முறையே வருமாறு:

வகரம்:- வூலி, வொட்கா, வோட்டு.
யகரம்:- யெஸ்பர்ஷன், யேசு

இவையேயன்றி எந்த உயிரோடும் கூடி மொழிமுதலாகிவராத மெய்களாகிய டகர, ரகர, லகர, றகரங்கள் பல உயுர்களோடு கூடித் தற்காலத்தமிழில் மொழிமுதலாகி வருகின்றன.

டகரம்:- டட்லி, டர்வின், டின், டீசல்' டுபாய், டூப், டைறக்ரர் டொபி, டோபி
ரகரம்- ரதி, ராணி, ரிபன், ரீ, ருசி, ரூபா ரேவதி ரோஹினி.

லகரம்:- லட்டு, லாம்பு, லில்லி, லீலா, லுங்கி, லூஸ், லைடன், லேபர், லோன்றி
றகரம்: றப்பர், றால், றிபன், றீகல், றூள், றைவர், றேசர், றோசா.

இவ்வாறாக முதனிலை பற்றிய முன்னைய இலக்கணமானது தமிழ்நாட்டில் ஏற்பட்ட ஐரோப்பியர் ஆட்சியினாலும், அதன்பயனாயமைந்த பிறமொழிக் கலப்பினாலும், எண்சோதிடம்|போன்றவற்றினடிப் டையில் பிள்ளைகளுக்குப் பெயர்களைச் சூட்டுவதனாலும் எனப்பல காரணங்களால் ''பழையன கழிதலும் புதியன புகுதலும்'' எனும் விதிக்கு முரணற்றுக் காணப்படுகின்றது.

அடுத்தபடியாக மொழியிறுதிநிலைபற்றிய இலக்கணவிதிகள் பற்றிய மாற்றங்களை நோக்குவோம். நன்னூலார் இதுபற்றி கூறுமிடத்து:

''ஆவி ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ,
ழ, ள, மெய்,
சாயும் உகரம் நாலாறும் ஈறே''

எனகிறார் அதாவது பன்னீருயிரும், ஙகரம் தவிர்ந்த மெல்லின மெய்கள் ஐந்தும், இடையின மெய்கள் ஆறும் குற்றியலுகரமும் சேரவரும் இருபத்திநான்கு எழுத்துக்களும் இறுதிநிலையாகும்'' என்கிறார்.

1) பன்னிருயிரும் மொழியீறாவதற்கு உ—ம். கள் வருமாறு:
பல, பலா கிளி, தீ, திரு, பூ, சேன சே கை, நொ, நோ, கௌ.

2) இடையின மெய்கள் ஐந்தும் மொழியீறாக வருவதற்கு உதாரணங்கள் வருமாறு:
உரிஞ், பொருந், மண், மான், மரம்,

3) மெல்லின மெய்கள் ஆறும் மொழியீ றாவதற்கு உதாரணங்கள் வருமாறு: நாய், பால், வாழ், வாள், தெவ், பார்.

4) குற்றியலுகரம் மொழியிறுதியாக வருவதற்கு உதாரணங்கள் வருமாறு: கொக்கு, அஃது.

ஆனால் நாவலர் தமது இலக்கணச் சுருக்கத்திலே 'எகரம் தவிர்ந்த பதினொரு உயிரும், ஙகரம் தவிர்ந்த மெல்லினமெய்கள் ஐந்தும், இடையினமெய்கள் ஆறுமாக மொத்தம் இருபத்தியிரண்டு எழுத்துக்கள் மொழியிறுதியில் வரும்'' என்கிறார். தற்காலத் தமிழிலே ''எகரம்'' இறுதியில் வருதல் வழக்கிலில்லையாதலினால்த்தான் நாவலர் அதனை நீக்கிக் கூறுகின்றார் எனவே ''காலத்தின் தேவைகளையொட்டி எழுகின்ற இலக்கியங்கள் அக்காலத்தில் எழுகின்ற இலக்கணங்களில் தாக்கங்களை ஏற்படுத்தல் தவிர்க்கமுடியாது'' என்பதனை தெரிந்துகொள்ளலாம்.

மேலும் இடைநிலை பற்றிய மாற்றங்களை சிறிது கவனித்துப்பார்க்கின்; நன்னூலார் வருமாறு கூறக்காணலாம்.

> ''கசதப ஒழித்த ஈரேழான் கூட்டம்
> மெய்மயக்கு: உடநிலை ர ழ ஒலித்து
> ஈரெட்டு
> ஆகும்: இவ் இருபால் மயக்கும்
> மொழியிடை
> மேவும்: உயிர்மெய்மயக்கு அளவு
> இன்றே''

''க், ச், த், ப் என்ற நான்கும் தவிர்ந்த மெய்கள் பிறமெய்களோடு கூடும் கூட்டம் வேற்றுநிலை மெய்மயக்கம்'' எனவும், ''ர, ழ் அல்லாத மற்றைய பதிநான்கு மெய்களு தம்மோடுதாம் கூடும் கூட்டம் உடநிலை மெய்மயக்கம்'' எனவும் கூறுகின்றார் நன்னூலாசிரியர் பவனந்தியடிகள்.

1) வேற்றுநிலை மெய் மயக்கத்திற்கான உ-ம். கள் வருமாறு:

காஞ்சி, சங்கு, மாட்சி என்வட்டு தந்தை, அம்பு, ஆய்க, சூர்க, செல்க செவ்யாது. ஆழ்க. கொழ்கை, கற்க, அன்பு.

2) உடனிலை மெய்மயக்கத்துக்குரிய உ-ம் வருமாறு:

பக்கம், ஙாங்ஙனம், அச்சம், மஞ்ஞை, சட்டி, அண்ணா. அர்த்தம், செந்நாய், உப்பு, அம்மை செய்ய, அல்லி, தெவ்வா வெள்ளம், குற்றம், மன்னர்.

இவ் இடைநிலை பற்றிய விதியானது தற்காலத்தமிழிலே மீறப்பட்டுக் காணப்படுகின்றது குறிப்பாக வேற்றுநிலை மெய்மயக்கமாகவராத ககரம், தகரம், பகரம் ஆகிய மெய்கள் இன்றைய தமிழிலே வேற்றுநிலை மெய்மயக்கமாக வருவதற்குப் பின்வரும் எடுத்துக்காட்டுக்கள் தக்க சான்றாகும்

உ-ம் (1) ககரம் வே. மெ. ம. ஆக வரல்
பக்தி, விக்கர், சிக்னல், சுக்ளா

(5) தகரம் வே. மெ. ம. ஆக வரல்
குத்புநாயச, பத்மா, வித்யா, காயத்திரி பெத்லகேம், மத்வாணி

(3) பகரம் வே. மெ. ம. ஆக வரல்
பெப்சி, காப்டன், ஐப்தி, சாப்மன் பெப்ருவரி குப்ளகான்

இவ்வாறாக பண்டைத்தமிழர் பண்பாட்டினையும்' பழந்தமிழிலக் கணமரபினையும் எடுத்துக்காட்டும்; தொல்காப்பியமெனும் தொல்லிலக் கணவாயிலாகவும், இடைக்காலத்தமிழின் இயல்பினை இனிது விளங்கும் பவணந்தியடிகளின் நன்னூலிலக் கணமூடாகவும் தெளிவு படுத்தப்படுகின்ற தமிழிலக்கண விதிமுறைகளானவை: தமிழ் மொழியின்இயல்பானவளர்ச்சி, பிறமொழிக் கலப்பு, உரைநடை வ்ளர்ச்சி, உரைநடையி

லக்கியங்களின் எழுச்சி, பேசுவது போன்றே எழுத வேண்டும் என்ற கருத்துணர்ச்சி முதலான இன்னோரன்ன பல காரணங்கள் காலத்துக்குக்காலம்பல்வேறு மாற்றங்களையும் திருத்தங்களையும் கண்டுவருகின்றன. குறிப்பாக ''எவகையான வேறுபாடும் இன்றி தோன்றிய காலத்தில் இருந்தது போலவே தமிழ்மொழி இருந்துவருகிறது என்று கருதுவோர் தமிழ் வரலாறும், தமிழிலக்கியவரலாறும் அறியாதார் என்றுதான் கூறவேண்டும் இயற்கைச் சத்திகளுக்குவிரோதமாக யாரும் செல்லமுடியாது. ஒரு கடிகாரத்தை நிறுத்தி விட்டால்;காலம் கழியாமல் நின்றுவிடுமா?

என்று கூறிய எஸ் வையாபுரிப்பிள்ளை ஐயா அவர்களின் கருத்தும் முன்னர் கூறப்பட்ட ''பழையன கழித்தலும் புதியன புகுத்தலும் வழுவல கால வகையி னான'

என்ற நன்னூற் சூத்திரத்திற்கு முரண்பாடற்றதொரு தெளிவுடை விளக்கமே ஆகும்

உசாத்துணை நூல்கள்

(1) நன்னூல் காண்டிகையுரை —
பேராசிரியர். அ. மாணிக்கம் எம். ஏ
(2) தமிழ்மொழி இலக்கண இயல்புகள் —
கலாநிதி அ சண்முகதாஸ்

With Best Compliments From

# LINGAM COOL BAR
52, CLOCK TOWER ROAD,
JAFFNA

# புள்ளி விபரவியலின் மாதிரிகள்
# (SAMPLES IN STATISTICS)

செல்வன். வீ. தர்மசீலன்
ஆண்டு - 13
வர்த்தகப் பிரிவு

புள்ளிவிபரயலின் ஒரு ஆய்வு தொடர்பாக அல்லது ஒரு பிரச்சனை தொடர்பாகக் குறிப்பிட்ட ஆய்வுத் தொகுதியில் அல்லது குறிப்பிட்ட வகுப்பிலுள்ள முழுத் தனியன்களையும் தரவுச் சேகரிப்பிற்கு அல்லது ஆய்வுக்கு உட்படுத்த முடியாத சந்தர்ப்பங்களில் மாதிரிகள் (Sample) அவசியமாக அமைகின்றன. மாதிரிகள் ஏன் பயன் படுத்தப்பட வேண்டும்? முழுமையாக ஏன் குடியைப் பயன் படுத்த முடியாது? தெரிவு செய்யப்படும் மாதிரிகள் எவ்வாறு அமைதல் வேண்டும் என்ற பல விடயங்களை இங்கு நோக்குவோம்.

## மாதிரி (SAMPLE)

ஆய்வுத் தொகுதியில் அடங்கிய தனியன்களை முழுமையாகத் தரவு சேகரித்தலுக்கு உட்படுத்த முடியாத சந்தர்ப்பங்களில் அவ் ஆய்வுத் தொகுதியின் முழுப் பண்பையும் தெளிவாக எடுத்துக் காட்டக் கூடிய வகையில் அவ் ஆய்வுத் தொகுதியிலிருந்து தெரிவு செய்யப்படும் உறுப்புக்கள் அல்லது தனியன்கள் மாதிரிகள் எனப்படும். அதாவது பல்வேறு பட்ட புள்ளி விபர முறைகளைப் பயன்படுத்தி ஒரு ஆய்வுத் தொகுதியை அல்லது குடியை முழுமையாக ஆய்வுக்குட்படுத்தப்பட்டு எவ்வாறான முடிவுகளும் தீர்மானங்களும் பெறப்பட முடியுமோ அவ்வாறன முடிவுகளையும் தீர்மானங்களையும் பெறும் பொருட்டு அக்குடியில் இருந்து தெரிவு செய்யப்படுகின்ற ஒரு புள்ளிவிபரத் தொகுதியே மாதிரி என வரையறுக்கப்பட முடியும்.

## மாதிரி எடுத்தலின் நோக்கங்கள் (Objective of sampling)

ஒரு ஆய்வுத் தொகுதியில் அல்லது குடியில் இருந்து பின்வரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு மாதிரிகள் தெரிவு செய்யப்படமுடியும்.


1) ஆய்வுத் திட்டங்களில் ஏற்படும் செலவினங்களைக் குறைப்பதற்கு
2) ஆய்வுத் திட்டங்களில் செலவிடப்படும் நேரத்தைக் குறைப்பதற்கு
3) திறமையான முறையில் தரவு சேகரிப்பை மேற்கொள்வதற்கு
4) ஆய்வுத் திட்டங்களில் எளிமையாகக் கணணிகளைப் பயன்படுத்துவதற்கு
5) தரவு சேகரிப்பில் ஈடுபடும் உத்தியோகத்தருக்கு ஒழுங்கான பயிற்சியை அளிப்பதற்கு
6) ஆய்வுகளில் ஏற்படக் கூடிய நடைமுறைச் சிக்கல்களைக் குறைப்பதற்கு
7) கொள்கை ரீதியாக வரையறுக்கப்பட்ட பல புள்ளி விபரமுறைகளைப் பிரயோகிப்பதற்கு

ஒரு குடியில் இருந்து தெரிவு செய்யப்படுகின்ற மாதிரிகள் அக்குடியை முழுமையாகப் பிரதிபலிக்குமாயின் அவற்றைச் செம்மையான மாதிரித் தெரிவு என்றும், தெரிவு செய்யப்படும் மாதிரிகள் அக்குடியைப் பூரணமாகப் பிரதிபலிக்காவிடின் அம்மாதிரிகள் செம்மைஅற்ற மாதிரிகள்


எனவும் கருதப்படும். இந்தவகையில் மாதிரிகள் தெரிவு செய்யும் போது இயன்ற அளவு தவறுகள் அல்லது வழுக்கள் இடம் பெறாத வகையில் மாதிரித் தெரிவு இடம் பெறுவதை ஆய்வாளன் கண்காணித்தல் அவசியம். ஒரு மாதிரித் தெரிவின்போது பின்வரும் இரண்டு வகையான வழுக்கள் இடம் பெறமுடியும்.

1) மாதிரி எடுப்பு வழுக்கள் (Sampling Error)
2) மாதிரி எடுப்பற்ற வழுக்கள் (Non Sampling Error)

மாதிரி எடுப்புத் தொடர்பான வழுக்கள் எனப்படுவது மாதிரிகளைத் தெரிவு செய்தல் அதிலுள்ள உறுப்புக்களைச் சரியான முறையில் உள்ளடக்கல் போன்றவற்றுடன் தொடர்புடைய வழுக்களைக் குறிப்பதாக அமையும். இத்தகைய வழுக்கள் மாதிரிகளின் எண்ணிக்கையுடன் எதிர்க்கணியத் தொடர்பைக் கொண்டவையாகக் காணப்படும். அதாவது மாதிரியில் அடக்கப்படும் உறுப்புக்களை அதிகரிக்கும்போது இத்தகைய வழுக்கள் குறைவடைவதையும், மாதிரிப் பருமன் எண்ணிக்கையைக் குறைக்கும்போது இத்தகைய வழுக்கள் அதிகரிப்பதையும் காணமுடியும். இதனைப் பின்வருமாறு படத்தில் காட்டலாம்.





மாதிரி எடுப்பற்ற வழுக்கள் எனப்படுவது தவறான திட்டமிடல், அலகுகளின் ஒழுங்கற்ற பதிவுகள், மாதிரி எடுப்பு உத்தியோகத்தர் விடும் தவறுகள் போன்றன மாதிரி எடுப்பற்ற வழுக்களை (Non Sam Fling Error) ஏற்படுத்துகின்றன. இத்தகைய மாதிரி எடுப்பற்ற வழுக்கள் மாதிரிகளின் எண்ணிக்கையுடன் நேர்க்கணியத் தொடர்பைக் கொண்டவையாகக் காணப்படும். அதாவது அதிக மாதிரிப் பருமனைக் கவனத்திற் கொள்ளும்போது மாதிரி எடுப்பற்ற வழுக்கள் அதிகரிப்பதையும் மாதிரிப் பருமன் குறையும்போது மாதிரி எடுப்பற்ற வழுக்கள்குறைவடைவதையும்அவதானிக்க முடியும். இதனைப் பின்வருமாறு படத்தில் காட்டலாம்.




## உத்தம மாதிரிப் பருமன் (Optimal Sample Sise)

ஒரு புள்ளிவிபர ஆய்வினைப் பொறுத்தவரை அங்கு ஏற்படக் கூடிய வழுக்களைக் குறைப்பதையே ஒரு ஆய்வாளன் விரும்புவான். இந்த வகையில் எந்த அளவான மாதிரிகளைத் தெரிவு செய்தால் அவ் ஆய்வில் ஏற்படப்போகும் தவறுகளைக் குறைக்கலாமோ அதுவே உத்தம மாதிரிப் பருமன் எனப்படும். மேலே தரப்பட்ட மாதிரி எடுப்பு வழு, மாதிரி எடுப்பற்ற வழு என்பன ஒரு எதிரான போக்கைக் கொண்டு காணப்படுவதனால் இவற்

றிற்கு இடையே ஒரு இணக்கத்தை ஏற்படுத்தி மொத்தவழு (Total Error) இழிவாக்கப்பட வேண்டும். இவ்வாறு மொத்த வழு இழிவாக்கப்படும் நிலையே உத்தம மாதிரிப் பருமன் எனப்படும். பின்வரும் வரைபடம் இதனைக் காட்டுகின்றது.




Tot l Error = Sampling Error + Non Sampling E ror

$$TE = SE + NSE$$

ஒரு புள்ளிவிபர ஆய்வானது சிறப்பாக அமைவதற்கு சிறந்த முறையில் பக்கசார்பற்ற முறையில் மாதிரிகள் தெரிவு செய்யப்படுதல் மிக முக்கியமானதாகும். இங்கு புள்ளிவிபர அறிஞர்களின் கருத்துப்படி மாதிரியானது குடியின் பருமனில் 10% ற்கும் 25% ற்கும் இடையில் அமைதல் வேண்டும். எனக் கருதுகின்றனர். ஒருமாதிரித் தெரிவை மேற்கொள்ளும்போது பின்வரும் விடயங்கள் கருத்திற் கொள்ளப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

1) ஆய்வினுடைய நோக்கம் திட்டமிட்டு இருக்கவேண்டும்.
2) குடியின் அல்லது ஆய்வுத் தொகுதியின் அமைப்புக் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும்.
3) தரவு சேகரிக்கும் காலம் திட்டமிடப்பட வேண்டும்.
4) பயன்படுத்தப் போகும் புள்ளிவிபர முறை திட்டமிடப்படவேண்டும்.
5) புள்ளிவிபரத் தரவு திரட்டும் பொறுப்பு பக்கசார்பற்ற நடுநிலை மனப்பாங்குடைய நபர்களிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும்.
6) எடுக்கப்படப்போகும் முடிவுகள் அல்லது தீர்மானங்கள் பற்றிய அறிவு.

மேற்கூறப்பட்ட விடயங்களைக் கருத்திற் கொண்டு புள்ளி விபர மாதிரிகளைத் தெரிவு செய்யும்போது அம்மாதிரிகள் முழுக்குடியையும் பிரதிபலிக்கக் கூடியவகையில் அமையும் என எதிர்பார்க்க முடியும்.

## வகுப்புக் கூட்டங்கள் (Class Meeting)

**ஒரு பகுதி பங்குதாரர்கள் தமது பங்குகளை கைமாற்றம் செய்ய அதாவது பங்குகளுக்குரிய உரிமைகளை மாற்றுவதற்காக கூட்டப்படும் இவ்வகையானவர்களில் நான்கில் மூன்று பாகத்துக்கு குறையாத பங்காளர்களின் இசைவுடனேயே உரிமை மாற்றலாம்.**

# இலங்கைப் பொருளாதாரத்தில் தாராளமயமாக்கல் கொள்கைகள்

**காசிப்பிள்ளை கந்தையா**
**சிரேஷ்ட விரிவுரையாளர்**
பொருளியற்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

சுதந்திரத்துக்குப் பிற்பட்ட காலத்தில் இலங்கைப் பொருளாதார அமைப்பு பாரம் பரிய ஏற்றுமதியிலும் இறக்குமதியிலும் தங்கியிருந்தது. அரசாங்கம் விவசாய அபி விருத்தியை ஊக்குவிப்பதற்கான நிலச் சீர் திருத்தங்களையும் குடியேற்றங்களையும் ஏற்படுத்திக் குடியான் விவசாயத்துறையை வழி நடத்தியது. எனினும் வெளிநாட்டு வர்த்தகம், உளநாட்டு விவசாயத் துறை ஆகிய இரண்டும் ஒப்பீட்டளவில் சுதந்திர மாகவும், திறந்ததாகவும் விளங்கியது. பெருந்தோட்டம், பெருந்தோட்டம் அல் லாத் துறைகளில் தனியார் முயற்சிகள் செழித்தோங்கி இருந்தன. பெரியளவான அரசாங்கத் தலையீடுகள் விரும்பப்பட வில்லை. இவ்வாறான அபிவிருத்தி முயற்சி நடவடிக்கைகள் உலக அபிவிருத்தி புனரத் தான வங்கியின் குழுவின் அறிக்கையில் விதந் துரைக்கப்பட்ட ஆலோசனைகளின் படியே மேற்கொள்ளப்பட்டது.

1956 ம் ஆண்டு பொதுத் தேர்தலின் பின்னாக ஏற்பட்ட அரசியல் பொருளாதார கொள்கை மாற்றம் இலங்கையின் பொரு ளாதார அபிவிருத்தி அணுகு முறையிலும் ஒரு பாரிய மாற்றத்தினை ஏற்படுத்தியது. பொருளாதார நடவடிக்கைகளில் அரசாங் கம் நேரடியாக தலையிடுகின்றமையும் ஒரு கலப்புப் பொருளாதார முறைமையும் ஏற் படுத்துவதாகவே 1956 — 1964, 1970 — 1977 காலப்பகுதிகள் அமைகின்றன. அர சாங்கம் தனியே பொருளாதாரக் கட்டு மானங்களான கல்வி, சுகாதாரம், போக்கு வரத்து போன்றனவற்றை அளிப்பதோடு மட்டுமல்லாது நேரடியாக கைத்தொழில் வணிகம், சேவைகள் போன்ற துறைகளில் முதலீடு செய்யவும் ஆரம்பித்தது. இக்காலப் பகுதிகளில் தனியார் துறைக்கான பங்கு முக்கியத்துவம் குறைவானதாகவும் சந்தைப் பொறிமுறை வலு குறைவானதாகவும் காணப்பட்டது. 1960 களில் ஆரம்ப காலப் பகுதிகளிலேயே இலங்கை இறக்குமதிப் பதி லீட்டுக் கைத்தொழில் உபாயத்தையும் கடைப்பிடிக்கத் தொடங்கியது 1965 — 1970 காலப் பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சி அர சாங்கம் ஆட்சிக்கு வந்து வெளிநாட்டு வர்த் தகக் கொடுப்பனவு அம்சங்களில் ஒரு பகுதி முறையான தளர்வுகளையும், கட்டுப்பாடு களையும் கொண்டு வந்தாலும் மீண்டும 1970 ல் பதவிக்கு வந்த கூட்டரசாங்கம் அரசாங்கத் தலையீடுகள் உள்ள கலப்புப் பொருளாதார முறைக்கு மாற்றியது.

அரசாங்கத் தலையீடுகள், கட்டுப்பாடு கள் நிறைந்த பொருளாதார அபிவிருத்தி அணுகு முறையினால் பொருட் சந்தை காரணிச்சந்தை, பணச்சந்தை, வெளிநாட்டு செலாவணிச் சந்தைகளில் உண்மையான நிலைமைகள் பிரதிபலிக்கப்படாது; திரிபு படுத்தப்பட்ட நிலைமைகளே காணப்பட்

காலக் கட்டமைப்புச் சீராக்கல் கொள்கைகளுக்காகவே பண உதவி வழங்குகின்றது. கட்டமைப்பு ரீதியான சீராக்கல் கொள்கைகளின் பிரதான நோக்கம் என்ன வெனில் சென்மதி நிலுவையின் நடைமுறை, மூலதன கணக்குகளை தாராளமயப்படுத்தி ஏற்றுமதி மேம்பாட்டுக் கைத்தொழில் உபாய அபிவிருத்திப் பாதைக்கு வழிவகுத்தலும் சந்தை பொறிமுறையின் ஊடாகத் தனியார் மயப்படுத்தலுக்கான சூழ்நிலையை உருவாக்குதலுமேயாகும். ஒரு பிரிவினர் தாராள மயமாக்கல் கொள்கையை வரவேற்காத போதும் பல அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகள் இதனைக் கடைப்பிடித்து வருகின்றன. இக் கொள்கைகளின் வெற்றி நன்மை - தீமைகள் ஒவ்வொரு நாட்டின் சூழலுக்கும்' அபிவிருத்தி மட்டத்திற்கும் ஏற்ப வேறுபடலாம். சென்மதி நிலுவையின் நடப்புக் கணக்கினையே முதலில் தாராளமயப்படுத்தப்பட வேண்டும் எனவும் வேறு சிலர் மூலதனக் கணக்கே முதலில் தாராளமயப்படுத்தப்பட வேண்டும் எனவும் வாதிடுகின்றனர். எவ்வாறாயினும் ஒரு நாடு உள்நாட்டு மூலதனச் சந்தையை தாராளமயமாக்காது மூலதனக் கணக்கினை தாராளமயப்படுத்த முடியாது என்பதனைக் கவனத்தில் கொள்வது அவசியமானது.

மேற்குறிப்பிட்ட விளக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு கடந்த பதினைந்து வருடங்களாக இலங்கை மேற்கொண்டு வருகின்ற தாராளமயமாக்கல் கொள்கைகளை ஆராய்தல் பொருத்தமானது. முதலாவதாக இலங்கை அரசாங்கம் இறக்குமதி வர்த்தகத்தினை முதலீட்டுப் பொருட்களுக்கும், இடைத்தரப் பொருட்களுக்குமிருந்த அனுமதி இறக்கு முறையை இல்லாமற் செய்து தாராள இறக்குமதியை அனுமதித்தது. இவ் இறக்குமதி தாராளமயப்படுத்தல் புதிய இறுப்பு அமைப்பு புதிய அந்நிய செலாவணி முறை என்பதோடு இணைந்ததாகக் காணப்பட்டது. தாராள இறக்குமதியானது புதிய ஏற்றுமதிக் கைத்தொழில் மேம்பாடு என்பதனை அடிப்படையாகக் கொண்டு கைத்தொழில் அபிவிருத்திக்குத் தேவையான மூலப்பொருட்களையும்முதலீட்டுப் பொருட்களையும் பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பளிப்பதாகவே அமைந்தது. வர்த்தகத் தாராளமயமாக்கல் கொள்கைக்கு ஆதாரமாக இலங்கையில் இதுவரை இருந்து வந்த நிலையான அந்நியச் செலாவணி அமைப்புமுறைஒழிக்கப்பட்டுமிதக்கவிடப்படுகின்ற செலாவணி அமைப்புமுறை அறிமுகப்படுத்தப்பட்டது. 1977 மார்ச்சில் இலங்கை ருபா மீள் மதிப்பேற்றம் செய்யப்பட்டு மீண்டும் 1977 நவம்பரில் இலங்கை ரூபா அமெரிக்க டொலருக்கு எதிராக 42% மதிப்பிறக்கம் செய்யப்பட்டது. செலாவணி முகாமைத்துவ அமைப்பு முறை மாற்றம் செய்யப்பட்டது. மட்டுமல்லாது வெளிநாட்டுப் பொருட்கள் சேவைகளைக் கொள்வனவு செய்யத் தேவையான செலவாணிகளுக்கான கட்டுப்பாடுகளும் தளர்த்தப்பட்டது. இரண்டாவதாக இலங்கை அரசாங்கம் விலைக் கட்டுப்பாடுகளைக்குறிப்பாக பொதுத்துறை முயற்சிகளில் விலையைதாராளமயப்படுத்த வேண்டிய முயற்சிகளினை மேற்கொண்டது. தாராள மயப்படுத்தலின் மூன்றாவது முக்கிய அம்சமாக விளங்கியது மானியங்களை நீக்குவதாகும். அரசாங்கம் நுகர்வோர்களுக்கும், உற்பத்தியாளர்களுக்கும் உணவு, கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, நீர்ப்பாசனம், குடியேற்றத் திட்டங்களை ஏற்படுத்தல் போன்றவற்றினூடாக காலத்துக்குக் காலம் மானியங்களை வழங்கி வந்துள்ளது. இம் மானியங்களை நிறுத்துதல் அரசியல் ரீதியான எதிர் விளைவுகள் ஏற்படும் என்பதால் அரசாங்கம் படிப்படியாகவே இதனை மேற்கொண்டு வருகின்றது. தாராள மயப்படுத்தலின் நான்காவது அம்சமாக காணப்படுவது உள்நாட்டு வெளிநாட்டு முதலீடுகளைக் கவருவதற்கான பல சலுகைகளை வழங்கியமையும் தனியார் மயப்படுத்தலை கொள்கையளவில் ஏற்றுக் கொண்டமையுமாகும்.

டது. இதனால் பொருளாதாரத்தில் சென்மதி நிலுவையில் தொடர்ச்சியான பற்றாக்குறை வேலை வாய்ப்பின்மை. அன்னியச் செலாவணிப் பற்றாக்குறை, பணவீக்க அதிகரிப்பு போன்ற பல்வேறு பிரச்சனைகள் 1960களிலும் 1970 களிலும் தோற்றம் பெற்றிருந்தன.

1977 ல் புதிதாகப் பதவிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் மேற்கூறிய பொருளாதாரப் பிரச்சனைக்கு தீர்வு காணும் முகமாக சர்வதேச நாணய நிதியம் உலக வங்கி ஆகியவற்றின் சிபார்சுடன் கூடிய பேரினப் பொருளியல் கொள்கை வகுத்தலில் புதிய மாற்றங்களைக் கொண்டு வந்தது. 1977 க்குப் பிற்பட்ட காலப் பொருளாதாரச் சீர்திருத்தங்கள் நவ பழம் பொருளியலாளர் சிபார்சு செய்யும் ஒரு பூரண மாதிரியாக அமையாது விட்டாலும் இக் கொள்கைகள் நவ பழம் பொருளியலாளர்களதும் பணப் பொருளியலாளர்களினதும் அடிப்படைத் தத்துவங்களைக் கொண்டுள்ளது. உண்மையில் இம் மாதிரியானது பரந்த திறந்த பொருளாதாரத்தைப் பிரதிநிதித்துவம் செய்கின்றது. அத்தோடு இக் கொள்கையானது பொருளாதாரம் ஒன்றினை உலகின் ஏனைய நாடுகளின் பொருளாதாரங்களோடு ஒன்றிணைப்பதன்றால் நாடுகள் ஒப்பீட்டு நய மாதிரி அடிப்படையில் உற்பத்தி முயற்சிகளை மேற்கொள்ள வழியளிக்கிறது.

சர்வதேச நாணய நிதியம் உலக வங்கி என்பவற்றினால் வழிப்படுத்தப் படுகின்ற தாராளமயமாக்கல் கொள்கை கூட்டு என்பதில் பல கூறுகள் உள்ளடக்கப்பட்டுள்ளது இவை தற்போது காணப்படுகின்ற பொருளாதாரப் பிரச்சனைக்கு தனியார் துறையின் பங்களிப்பு அதிகரிப்பதன் வாயிலாகத் தாராளமயமாக்கல் எவ்வெவ் வழிகளில் பங்களிக்க முடியும் என்பதனையே விளக்குகின்றன.

இக் கட்டுரையில் இவ் விடயத்தில் வளர்ச்சி அடைந்து வருகின்ற நாடுகளினால் மேற்கொள்ளப்படுகின்ற உறுதியாக்கல் கட்டமைப்புரீதியான சரிப்படுத்தல் திட்டங்கள் என்பவற்றின் கருத்தியல் ரீதியான விளக்கத்தினையும், நோக்கத்தினையும் சுருக்கமாக விளக்குதல் பொருத்தமானதாகவும் உபயோகம் உள்ளதாகவும் அமையும் உறுதிப்படுத்தல் கட்டமைப்பு ரீதியான சீராக்கல் கொள்கைகள் தனியே சர்வதேச நாணய நிதியம், உலகவங்கி ஆகியவற்றைத் திருப்திப்படுத்தி நீண்ட கால. குறுங்கால உதவிகளைப் பெறுவதோடு மட்டுமல்லாது அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகள் ஏனைய உதவி வழங்குனர்களிடமிருந்து இரு புடை உதவிகளையும் பெற்றுக் கொள்ளவும் உதவும். கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக அனேகமான அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகள் பிரதான சந்தைகளில் சமமின்மையாலும், சென்மதி நிலுவைப் பிரச்சனைகளாலும் வேகமான பண வீக்கப் போக்கினாலும், தொடர்ச்சியான வேலையின்மையாலும் பெருமளவு வருமானச் சமமின்மையாலும், வறுமைத் தாக்கம் அதிகரித்தல் போன்ற பிரச்சனைகளால் துன்பத்தை அனுபவித்து வருகின்றன இவ்வாறான பிரச்சனைகளுக்கு பரிகாரம் காணும் வகையில் சர்வதேச நிறுவனம் - உலகவங்கி அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளுக்குப் பண உதவிகளை வழங்கி வருகின்றன உறுதியாக்கலோடு இணைந்த கட்டமைப்பு ரீதியான சீராக்கல் கொள்கைகள் பல அபிவிருத்தியடைகின்ற நாடுகளில் வரையறுக்கப்பட்ட வெற்றியளிப்பதாகவே காணப்படுகின்றது. உறுதியாக்கல் கொள்கைகள் சர்வதேச நாணய நிதியத்தின் வழி நடத்தலுடன் சந்தைகளில் காணப்படுகின்ற நிறைவின்மையை நீக்கல் சென்மதி நிலுவையின் உடனடி பழுவை நீக்குதல், உறுதியான விலை மட்டத்தை அடைதல் போன்றவற்றிற்கான குறுங்கால நடவடிக்கையாகவே அமைகின்றது. மாறாக உலக வங்கி நீண்ட

மேற்கூறிய நடவடிக்கைகள் இலங்கையின் தாராளமயப்படுத்தல் கொள்கையின் வெளிப்படையான கூறுகளாகும். இலங்கையின் தாராளமயப்படுத்தல் படிப்படியாகவே செய்யப்பட்டு வருவதால் முழுமையான தாராளமயப்படுத்தலானது காலம் செல்லச் செல்லவே மேற்கொள்ளப்பட வேண்டி இருந்தது. இக் கட்டுரையின் பிரதான நோக்கம் தாராள மயப்படுத்தல் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டதால் ஏற்பட்ட பேரினப் பொருளாதார விளைவுகளை மதிப்பீடு செய்தலேயாகும். அதாவது தாராள மயப்படுத்தல் நடவடிக்கைகளினால் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சி குறிப்பாக ஏற்றுமதி மேம்பாட்டுக் கைத்தொழில் துறையின் வளர்ச்சியையும் தாராள மயப்படுத்தல் பணவீக்கப்போக்குகளை எவ்வாறு மாற்றியுள்ளது. வேலையின்மையில் வருமானப் பங்கீடு வறுமை என்பவற்றில் எவ்வாறான பாதிப்பினை ஏற்படுத்தி உள்ளது என்பதனை மதிப்பீடு செய்தலேயாகும். கிடைக்கக் கூடிய புள்ளிவிபரங்களை ஆதாரமாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட நிலைமைகளை அறிந்து கொள்ள முடியும்.

இலங்கையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதமானது 1970 . 1977 காலப்பகுதியில் வருடாந்தம் 2.9 வீதமாகக் காணப்பட்டு தாராளமயமாக்கல் படுத்தலில் 1977 - 1990 வருடாந்தம் 4 . 8 வீதமாக அமைந்தது. இது முன்னைய காலப் பகுதியில் ஏற்பட்ட வளர்ச்சி வீதத்தை விட அதிகமானதென்பதும் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி ஆகியனவற்றின் நோக்கில் திருப்தியளிக்கக் கூடியதாகக் காணப்படுகின்ற தென்னும் இவ் வளர்ச்சியானது புதிதாக கைத்தொழில் வளர்ச்சியை ஏற்படுத்திய நாடுகளின் மாறுநிலைக் காலத்தில் 6 - 9 % வளர்ச்சியை விடக் குறைந்ததாகவே காணப்படுகின்றது. இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் தாராள மயமாக்கலின் தாக்கம் பல்வேறு துறைகளினூடான வளர்ச்சியினாலே ஏற்பட்டுள்ளது என்பதையும் குறிப்பிடல் பொருத்தமானது. இக் காலப்பகுதியில் (1977 - 1990) சேவைத் துறையின் வளர்ச்சி வருடாந்தம் 5 . 4 % மாகவும் ஏனைய துறைகளை விட முன்னணியிலும் காணப்பட்டது. தயாரிப்புத் துறை (ஏற்றுமதிப் பயிர்கள் பதனிடல் உட்பட) சராசரியாக வருடாந்தம் 5 . 3 சதவீதமாகக் காணப்பட்டது. விவசாயத்துறையில் ஏற்பட்ட வளர்ச்சியானது வருடாந்தம் (1977-1990) சராசரியாக 3 . 8 % ஒரு சாதாரண வளர்ச்சியே ஏற்பட்டது. பெருந்தோட்டத் துறையில் வளர்ச்சி ஏற்படவில்லை. பெருந்தோட்ட உற்பத்தி வளர்ச்சியில் ஏற்பட்ட வீழ்ச்சியை பெருந்தோட்டமல்லாத துறையில் குறிப்பாக நெல் உற்பத்தித் துறையின் வளர்ச்சியால் ஈடுசெய்யப்பட்டது. இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் வர்த்தகத்தில் ஈடுபடுகின்ற துறைகளான விவசாயம், கைத்தொழில் துறைகளினை விட ஏனைய துறைகளை உள்ளடக்கிய வர்த்தகத்தில் ஈடுபடாத துறைகளின் பங்களிப்பு உயர்வாக அமைவதனைக் காணக் கூடியதாக உள்ளது. இவ்வாறான போக்கு இலங்கையின் பொருளாதார விரிவாக்கத்திற்கான சிறந்த சமிக்ஞையாகக் கொள்ள முடியாது. நிலைத்து நிற்கக் கூடிய பொருளாதார அபிவிருத்தியை அடைவதற்கு கைத்தொழில், விவசாயம் ஆகிய இரு துறைகளும் முதன்நிலைத் துறைகளாக வளர்ச்சி அடைந்து செல்ல ஏனைய வர்த்தகத்தில் ஈடுபடாத துறைகள் அவற்றினை பின் தொடர்ந்து செல்ல வேண்டும். எவ்வாறாயினும் தாராள மயமாக்கல் கொள்கை கடைப்பிடிக்கப்பட்ட காலப்பகுதியில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி திருப்திகரமானதாகவும் முன்னைய காலப்பகுதிகளோடு ஒப்பிடுகின்ற போது முன்னேற்றமானதாகவும் காணப்படுகிறது. இத்தகைய வளர்ச்சிக்குப் பல காரணிகள் பங்களிப்பைச் செய்துள்ளன. இவற்றில் குறிப்பிடக் கூடியவைகளாக உள்

நாட்டு மூலதன ஆக்கம், தொழிலாளர்களின் உற்பத்தித் திறனில் ஏற்பட்ட அதிகரிப்பு. தொழினுட்ப முன்னேற்றம், ஆராய்ச்சிகளின் முன்னேற்றம் என்பன காணப்படுகின்றன. 1977 — 1990 காலப்பகுதியில் இலங்கையின் பணவீக்கம் குறிப்பிடக் கூடியளவானதாகக் காணப்பட்டது. கொழும்பு நுகர்வோர் சுட்டெண், மொத்த விலைச் சுட்டெண். மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருங்கி ஆகிய வற்றின் வருடாந்த சராசரி அதிகரிப்பானது முறையே 13.3 % 13.6 % 12.5 % மாக அமைந்தது. இலங்கைப் பொருளாதாரம் உலகப் பொருளாதாரத்தோடு இணைக்கப்பட்டதனால் உலகசந்தைகளினூடாக பணவீக்கம் இலங்கைப் பொருளாதாரத்தில் ஏற்படுத்தப்பட்டது எனவும் விவாதிக்க முடியும் எனினும் இலங்கையின் பணவீக்கமானது பல்வேறு காரணிகளின் கூட்டு விளைவாகவே ஏற்பட்டது. முதலாவதாக தொடர்ச்சியாக வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய வங்கித் துறையில் இருந்து நிதியீட்டம் செய்யப்பட்டமை இலங்கைப் பொருளாதாரத்தின் பணவீக்கத்தினை ஏற்படுத்திய காரணியாகும். இரண்டாவதாகப் பொருளாதாரத்தில் பலதுறைகளில் விலைக் கட்டுப்பாடுகளை நீக்கியமையும் வீக்கத்தினை ஏற்படுத்திய காரணங்களில் ஒன்றாகக் கருத முடியும் இலங்கையின் பணவீக்கமானது மேற் கூறப்பட்ட சுட்டெண்களினால் அளவீடு செய்யப்படுகின்ற போதும் இச்சுட்டெண்கள் வெவ்வேறு முறையியல்களினால் மதிப்பீடு செய்யப்படுவதால் இவற்றினை ஒப்பீடு செய்வதும் இச்சுட்டெண்கள் உண்மையான விலை வீக்கத்தினை எந்தளவு பிரதிபலிக்க முடியும் என்பதும் கேள்விக் குறியாக இருக்கின்ற போதும் திட்டமிடலாளர்கள் கொள்கை வகுப்போர்கள் வீக்கத்தினைக் கட்டுப்படுத்தக் கூடிய பேரினப் பொருளாதாரக் கொள்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இலங்கையின் பொருளாதாரப் பிரச்சனைகளில் வேலையின்மையும் ஒரு பாரிய பிரச்சனையாகக் காணப்படுகின்றது. வேலையின்மைக்கான காரணங்களுள் அதிக பலம் வாய்ந்தமையாக அமைவது இருகாரணிகளாகும். முதலாவது தொழிலாளர் படையில் ஏற்பட்ட அதிகரிப்பாகும் 1960 –1970 காலப்பகுதியொட்டாந்தம் சராசரியாக இலங்கையின் சனத்தொகை 2% மாகவும் பின்னைய தசாப்தத்தில் இவ்வதிகரிப்பு வீதம் 1.5% மாகவும் விளங்கியது. இதனால் 1963 — 1971 காலப் பகுதியில் தொழிலாளப் படையில் ஏற்பட்ட அதிகரிப்பானது 3.3 % மாகவும் 1971 — 1981 காலப்பகுதியில் இவ்வதிகரிப்பு 2.5 % மாகவும் காணப்பட்டதால் வேலையின்மை அதிகரிப்பு படிப்படியாகக் கூடிச்சென்றது இரண்டாவதாக வேலையின்மையானது இலங்கையின் பொருளாதார அமைப்பிலிருந்தே எழுகின்றது அதாவது பொருளாதாரக் கட்டமைப்பில் மாற்றத்தினை ஏற்படுத்தக் கூடிய அணைத்தினையும் உள் நடக்கக் கூடிய முயற்சிகள் பல தசாப்தங்களாக மேற்கொள்ளப்படாமையால் வேலை வாய்ப்பினை உருவாக்கக் கூடிய பொருளாதார முயற்சிகள் ஏற்படவில்லை. மேற் குறிப்பிட்ட இரு காரணிகளையும் விட வளர்ந்து வரும் தொழிலாளர் படையினை உள்வாங்கும் தன்மையுள்ள மூலதன ஆக்கம் ஏற்படவில்லை.

இலங்கையின் நிறுவன ரீதியாக ஒழுங்கு செய்யப்பட்ட. ஒழுங்கு படுத்தப்படாத துறைகளில் வேலை பற்றிய தகவல்கள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு மதிப்பீடுகளில் இருந்தே தகவல் பெறப்படுவதால் இவற்றினை ஒப்பிடலும் கடினமானது. 1971 ல் மேற்கொள்ளப்பட்ட குடிசன மதிப்பீட்டு அறிக்கையின்படி இலங்கையின் வேலையின்மை 15.6 சதவீதமாகக் காட்டப்பட்டுள்ளது. இதே அறிக்கை 1981ல்

வேலையின்மையின் அளவினை 17.9% எனக் குறிப்பிடுகின்றது. வேறு சில அறிக்கைகள் இவற்றினை விட உயர்வாகவே இலங்கையில் வேலையின்மை காணப்படுகின்றது. எனச் சுட்டிக் காட்டுகின்றன. தாராளமயமாக்கல் நடவடிக்கைகளின் விளைவாக வேலையின்மையினை அளவானது 14%மாகக் குறைக்கப்பட்டுள்ளது எனக் கூறப்படுகின்றது. வேலை உருவாக்கம் என்ற பிரதான குறிக்கோள் கைத்தொழிலாக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது எனினும் திட்டமிடலாளர்கள் எதிர் பார்த்தது போல் தாராளமயப்படுத்தல் வேலை உருவாக்கம் ஏற்படவில்லை.

நீண்ட காலமாக இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வந்த சமூக நலன்புரிக் கொள்கையின் விளைவாக இலங்கையின் பௌதீக வாழ்க்கைச் சுட்டெண்களில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதோடு இலங்கையை ஏனைய அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளுக்கு முன்னுதாரணம் காட்டுமளவு பருமட்டான பிறப்பு விகிதம், பருமட்டமான இறப்பு விகிதம், சிசு மரணவீதம் என்பவற்றில் குறைவும், ஆயுட்கால எதிர்பார்க்கை எழுத்தறிவு வீதம் என்பனவற்றில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. வருமானப் பங்கீடு வறுமை என்ற அம்சங்களை அவதானிக்கின்றபோது தாராளமயமாக்கல் காலப்பகுதியில் முன்னைய காலப்பகுதிகளோடு ஒப்பிடுகின்றபோது முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளது என்று கூற முடியாது தாராளமயமாக்கல் கொள்கை அமுலாக்கத்திற்குப் பின்பாக வருமானப் பங்கீட்டுச் சமமின்மையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதோடு வறுமையின் தாக்கமும் அதிகரித்துள்ளது. அரசாங்கம் ஜனசவிய திட்டத்தினை ஏற்படுத்தி வறுமையைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள போதும் இதனது பலாபலன்கள் எதிர்பார்த்த அளவிற்கு வெற்றி அளிக்குமா என்பது சந்தேகமாகவேயுள்ளது.

தொகுத்து நோக்குகின்றபோது இலங்கையில் தாராளமயப்படுத்தல் கொள்கைகள் தனியார் துறை முயற்சிகளை ஊக்குவித்து சந்தை சக்திகளின் வழியாகப் பொருளாதார அபிவிருத்தியை மேற்கொள்ள எடுக்கப்பட்ட முயற்சியாகக் கருதப்பட்டது இந்நடவடிக்கைகளினால் பொருளாதார வளர்ச்சி வீதம், வேலையின்மை என்பவற்றில் திருப்தி அளிக்கக் கூடிய முன்னேற்றங்கள் காணப்பட்டபோதும் பணவீக்கம், வருமானச் சமமின்மையைக் குறைத்தல் வறுமையைத் தணித்தல் ஆகிய அம்சங்களில் நிலைமை எதிர்பார்த்த வெற்றியை அளிக்கவில்லை.

# ஏற்பாடுகளும் ஒதுக்கங்களும்
# PROVISIONS AND RESERVES


செல்வி. அ. ரஜனி
ஆண்டு - 13
வர்த்தகப் பிரிவு


## ஏற்பாடு அல்லது பொறுப்பொதுக்கம் PROVISION

ஒரு வியாபார நிறுவனத்தில் எதிர்காலத்தில் நிச்சயம் நிகழக்கூடும் எனக் கருதக் கூடியதும் அதன் அளவு எவ்வளவாக இருக்கும் என திட்ட வட்டமாக கூறமுடியாதது மான யாதேனும் இழப்பு அல்லது நட்டத்துக்காக முன்கூட்டியே இலாபத்தில் இருந்து வேறாக்கி வைக்கும் தொகையைக் குறிக்கும். இது இலாப நட்டக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு உரிய பொறுப்பொதுக்க கணக்கில் செலவு வைப்பதன் மூலம் உருவாக்கப்படும். இந்த ஏற்பாடு இலாபம் வந்தாலும் சரி நட்டம் வந்தாலும் சரி கட்டாயமாக உருவாக்கப்படும் என்பதால் இவை இலாபத்திற்கு எதிரான செலவினங்களாகக் கொள்ளப்படும் இதனை பதிலீட்டு ஒதுக்கம் எனவும் அழைக்கப்படுவதுண்டு.

**உதாரணம்:-** ஐயக் கடன் ஏற்பாடு, கழிவு, ஏற்பாடு, தேய்மான ஏற்பாடு, என்பவற்றைக் குறிக்கலாம்.

இப் பொறுப்பொதுக்கமானது மூவகையாகப் பிரிக்கப்படும்.

1) பொறுப்பு இருப்பது தெரியும். எனினும் அதன் எல்லை தெரியாதமையினால் உத்தேச அடிப்படையில் செய்ய வேண்டிய பொறுப்பு.

2) பல வருட காலத்திற்குள் பதிவளிக்கப்படும் சலவைச் சமப்படுத்துவதற்காகப் பாவிக்கப்படும் பொறுப் பொதுக்கம்

உ+ம்:- திருத்தங்கள், புதுப்பித்தலுக்கான பொறுப்பொதுக்கம்.

3) சொத்துக்களின் பெறுமான வீழ்ச்சிக்கான பொறுப்பொதுக்கம், கழிவுக்கான பொறுப்பொதுக்கம்.

## ஒதுக்கம் அல்லது காப் பொதுக்கம் RESERVE

ஒதுக்கம் என்பது ஏற்பாடல்லாத ஒரு மாற்றம் ஆகும். அதாவது ஒரு நிறுவனம் எதிர்காலத்தில் முயற்சியை விரிவு படுத்துவதற்காக நிதிநிலமையை ஸ்திரப்படுத்தும்பொருட்டும், எதிர்பாராத நிகழ்ச்சிகளினால் ஏற்படு தேவையினை சமாளிக்கும்பொருட்டும் அந்நிறுவனத்தின் இலாபத்தில் இருந்து ஒதுக்கி வைக்கப்படும் தொகையாகும் அதாவது நிறுவனங்களின் மூலம் பல்வேறு வழிகளில் ஈட்டப்படும் இலாபம் உரிமையாளருக்கு உரியதாகும். எனினும் இவ் இலாபமானது உரிமையாளருக்கு இலாபமாக பகிர்ந்தளிக்கப்படாது, முயற்சியின் உள்ளேயே தேக்கி வைத்திருப்பதே ஒதுக்கமாகும். எனவே தான் பகிரப்பட முடியாது. எனக் கருதப்படும் இலாபங்களிலிருந்து அல்லது பிற நடவடிக்கைகளினால் கிடைக்கப்பெற்று ஒதுக்கி வைக்கப்பட்டதான தொகைகள் ஒதுக்கமாகும். இவ் ஒதுக்கமானது இலாப நட்ட பகிர் கணக்கில் வரவுப் பதிவும், ஒதுக்க கணக்கில் செலவு பதிவும் செய்யப்படுவதன் மூலம் ஏற்படுத்தப்படுகின்றது. இதனை காப் பொதுக்கம் எனவும் அழைப்பார்கள். இவ் ஒதுக்கமானது பல நோக்களின் அடிப்படை

யில் செய்யப்படலாம். ஆனால் நிட்சயமாக அவை எதிர்காலத்தில் நிகழும் என்று கூற முடியாது. சில வேளைகளில் நிகழாதும் போகலாம். உதாரணமாக களவு அபாயம், தீ அபாயம் என்பவற்றுக்காக 'ஒதுக்கங்களை மேற்கொள்ளும் போது அவை எதிர்காலத்தில் நிகழலாம் அல்லது நிகழாது போகலாம். இவ்வொதுக்கங்கள் நட்டம் ஏற்படுத்தும் இடத்து மேற்கொள்ளப்படுவதில்லை. இலாபங்கள் மிகையாக இருக்கும் இடத்து மட்டும் மேற் கொள்ளப்படும். உ-+ம் பொதுஒதுக்கம், சரக்கு பிரதியிடுகை ஒதுக்கம் இவ் ஒதுக்கங்கள் இரு பெரும் பகுதிக்குள் உள்ளடக்கப்பட முடியும் அவையாவன,

1) மூலதன ஒதுக்கம்
2) வருமான ஒதுக்கம்

## மூலதன ஒதுக்கம் Capital Reserve

ஒரு கம்பனியின் மூலதனம் தொடர்பாக ஏற்படக் கூடியதும் பங்குதாரருக்கு பங்கு இலாபமாக பகிர்ந்தளிக்க முடியாததுமான இலாபங்கள் மூலதனஒதுக்கமாகும். வியாபார நிறுவனம் ஒன்றிலே வியாபார இலாபத்திலிருந்தே பங்கு இலாபம் வழங்கப்பட வேண்டும். எனவும் மூலதனச்சொத்துக்களில் இருந்தும், மூலதன வளங்களில் இருந்தும் எழுவதான மூலதன ஒதுக்கங்களில் இருந்து பங்கு இலாபம் வழங்கப்படலாகாது எனவும் கம்பனி கட்டளைச் சட்டம் பணிக்கிறது.

கம்பனியின் இலாபங்கள் மூலதன ஒதுக்கங்களாக பின்வரும் காரணங்களினால் ஏற்படுத்திக் கொள்கின்றன.

1) இத்தகைய இலாபங்களை பகிரக் கூடாது என ஏதேனும் சட்டங்கள் கூறி இருத்தல்.

2) இலாபங்கள் ஏதேனும் பகிரப்படக் கூடியவை அல்ல என கம்பனி இயக்குனர் முடிபு செய்து இருத்தல்.

இவ்வாறான காரணங்களால் பகிரக் கூடிய தன்மையுடைய ஒதுக்கங்கள் பகிரப்படாத நிலைக்கு மாற்றப்படுவதனால் வருமான ஒதுக்க நிலையிலிருந்த இலாபமானது மூலதன ஒதுக்கத்திற்கு மாற்றமடைகின்றது

இவ் மூலதன ஒதுக்கமானது பின்வரும் மூன்று பகுதிக்குள் அடக்கப்பட முடியும் நிறுவன ஒதுக்கம்:-

இது சட்டத்தினுடைய ஏற்பாட்டின்படி கிடைக்கும் ஒதுக்கமாகும். 1982ம் ஆண்டின் 17ம் இலக்க கம்பனி சட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட ஒதுக்கமாகும். உதாரணம்

(அ) பங்கு உயர்விலை (பங்கு வட்டம்)
(ஆ) மூலதன மீள ஒதுக்கல் நிதி (C. R. R. F)

மீட்கத்தக்க முன்னுரிமைப் பங்குகளை மீட்டும்போது மீட்கப்படும் பங்குகளுக்கு ஏற்ப புதிய பங்குகளை வழங்காவிட்டால் தேவைப்படுகின்ற பற்றாக் குறைக்கு ஒதுக்கங்களில் (வருமான ஒதுக்கம்) இருந்து பணம் பெறப்படும். இவ்வாறு ஒதுக்கங்களில் இருந்து பணம் பெறுவதனை இலாபத்திலிருந்து முன்னுரிமைப் பங்குகளை மீட்டல் எனப்படும். இவ்வாறு இலாபத்திலிருந்து மீட்கப்படும் முன்னுரிமைப் பங்குகளின் முகப் பெறுமானத்தின் அளவுக்கு சட்டத்தின்படி கட்டாயமாக ஏற்படுத்த வேண்டியதான ஒதுக்கமே மூலதன மீள் ஒதுக்கல் நிதி எனப்படும். இது இங்கிலாந்து கம்பனிச் சட்டத்தின் 58 வதுபிரிவின் படியும், இலங்கைக் கம்பனிச் சட்டத்தின் 47 வது பிரிவின் படியும் ஏற்படுத்தப்படுவதானால் " சட்டத்தின் சிருஷ்டி " எனவும் இதனை அழைப்பார்.

## 2. வியாபாரமல்லா மிகை

கணக்காளர் கொள்கையின் அடிப்படையில் ஒதுக்கப்படும் ஒதுக்கமே இதுவாகும். இது கம்பனியை பொறுத்த மட்டிலேயே மூலதன இலாபமாக அதாவது ஒதுக்கமாக கருதப்படுகிறது.

உதாரணம்:-

i) நிலையான சொத்துக்களை விற்பனை செய்வதால் ஏற்படும் இலாபம்.

ii) மீள் மதிப்பீட்டின் போது தோன்றும் மிகை.

iii) உருவாக்கலுக்கு முன்னரான இலாபம் இயங்கி கொண்டிருக்கும் தாபனத்தை அல்லது நிறுவனத்தை கம்பனியாக மாற்ற முற்படும். போ உடனடியாக மாற்ற முடியாது. இவ்வாறுதொடர்ந்து இயங்கிக்கொண்டிருக்கும் நிறுவனத்தினை இடை நிறுத்தி வைக்கவும் முடியாது எனவே சில சட்டங்களை கம்பனி சட்டத்தின் கீழ் பதிவு செய்து கம்பனியாக மாற்றும்வரை அந் நிறுவனம் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கும். எனவே கம்பனியாக மாற்றப்பட தீர்மானிக்கப் பட்ட நாள் தொடக்கம் சட்டப்படி கம்பனியாக மாற்றப்படும் நாள்வரை நிறுவனம் தொடர்ந்து இயங்கி உழைக்கும் இலாபம் உருவாக்க முன் உழைத்த இலாபம் ஆகும். இவ் இலாபம் உபகாரப் பங்கு வழங்கல், மூலதன குறைப்பு என்பவற்றிற்குப் பயன் படுத்தப்படும்.

## 3. விசேட ஒதுக்கம்.

விசேட தேவைக்கு என வர்த்தக முயற்சியின் போது முகாமைப் பணிப்பாளரினால் இலாபத்தில் இருந்து ஒதுக்கப்படும் தொகையையே விசேட ஒதுக்கம் ஆகும். உ+ம்

1. இயந்திரம் உபகரணம் மீள் அமைப்பதற்கான ஒதுக்கம்.
2. கட்டிட விரிவாக்க ஒதுக்கம்.
3. தேயிலை இறப்பர், மீள்நடுகை ஒதுக்கம்

## வருமான ஒதுக்கம் - Revenue Reserve

பங்குதாரரிடையே பங்கு இலாபமாக பகிரக்கூடிய இலாபங்கள் வருமான ஒதுக்கமாகும். பகிரப்படக் கூடிய காப்பொதுக்கங்கள் அதாவது இலாபங்களில் இருந்து நிறுத்திவைக்கப்பட்டவையும் இலாப நட்ட பகிர் கணக்கிற்கு மாற்றப்பட்டு பங்கு இலாபமாக பகிரக் கூடியவையான ஒதுக்கங்கள் வருமான ஒதுக்கமாகும். வருமான ஒதுக்கங்களாக பொது ஒதுக்கம், பங்கு இலாபம் சமப்படுத்தும்நிதி, முன்னுரிமை பங்கு மீட்பு ஒதுக்கம், நிலையான சொத்து பிரதியிடுகை ஒதுக்கம் என்பவற்றைக் குறிப்பிடலாம். இவ்வருமான ஒதுக்கம் பின் வருமாறு பிரிக்கப்பட முடியும்.

1) சாதாரண ஒதுக்கம்:-

இதற்கு உதாரணமாக பொதுஒதுக்கம், இலாப நட்டக் கணக்கு மீதி என்பவற்றைக் குறிப்பிடலாம்.

2) விசேட ஒதுக்கம்:-

வர்த்தக முயற்சியின் போது ஏற்படுகின்ற விசேடத் தேவைகளுக்காக முகாமையின் பணிப்பாளரால் இலாபத்தில் இருந்து எடுக்கப்படும் பகுதி விசேட ஒதுக்கமாகும். எனினும் இது பங்குதாரருக்கு பகிர்ந்தளிக்கக் கூடிய தன்மையைக் கொண்டிருக்கும். உதாரணமாக பங்கிலாபச் சமப்படுத்தும் நிதி, வரி சமப்படுத்தும் ஒதுக்கம் என்பவற்றைக் குறிப்பிடலாம்

பங்கிலாபம் சமப்படுத்தும் நிதி என்பது பொதுக் கம்பனிகள் தாம் உழைக்கின்ற இலாபங்களில் முன்னுரிமை பங்கு தாரருக்கு தீர்மானிக்கப்பட்ட இலாபங்களை வழங்கி

விட்டு மிகுதி எஞ்சிய இலாபத்தில் சாதாரண தரப் பங்குதாரருக்கு ஏற்கக் கூடிய தொகைகளை வழங்கி விட்டு எதிர் காலத் தேவைக்கு பயன்படுத்துவதற்கு என ஒதுக்கி வைக்கப்படும் இலாபத் தொகையைக் குறைக்கும். இது இலாபங் கூடிய காலங்களில் கூடிய பங்கு இலாபங்களையும், இலாபம் குறைந்த காலங்களில் குறைந்த பங்கு இலாபங்களையும் சாதாரணதரப் பங்குதாரருக்கு வழகுவதனால் குறித்த கம்பனி மீதும் நிர்வாகத்தின் மீதும் ஐயம் ஏற்படு வதனை தவிர்க்கவே பங்கு இலாப சமப்படுத்தும் நிதி பேணப்படுகின்றது இது பங்கு இலாப செம்மையாக்கல் ஒதுக்கம் எனவும் கூறப்படும்.

### பொறுப்பொதுக்கத்திற்கும் காப்பொதுக்கத்திற்கும் உள்ள வேறுபாடுகள்

1) பொறுப் பொதுக்கம் கட்டாய ஏற்பாடாக அமையும் போது காப்பொதுக்கம் கட்டாய ஏற்பாடாக கருதப்படுவதில்லை.

2) பொறுப் பொதுக்கம் இலாப நட்டக் கணக்கிலும் காப்பொதுக்கம் இலாப நட்டப் பகிர் கணக்கிலும் முறையே பதிவளிக்கப்படுவதும் ஒதுக்கப்படுவதுமாக காணப்படும்.

3) பொறுப் பொதுக்கம் செலவுகளும் நட்டங்களுக்குமாக ஏற்பாடு செய்யப்படும். ஆனால் காப் பொதுக்கம் வியாபார நிறுவனத்தின் எதிர்கால வளர்ச்சிக்காக ஒதுக்கப்படும்.

4) பொறுப்பொதுக்கம் இலாபம் ஏற்பட்டாலும் சரி ஏற்படாவிட்டாலும் சரி ஒதுக்கப்படும். ஆனால் காப்பொதுக்கம் இலாபம் ஏற்பட்டால் மாத்திரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

5) பொறுப் பொதுக்கங்கள் ஐந்தொகை சொத்திலிருந்து கழித்துக் காட்டப்படும். ஆனால் காப் பொதுக்கம் ஐந்தொகையில் ஒரு பொறுப்பாக காட்டப்படும்.

### இரகசிய ஒதுக்கம்

ஒரு நிறுவனத்தின் கணக்குப் புத்தகங்களில் அல்லது ஐந்தொகையில் நிறுவனத்தின் வளங்கள் அல்லது சொத்துக்கள் வெளிக்காட்டப்படாது மறைத்து வைக்கப்பட்டுள்ள ஒதுக்கங்களே இரகசிய ஒதுக்கம் அல்லது மறைவொதுக்கம் எனப்படும். சொத்துகளின் பெறுமதியைக் குறைத்து மதிப்பிடுவதன் மூலம் அல்லது புத்தகங்களில் காட்டாது விடுவதன் மூலம், பொறுப்புகளை உயர்வாக மதிப்பிடுதல், காப்பொதுக்கங்களை பொறுப் பொதுக்கங்களாகக் காட்டுதல் போன்ற காரணிகளால் இவ் இரகசிய ஒதுக்கம் ஏற்பட முடியும். இந்த மறை ஒதுக்கமானது திட்டமிட்ட செயற்பாட்டின் மூலம் நிறுவன நிர்வாகத்தினரால் ஏற்பட்டதாகும்.

இவ் இரகசிய ஒதுக்கமானது பல வழிகளில் ஏற்படுத்தப்படக் கூடியதாக உள்ளது. இவ்வாறு பல வழிகளாலும் ஏற்படுத்தப்படக் கூடியவையாக இருப்பினும் இவ ஒதுக்கத்தினை எல்லா நிறுவனங்களும் ஏற்கும் என்று கூற முடியாது. பெரும்பாலான நிறுவனங்கள் இவ் ஒதுக்கத்தை ஏற்படுத்த விரும்புவதில்லை. இவ்வாறு விரும்பாவிடினும் ஒரு சில சாதகமான காரணிகளும் இதற்கு கூறப்படுகின்றன

இவ் மறை ஒதுக்கத்திற்கு பல கோடி பவுண் பெறுமதியான காணி கட்டிடப் பெறுமதி இங்கிலாந்து வங்கியின் ஐந்தொகையிலே காட்டப்படாது விடப்பட்டு உள்ளதனை உதாரணமாக கூறுவர்.

### மறைவொதுக்கம் ஏற்படுத்தும் சந்தர்ப்பங்கள்

1) நன்மதிப்பினை நிறுவனம் ஐந்தொகையில் காட்டாது விடுதல்.

2) பெறுமதியுள்ள சொத்துக்களை பெறுமதி அற்ற சொத்துக்கள் என பதிவளித்தல்.

3) நிறுவனத்தின் பரிப்புகளை அதிகரித்துக் காட்டுதல்.

4) பொறுப் பொதுக்கங்களை அதிகரித்துக் காட்டுதல்.

5) பெறுமான தேய்வுகளை நிலையான சொத்துக்களுக்கு அதிகரித்துக் காட்டுதல்

6) ஐந்தொகையிலே நிலையான சொத்துகளை காட்டாது விடுதல்.

7) வருமானச் செலவினங்களை அதிகரித்துக் காட்டி மூலதன செலவுகளை காட்டாது விடுதல்.

8) காப் பொதுச்சங்களை பொறுப்பாக சேர்த்துக் கருதுவதால்.

**இதன் நன்மைகளாக பின்வருவற்றை கூறிப்பிட முடியும்**

1) இலாபத்தினைக் குறைந்து நட்டத்தினை அதிகமாக வெளிக்காட்டுவதனால் நிறுவனத்தின் உண்மை நிலையை போட்டி நிறுவனங்களால் அறிந்து கொண்டு போட்டி இட முடியாமல் உள்ளதால் நிறுவனம் மேலும் முன்னேற வாய்ப்புண்டு.

2) இலாபத் தன்மை மறைக்கப்படுவதனால் அல்லது குறைக்கப்படுவதனால் அதிக பங்கு இலாபங்களை எதிர்பாராது பங்குதாரர் செயற்படுவதனாலும் தொடர்ச்சியாக சீரான பங்கு இலாபங்களை எதிர்பாராது பங்குதாரருக்கு வழங்க முடியும்.

3) இம்மறைவொதுக்க ஏற்பாட்டின் மூலம் பெருந்தொகையாக ஏற்படுகின்ற நட்டங்களை மறைக்க முடிவதனால் கம்பனி தகுதி உடையதாக வெளிப்பார்வைக்கு தெரிவதால் பங்குதாரர் மத்தியில் கம்பனி நம்பிக்கையைப் பெற வாய்ப்புண்டு.

4) ஒரே இயக்குனர் தொடர்ந்தும் கம்பனியைப் பொறுப்பேற்று நடத்துமானல் இவ் மறை ஒதுக்கத்தினால் நிறுவனத்தின் நடவடிக்கைகளை இரகசியமாக வைத்து ஏனைய போட்டி நிறுவனங்களை முறியடிக்க முடியும்.

**இவ் ஒதுக்கத்தில் காணப்படும் குறைபாடுகள்**

1) நிர்வாக சபையிரால் திறமையான நிர்வாகம் நடாத்தப்படாது அக்கறையின்மையாக விடுவதனால் ஏற்படுகின்ற நட்டம் இம்மறை ஒதுக்கத்தின் மூலம் மறைக்கப்படுவதனால் நிறுவனத்தின் உண்மைநிலை மறைக்கப்படுகிறது.

2) தமக்குள் ஒரு உடன்பாட்டை ஏற்படுத்திக் கொண்டு இயக்குனர்கள் பங்குதாரருக்கு உண்மைகளை மறைத்து மறைத்து ஏமாற்றுவதனால் அடிக்கடி நிர்வாகத்தினருக்கும் பங்குதாரருக்கும் இடையே சச்சரவுகள் தோன்ற வாய்ப்புண்டு.

3) உண்மை நிலை மறைக்கப்படுவதனால் கம்பனியின் நன்மதிப்பு இழக்கப்படும். இதனால் நிறுவனத்தில் புதிய பங்காளர் சேரவோ அல்லது கடன் கொடுப்பவர்கள் சேரவோ தயக்கம் காட்டுவதனால் கம்பனி நிதி நெருக்கடியை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

4) இவ் மறைவொதுக்கத்தினால் மூலதன நட்டங்கள் ஏற்பட வாய்ப்புண்டு எவ்வாறெனில் சொத்துக்களின் பெறுமதி குறைத்து காட்டுவதனால் அவற்றினை விற்கும் போது அவற்றின் உண்மை பெறுமதியிலும் பார்க்க குறைந்த பெறுமதிக்கே விற்கவேண்டிய நிலை ஏற்படும்.

5) வியாபார இலாப நட்ட ஐந்தொகையிலே இவ் மறைவொதுக்கம் ஏற்படுத்தப்படுவதனால் அவற்றின் உண்மை நிலையினை அறிய முடியாது இருப்பதனால் எதிர்கால திட்டமிடலை மேற்கொள்ள முடியாது போகிறது.

6) கணக்கியல் விகிதாசாரங்களுக்கு ஏற்ப நிறுவனத்தை நெறிப்படுத்தி நன்மதிப்போடு விளங்க வைக்க முடியாது.

7) சொத்துக்கள் = பரிப்புகள் எனும் கணக்கியற் சமன்பாட்டிற்கேற்ப நிறுவனத்தை நெறிப்படுத்த முடியாது.

எனவேதான் பல குறைபாடுகளையும் ஒரு சில நன்மைகளையும் கொண்டுள்ள இவ் மறை ஒதுக்கத்தினை நிறுவனங்கள் பெரிதாக விரும்பாத காரணத்தினால் இவ்வொதுக்கம் ஏற்படுத்தப்படுவது குறைவாக காணப்படுகிறது. அத்துடன் சட்டக் கட்டுப்பாட்டின்படி பொது நிறுவனங்கள் இவ் மறைவொதுக்கத்தினை பேண முடியாது. காப்புறுதிக் கம்பனி, வங்கி தொழில் கம்பனி, நிதி கம்பனி என்பவை இவ் மறைவொதுக்கத்தினைப் பேண முடியும். இவற்றிற்கு சட்ட விதி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது

**உசாவியவை:-**

1) கணக்கியல் கொள்கைகளும் கணக்கியல் நியமங்களும்.

   **By. பா. பாலச்சந்திரன்**

2) கணக்கியல் திருத்தப்பட்ட ஆசிரியர் கைநூல்.

3) உயர்தர கணக்கியல் சோட்பாடுகள்

   **By. N. வன்னியசிங்கம்**

4) அடிப்படை நவீன கணக்கீட்டு கோட்பாடுகள்.

   **By. N. ராஜன்**

● ● ● ●

**கூட்டநடவடிக்கை குறிப்பு**

**கம்பனியின் கூட்டங்களில் நிறைவேற்றப்படும் முடிவுகளை எழுதி வைக்க பயன்படுத்தப்படும் ஏடுகளையே கூட்டநடவடிக்கை குறிப்பு எனப்படும்.**

# ஆகமமும் ஆலயமும்

**செல்வி. ச. துர்க்காதேவி**
பல்கலைக்கழக புகுமுக ஆண்டு
வர்த்தகப் பிரிவு

**செல்வி. கா. கவிதா**
ஆண்டு - 13
கலைப்பிரிவு

''வேதமோடாகமம் மெய்யாம்இறைவ நூல்'' என்பது திருமூலர் திருவாக்கு, இறைவனால் அருளிச் செய்யப்பட்ட வேதம் ஆகமம் என்ற இரு நூல்களில் ஆகமம் சிறப்பு நூல் எனப் போற்றப்படுகின்றது. உலகப்பற்றற்று முத்தியில் நாட்டம் உடையோராய் ஞானநெறியில் நிற்கும் சத்திநிபாதருக்கு அருளிச் செய்யப்பட்டதாலும் வைதிக சமயங்களிற்கென தனித்தனியே அமைந்து அவற்றிற்குரிய கடவுட் கொள்கைகளையும் வழிபாட்டு முறைகளையும் சிறப்பாக எடுத்துக் கூறுவதாலும் சிறப்பு நூல் எனப் போற்றப்படுகின்றது. ஆகமம் என்ற பெயரின் பொருளை ஆராயும் போது பொதுவான விளக்கங்களும் சிறப்பான விளக்கங்களும் கூறப்படுவதைக் காணலாம். பொதுவாக '' தோற்றம் '', '' வருகை ''. ''சாத்திரம்'', ''சாத்திரஞானம்'',''ஆப்த வாக்கியம்'' என்றும் சிறப்பாக 'தொன்று தொட்டு வழங்கி வரும் அறிவு' என்ற பொருளில் அறிவதற்கு கருவியாகிய சமய நூல்களையும் குறித்து நிற்கிறது ஆகமம் என்பது 'ஆ', 'க', 'ம' என்ற மூன்றெழுத்துக்களும் முறையே 'ஆ' என்பது பதி எனவும், 'க' என்பது பசு எனவும், 'ம' என்பது பாசம் எனவும் பொருள் கொண்டு பதி, பசு, பாச இலக்கணங்களை விரித்துக் கூறும் நூல் ஆகமம் என்பர். மேலும் 'ஆ' சிவஞானம் எனவும். 'ம' மலநாசம் எனவும். 'க' மோட்ச சாதனம் எனவும் பொருள் கொண்டு ஆன்மாக்களிற்கு மலத்தை நாசம் பண்ணி சிவஞானத்தை உதிப்பித்து மோட்சத்தைக் கொடுப்பது என்று பொருள் கொள்ளப்படும்.

''ஆலயந் தானும் அரன் எனத் தொழுமே' என்பது சிவஞானபோத பன்னிரண்டாம் சூத்திரம் ஆகும். இறைவன் எங்கும் நிறைந்தபோதும் இறைவனது திருவருள் சுரக்குமிடம் ஆலயமேயாகும். பசுவின் ஊண் சத்தே பாலாகும். அது பசுவின் மடியில் இருந்து பெறப்படுகின்றது. ஊண் சத்து உடலெங்கும் இருக்கின்ற போதிலும் உடலெங்கும் பால் பெறப்படுவதில்லை. ''கடவுள் அங்கிங்கெனாதபடிஎங்கும் வியாபகமாய்நிற்பினும் ஆலயத்திருமேனியில் தயிரில் நெய் போல இறைவன் விளங்கி நிற்பர்'' என்பது நாவலர் வாக்காகும். அவ்வாறே இறைவனது திருவருளும் திருக்கோயில் மூலமே உணரப்படுகின்றது இவ் ஆலயமானது ஆகமவிதிக்கு ஏற்பவே அமைக்கப்படுகின்றது. ஆலயம் என்பதன் பொருளை ஆராயும் போது 'ஆ+லயம், எனப்பிரிக்கப்பட்டு ஆன்மா லயப்படும் இடம், இறைவனுடன் ஆன்மா ஒன்று கூடும் இடம், ஆன்மாவை வழிப்படுத்தி வழிகாட்டும் இடம், ஆணவ மலம் வலிகெடும் இடம் என்று பொருள் கொள்ளப்படுகிறது.

## ஆகமத்தின் தோற்றம் :-

''மன்னுமாமலை மகேந்திரமதனிற் சொன்னவாகமம் தோற்றுவித்தருளியும'' என்பது மணிவாசகர் திருவாக்கு இறைவன் மகேந்திரமலையில் எழுந்தருளி இருந்து ஆகமங்களை உபதேசித்தார் என்றும், ''அஞ்சன மேனி அரிவையோர் பாகத்தன் அஞ்சொ டிருபத்து மூன்றுள ஆகமம் '' என்ற திருமூலரது திருமந்திரத்தில் இருபத்தொட்டு ஆகமங்களை சிவபெருமான் அரு

ளிச் செய்தார் என்ற கருத்தும் நோக்கத் தக்கது. இவ் இருபத்தெட்டு ஆகமங்களான காமிகம், யோகஜம், சிந்துஜம், காரணம், அஜிதம், தீப்தம், சூக்குமம், சகச்சிரம், அம்சுமான் சுப்பிரபேதம், விஜயம் நிச்சுவாசம், சுவாஜம்புவம், ஆக்நேயம், வீரம் இரௌரம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகவிம்பம், புரோகதம், இலளிதம், சித்தம் சந்தானம், சர்வோக்தம், பாரமேஸ்வரம், கிரணம், வாதுளம், ஆகியனவாகும். இவற்றைவிட 207 உபாகமங்களும் உள. இவ்வாகமங்களிற்கு முறையான உபதேசக் கிரமம் கூறப்படுகின்றது காமிகம் முதல் அஜிதம் வரையுள்ள ஐந்தும் இறைவனது சத்தியோயாக முகத்தில் இருந்து கௌசிக முனிவர்க்கவும், தீப்தம் முதல் சப்பிரபேதம் வரையுள்ளவை வாமதேவ முகத்திலிருந்து காசிப முனிவர்க்காகவும், விஜயம் முதல் வீரம் வரையுள்ள ஐந்தும் அகோர முகத்தினின்று பரத்துவாஜ முனிவர்க்காகவும், இரௌரவம் முதல் முகவிம்பம் வரையுள்ள ஐந்தும் தற்புருட முகத்தினின்றும் கௌதம முனிவர்க்காகவும், புரோற்கதம் முதல் வாதுளம் வரையுள்ள எட்டும் ஈசான முகத்தினின்றும் அகத்திய முனிவர்க்காகவும், தோன்றியதாக ஒரு மரபு உண்டு. இந்தவகையில் ஆகமங்களோடு தொடர்புற்ற ஒரு ஞானகுரு பரம்பரை உபதேசக்கிரமமாக உருவாகி வந்துள்ளதை உணரலாம். அந்தவகையில் சதாசிவ மூர்த்தி ஆகமங்களை அனந்ததேவருக்கு உபதேசித்தருளியதாகவும் அனந்ததேவர் ஸ்ரீகண்டருத்திரருக்கும், ஸ்ரீகண்டருத்திரர் திருநந்திதேவருக்கும், திருநந்திதேவர் சனற்குமார முனிவருக்கும், முனிவர்களால் மனுடருக்கும், மனுடரால் மனுடருக்கும் குரு பரம்பரையில் உபதேசிக்கப்பட்டு உலகத்திற் பரவுவனவாய் உள்ளன. இவ்வாகமங்களுள் முதற்பத்தும் விஞ்ஞானகலருட் சிவபெருமான் அநுக்கிரகத்தைப் பெற்ற பிரணவர் முதலிய அணுசதாசிவர் பதின்மருக்கும் அருளிச் செய்யப்பட்டமையால் சிவபேதம் எனவும் ஏனைய பதினெட்டு ஆகமங்களும் அநாதிருத்ரர் முதலிய பதினெட்டு உருத்திரர்களுக்கும் அருளிச் செய்யப்பட்டமையால் உருத்திரபேதம் எனவும் வழங்கப்படுகின்றன. இவ்வாறு மூலாகமங்களைக் கேட்டவர்கள் பிரணவராகி அறுபத்தறுபராவர் எனவும் கூறப்படுகிறது.

## ஆகமத்தின் பிரிவு:-

இவ் ஆகமங்கள் சரியாபாதம், கிரியாபாதம், யோகாபாதம் ஞானாபாதம் என நான்கு பிரிவுகளை உடையன. இவை ஆன்மாக்கள் ஞானம் எய்தி சிவத்தோடு இரண்டறக்கலக்கும் முத்திக்கு வழிகாட்டுவதையே குறிக்கோளாகக் கொண்டவை. அந்தஇலக்கை அடைவதற்கு மக்களைப் படிப்படியாக இட்டுச் செல்வனவே ஏனைய மூன்றுபாதங்களுமாம்.

1) சரியாபாதத்தில்; பிராயச்சித்த விதியும் பவித்திர விதியும்; சிவலிங்க இலக்கணமும், உமாமகேசுரர் முதலிய திருமேனிகளின் இலக்கணமும், நந்தி முதலிய கணநாதர் இலக்கணமும், செபமாலை, யோகபட்டம், தண்டம், கமண்டலம், முதலியவற்றின் இலக்கணமும், அந்தியேட்டி விதியும், சிரார்த்த விதியும் கூறப்படும். (2) கிரியா பாதத்தில்; மந்திரங்களின் உச்சாரணம், சந்தியாவந்தனம், பூசை, செபம், ஓமம், சமயவிசேட நிருவாண தீட்சைகள், ஆசாரியாபிடேசம், சிவசின்னம் அணிதல், சிவப்பிரசாதம் உண்ணல் முதலியன கூறப்படும்.

3) யோக பாதத்தில்:- முப்பத்தாறு தத்துவங்களும், தத்துவேசுரரும், ஆன்மாவும பரமசிவனும், சக்தியும், சதத்திற்குக் காரணமாகிய மாயை மகாமாயைகளைக் காணும் வல்லமையும், அணிமா முதலிய சித்திகள் உண்டாகும் முறைமையும், இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம் பிரத்தியாகாரம், தியானம், தாரணை சமாதி, ஆகிய அட்டாங்க யோகவியல்பும், மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூர

கம், அநாகதம், விசுத்தி, ஆக்கினை, ஆகிய ஆறு ஆதாரங்களின் முறைமையும் கூறப்படும். 4) ஞானா பாதத்தில்;- பரமசிவனுடைய சொரூபமும், விஞ்ஞானகலர், பிரளாயகலர், சகலர் என்னும் ஆன்மாக்களின் சொரூபமும், ஆணவம், கன்மம், மாயை என்னும் பாசங்களின் சொரூபமும் சத்தியின் சொரூபமும், சிவதத்துவம் முதற் பிருதிவி தத்துவம் ஈறாகிய முப்பத்தாறு தத்துவங்களினது, உற்பத்தியும் இவை ஆன்மாக்கள் போகம் புசித்தற்குக் கருவியாகும் முறையும், புவனங்கள், புவனேசுரர் சொரூபமும், பிரளயங்களின் சொரூபமும் பிரளயங்களின் பின்னர் நிகழும் படைத்தல் முதலிய ஐந்தொழில் முறைமையும், பாசுபதம், மாவிரதம் காபாலம் முதலிய மதங்களின் சொரூபமும் கூறப்படும். இவவாகமப் பிரிவுகளோடுமேலும் ஆலய வழிபாட்டோடு தொடர்புடைய பல விடையங்களையும் ஆகமங்கள் விரிவாகக் கூறுகின்றன

**ஆலய அமைப்பு:-**

ஆலயம் அமைவதற்கான இடம் ஆலயமுறை தெய்வசிலைகளை வடிக்கும் இலக்கணம், சிலைகளை நிலைநாட்டும் விதி, வாகனங்களை அமைக்கும் முறை, தேர் அமைக்கும் முறை, அச்சகர் ஒழுக்கம் அடியார் நடைமுறை, ஆலய தரிசனவிதி பூசை, விழாக்கள் செய்யும் முறை, அவற்றின் பலன்கள் என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

"உள்ளம் பெருங் கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே"

என்கிறார் திருமூலர். ஆகம விதிப்படி ஆலயம் மனித உடம்போடு தொடர்பு படுத்தியே அமைக்கப்படுகிறது புறத்தே காணப்படும் ஆலயங்கள் கருப்பக்கிருகம் அர்த்த மண்டபம், மகாமண்டபம் ஸ்நானமண்டபம், அலங்கார மண்டபம், சபாமண்டபம் என ஆறு மண்டபங்களால் அமைந்துள்ளன இந்த ஆறு மண்டபங்களும் எமது உடலின் கண் உள்ள ஆக்ஞை விசத்தி, அனாகதம், சுவாதிட்டானம், மணிபூரகம், மூலாதாரம், என்னும் ஆறு ஆதாரங்களைக் குறிக்கும். என்று கூறுவர். (மூலாதாரம் - மூலம் சுவாதிட்டானம் - தொப்பூழ், மணிபூரகம் - மேல்வாய், அனாகதம் - நெஞ்சம், விசுத்தம் - மிடறு, ஆக்ஞை - புருவ நடு) இனி ஆலயத்திலுள்ள முதலாம் ஆவரணத்தால் கண்ணுக்குப் புலப்படும் தூலதேகமாகிய அன்னமயகோசமும், இரண்டாம் ஆவரணத்தால் பிரணவாயுவும் கன்மேந்திரியமும் கூடி நிற்பதாகிய பிராணமயகோசமும், மூன்றாம் ஆவரணத்தால் மனமும் கன்மேந்திரியமும் கூடி நிற்பதாகிய மனோமயகோசமும், நாலாம் ஆவரணத்தால் புத்தியும் ஞானேந்திரியமும் கூடி நிற்பதாகிய விஞ்ஞானமயகோசமும், ஐந்தாம் ஆவரணத்தால் பிராணவாயுவும் சுழுத்தியும் கூடி நிற்பதாகிய ஆனந்தமய கோசமும் அறியப்படும் எனக் கூறுவர்.

ஆலயத்தைச் சுற்றிவர மதில் கட்டி ஒருபுறமும் ஒரு பெரிய வாயிலமைத்து அங்கு ஒரு கோபுரமும், அமைக்கப்படும் அக்கோபுரத்திற்குத் தூலலிங்கம் என்று பெயர். தொலையில் வரும் பொழுதே ஆலயத்தின் கோபுரமாகிய தூலலிங்கம் எமக்குத் தோன்றும் கோபுரத்தைக் காணும்போதெல்லாம் எமக்குத் தெய்வ நினைவு உண்டாகும் என்ற நோக்கத்துடன் இது அமைக்கட்படுகிறது. இக்கோபுரத்தை அரச கோபுரம் என்றும் கூறுவர் அரசகோபுரத்தில் உலகிலுள்ள எல்லாப் பொருட்களின் உருவங்களையும் காணலாம் இறைவனின் வீரச் செயல்களையும் திருவிளையாடல்களையும் காட்டுகின்ற உருவங்களும், இறைவனைத் தொழு

இன்ற திருமால் முதலிய தேவர்களின் உருவங்களும்' பிறவும் அதன்கண் அமைந்துள்ளன. இவற்றைக் காணும்போதெல்லாம் இறைவனது முழுமுதற் றன்மையை உணர்ந்து. அவரின் மேல் அன்புசெலுத்த வேண்டுமென்ற எண்ணம் உண்டாகும். அக்கோபுரத்தின் வாயில்கள் ஒன்றன்மேல் ஒன்றாக ஒற்றைப்படவே அமைந்திருக்கும். வாயில்கள் மூன்றாக இருந்தால் நனவு, கனவு, சுழுத்தி /போகங்களில் விருப்பம் இன்றி அசைவில்லாத மனத்துடன் கூடியிருப்பது) என்னும் மூன்று அவத்தை நிலைகளையும், வாயில்கள் ஐந்தாக இருந்தால் ஐம்பொறிகளையும், வாயில்கள் ஏழாக இருந்தால் ஐம்பொறிகளுடன் மனம், புத்தி என்னும் இரண்டையும் குறிக்கின்றன என்பர் எத்தனை வாயில்கள் இருந்தாலும் நிலமட்டத்தில் இருக்கும் வாயிலின் வழியாக நாம் உட்செல்லமுடியும் இவ்வாறே கடவுளின் மேல் நாட்டம் செல்லும்போது மனம் ஒன்றே பயன்படும் என்று சொல்வார்கள்.

கோபுரத்தைக் கடந்து உள்ளே சென்றால் நாம் காண்பது பலிபீடம். துள்ளும் மறியாகிய எமது மனம் பலி ஏற்கக் காத்திருக்கின்ற பலிபீடமாகிய பத்திரலிங்கத்தை வீழ்ந்து வணங்கல் வேண்டும். அங்ஙனம் வணங்குவதினால் எமது மனத்தின் கண் உள்ள காமம், வெகுளி, மயக்கம், முதலிய மிருகங்களை எல்லாம் பலிகொடுத்துவிட்டு இறைவனிடம் செலுத்தும் அன்பொன்றையே மனத்தில் வைத்துக்கொள்கின்றோம் என்பது கருத்தாகும். எனவே எங்களுடைய கீழான இயல்புகளை எல்லாம் பலிபீடத்தில் பலிகொடுத்து அன்பென்னும் மேலான இயல்புடன் இறைவனை வணங்கச் செல்கின்றோம் என்பதாம் பின்பு ஆலயத்தைச்சுற்றி வலம்வருதல் பிராணாயாம (வளிநிலை) முறையைக் காட்டுகின்றது. பலிபீடத்தைச் சார்ந்து கொடிமரம் இருக்கின்றது. கொடிமரத்திலே ஓர் ஆடை சுற்றப்பட்டிருப்பதையும் அந்த ஆடையுடன் ஒரு தருப்பைக்கயிறு இணைக்கப் பட்டிருப்பதையும் காணலாம். கொடிமரம் சிவத்தையும், ஆடை ஆன்மாவையும், தருப்பைக்கயிறு ஆன்மாவைப் பந்தித்து நிற்கும் பாசத்தையும் குறித்து நிற்கின்றது என்றும் கூறுவர். எனவே கொடிமரத்தையே ஆதாரமாகக் கொண்டு ஆடை நிற்பதுபோல சிவத்தையே ஆதாரமாகக்கொண்டு ஆன்மா நிற்கிறது. கொடிமரமும் ஆடையும் இரண்டு பொருள்களே என்றாலும் ஒரே பொருளாக மதிக்கப்படுகின்றன. இங்ஙனமே முத்தி நிலையில் ஆன்மா சிவத்துடன் இரண்டறக் கலந்து அத்துவிதமாய் நிற்கும் என்பதும் புலனாகின்றது சிவம் ஆன்மாவுடன் சேர்ந்து நின்றாலும் பாசம் சிவத்தைச் சாராமல் ஆன்மாவையே சாரும் என்பதை ஆடையுடன் இணைக்கப்பட்டுள்ள தருப்பைக்கயிறு உணர்த்துகின்றது. இனி கொடிமரத்தை அடுத்துள்ளது ஆலயத்தில் எழுந்தருளி இருக்கும் தெய்வத்திற்குரிய, வாகனமாகும். அது ஆன்மாவைக் குறிக்கின்றது ஆன்மா உள்முகமாக இறைவனை நோக்குகின்றது. இறைவனை அடைதலே ஆன்மாவின் குறிக்கோள் என்பதை அது காட்டுகின்றது, அந்த வாகனம் (நந்தி) இறைவனை நோக்கிய வண்ணமே இருக்கின்ற நிலை, கடவுளின் திருவடி நீழலையடைய விரும்புகின்றவர்களின் மனம் எப்பொழுதும் கடவுள் நாட்டத்திலேயே இருக்க வேண்டும் என்பதை அறிவிக்கின்றது வாகனத்திற்கும் இறைவனுக்கும் குறுக்கே செல்வது வழிபாட்டு முறைக்கு மாறாகும். கேபயிலின் கருப்பக்கிருகம் திரைச்சீலையினால் மறைக்கப்பட்டிருக்கிறது மாயையாகிய இத்திரைச்சீலை சிவபெருமானை அறியாவண்ணம் ஆன்மாவின் அறிவை மறைத்திருக்கின்றது என்பதே இதன் கருத்தாகும் ஞான ஒளி வரும்வரையும் அடியாகிய ஆன்மா தவம் கிடத்தல் வேண்டும். நாங்கள் கோயிலுக்குச் சென்று திரைச்சீலை நீங்கும் அளவும் காத்திருக்கின்றோம். மணியோசை கேட்கின்றது. பின்னர் திரை

விலகுகிறது, கற்பூர ஆராதனையாலும் விளக்கினாலும் வெளிச்சமுண்டாகி இறைவனின் காட்சி எமக்குக் கிடைக்கின்றது. இதில் மனமே கருப்பக்கிரகம் என்றும், மனத்தின்கண் நிகழும் ஞானக் காட்சியே தீபாராதனையினால் உண்டாகும் ஒளி என்றும் கூறுவர். இவ்வாறே ஆலயத்தில் நடைபெறும் கிரியைகளும், அனுட்டானங்களும் ஆகம விதிப்படியே நடைபெறுகின்றன. இந்வகையில் ஆகமமும் ஆலயமும் ஒன்றுடன் ஒன்று பிரிக்க முடியாதவாறு பின்னிப் பிணைந்ததாகவே காணப்படுகிறது. இதேபோன்று வைணவ சாக்த சமயங்களிற்கும் தனித்தனி ஆகமங்கள் உண்டு.

**சாக்த ஆகமம்;-**

சக்தி சம்பந்தமான கொள்கைக்கு சாக்தம் என்று பெயர். சக்தியையே தெய்வமாக உபாசிப்பவர்கள் சாக்தர்கள் என அழைக்கப்படுகின்றனர். ஈஸ்வர தத்துவத்தையே சக்தியாகவும், அதனையே உலகமாகவும் வழிபடும் சாக்தமதம் மிகமிகப் பழமையானது. இச்சாக்த மதத்தினர் சக்தியையே முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடுவார்கள் இம்மதத்தின் ஆகமங்களை தந்திரங்கள் எனக் கூறுவர். சாக்த ஆகமங்களின் தந்திரபேதங்கள் அறுபத்தி நான்கு எனப்பெரியோர்கள் வரையறுத்துள்ளார்கள். அவற்றுள் மகாநிர்வான தந்திரமே மிகச் சிறந்ததாகும். ஏனைய சாக்த ஆகமங்கள் ருந்திரயாமளம் ஞானார்ணவம், தந்திரயோகினிஹருதயம், வாமகேச்வரதந்திரம், சதுமசதி, குலடாமணி தந்திராலோகம், ஸ்ரீநேத்திரதந்திரம். ஸ்ரீவித்தியாரணவம், கமகலாவிலாசம் என்பன

**வைணவ ஆகமங்கள்!-**

வைணவ ஆகமங்கள் கோவில்களிலும் வீடுகளிலும் வைத்து வணங்கும் விஷ்னு விக்கிரகத்தின் தத்துவங்களைப் பற்றியும் வழிபாட்டு முறைகளைப்பற்றியும் கூறும் நூல்களாகும். வைணவ் ஆகமங்கள், பஞ்சராத்திரம், வைகானசம் என்பனவாகும். இவற்றுள் பஞ்சராத்திர ஆகமம் மிகத் தொன்மைவாய்ந்தது. ஆளவந்தார் என்ற யமுனாசாரியார் பஞ்சராத்திர ஆகமத்தின் தொன்மையையும் பிரமானத்தையும் நிலைநாட்டுதற்காக ஆகமப்பிரமாணியம் என்னும் நூலை ஆக்கியுள்ளார். பஞ்சராத்திர ஆகமத்திற்குப் பின் தோன்றிய வைகானசம் என்னும் ஆகமத்தையும் வைணவர்கள் பிரமாணமாகக் கொண்டுள்ளார்கள். இதனால் வைணவக் கோவில்களில் நடைபெற வேண்டிய வழிபாட்டு முறைகள் பஞ்சராத்திர முறை என்றும் வைகானச முறையென்றும் இரு வகைப்பட்டு வழங்குகின்றன. வைகானச முறை கோவில் வழிபாட்டை விரிவாக வகுத்துக் கூறுகின்றது. பஞ்சராத்திர சங்கிதைகள் 108 என்றும், அவற்றுள் அகிர்புத்தினிய சங்கிதை. ஈசுவர சங்கிதை, பௌஷ்கரசங்கிதை, பரம சங்கிதை, பிருகத்பிரமசங்கிதை எனினும் ஐந்துமே மிகவும் சிறந்தவைகளென்றும், இவை நாராயணனால் நாரத முனிவருக்கு ஐந்திரவுகளில் அருளுபதேசம் செய்யப்பட்டமையால் பஞ்சராத்திரமெனப் பெயர் பெற்றனவென்றும் கூறுவர்;

உசாத்துணை நூல்கள்:-

1) இந்துப்பண்பாட்டு மரபுகள் - கலாநிதி. ப. கோபாலகிருஸ்ண ஐயர்
2) இந்துசமய பாடம் - வித்துவான் க. வேந்தனார்
3) சைவநெறி - (ஆண்டு 10, 11)
4) இந்துசமய பாடத்திரட்டு - சைவப்புலவர் க. சி. குலரத்தினம்

# தேவார திருவாசகங்களில் பக்தி நெறி

செல்வன். பொ. சந்திரவேல்
ஆண்டு - 13
கலைப்பிரிவு

வேத உபநிடதங்களை முதல் நூல்களாகவும் சிவாகமங்கள் இருபத்தெட்டையும் சிறப்புப் பிரமாணங்களாகவும் மெய்கண்ட சாஸ்திர நூல்கள் பதினான்கையும் தத்துவ நூல்களாகவும் கொண்டு விளங்குகின்ற அன்பு மார்க்கமாம் சைவப் பெருநெறியானது இறைவனை வழிபடுவதற்கான தோத்திர நூல்களாக பக்திப் பரவச மூட்டும் திருப்பாடல்களான தேவார திருவாசகங்களைக் கொண்டுள்ளது. தமிழிலக்கிய வரலாற்றிலே சங்க மருவிய காலப் பிற்பகுதியில் தோன்றிய காரைக்கால் அம்மையாரின் பதிகங்களினூடாக ஊற்றெடுத்து பக்தி நெறியினைப் பின்பற்றி சிவனடி மறவாச் சிந்தையரான மெய்யடியார்கள் பலர் காலத்துக்குக் காலம் தோன்றி அருட்பாடல்கள் பலவற்றைப் பாடிப் பரவியுள்ளனர். சிறப்பாக ஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் முதலான தேவார முதலிகள் மூவரும், மணிவாசகப் பெருமானும் முறையே அருளிச் செய்தவைகளே தேவார திருவாசகங்களாகும்.

''தேவாரம்'' என்பது தே + ஆரம் எனப் பிரிக்கப்பட்டு தெய்வத்தின் மீது அன்புடன் பாடப்படும் இன்னிசைப் பாடல் என்றும் தெய்வத்திற்குச் சூட்டப்படும் பாக்களாகிய மாலை என்றும் பொருள்படும். திருவாசகம் என்பது ''முத்து முத்தான'' சொற்களாலான பெரும் தெய்வீகச் செல்வம் எனும் பொருள் விரிப்பர். இத் திருப்பாடல்களெல்லாம் எழுந்த காலம் தமிழக இந்துமத வரலாற்றிலே பல்லவர் காலப் பகுதியாகும். இக்காலமானது இந்துமத வரலாற்றிலே மட்டுமன்றி தமிழிலக்கிய வரலாற்றிலும் கூட பக்தி நெறிக் காலம் என்று சிறப்பாகப் போற்றப்படுகிறது. இதற்குக் காரணம் இத் தேவார திருவாசகங்களின் எழுச்சியும் உயர்ச்சியுமேயாகும். இத்தகைய பக்திப் பனுவல்கள் அக்காலத்தில் பெருந் தொகையாக எழுவதற்கு அக்கால சூழ்நிலையும் உதவிற்று எனலாம். அதாவது பல்லவர் காலத்திலேற்பட்ட அரசியல் பொருளாதார, சமூக கலாச்சார மாற்றங்களை இத் திருப்பாடல்கள் பிரதி பலித்துக் காட்டுகின்றன. உதாரணமாக ஞான சம்பந்தருடைய திருநீற்றுப் பதிகம் அப்பர் சுவாமிகளுடைய ''நமச்சிவாயப் பதிகம்'' போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

சமயக் குரவர்கள் நர்ல்வரும் பக்தியுணர்வூட்டும் சாதனங்களாக அட்ட வீரட்ட செயல்கள் அறுபத்து நான்கு திருவிளையர்டல்கள் திரு நீற்றின் பெருமை, திருவைந்தெழுத்தின் மகிமை, சித்தாந்தக் கருத்துக்கள் உணர்த்தும் உருவத் திருமேனியழகு. முத்தியின் அவசியம் சரியை, கிரியை, யோகம், ஞானமாகிய நால்வகை நெறிகள் முதலானவற்றைக் கையாண்டனர். இறைவனுடைய மூல மந்திரமாகிய பஞ்சாட்சரத்தின் சிறப்பினை ஒவ்வொரு பதிகங்களின் வாயிலாக நாயன்மார்கள் எடுத்துக் காட்டியுள்ளனர் குறிப்பாக ஞான சம்பந்தப் பிள்ளையார்

''காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி''

என்று தொடங்கி பத்துப் பாடல்களினூடாகத் திருவைந்தெழுத்தின் சிறப்பினையும் அப்பர் சுவாமிகள் சொற்றுணை வேதியன்'' என்று தொடங்கி

கற்றுணைப் பூட்டியோர் கடலினுள் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சிவாயவே'' என்றும்

சுந்தர மூர்த்தி நாயனார்

மற்றும் பற்றெனக் கின்றுநின்திருப் பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந்தே னினிப்பிற வாததன்மை வந்தெய்தினேன்
கற்றவர் தொழுதேத்தும் சீர்க்கற யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்றவா உனைநான் மறக்கினும் சொல்லும்நா நமச்சிவாயவே.

என்றும் மாணிக்கவாசகப் பெருமான் தன்னுடைய சிவபுராணத்திலே நமச்சிவாய வாழ்க'' என்றும் பாடுகிறார்கள்.

திருநீற்றின் பெருமையை உலகிற்குஎடுத்துக் காட்டுவதன் மூலமாகப் பக்தியுணர்வு புலப்படுத்தப்படுகின்றது. ஞான சம்பந்தப் பெருமான் திருநீற்றுப் பதிகத்திலே முத்திக்குரிய வழியாகப் பற்றுக்களைத் துறக்க வைப்பதும் ''ஆசை கெடுப்பதும் நீறு மந்திரம் போல் தம்மைக் காப்பதும் நீறு'' என்று மக்களைப் பக்தி நெறியின் பால் பரவசமாக்குகின்றார். மேலும் அப்பர் பெருமான் ஆடவல்லானைக் கண்டு தரிசித்து அவனைப் பாடும் போது ''பவளம் போல்மேனியிற் பால்வெண்ணீறு'' உடையான்எனப்பாடுவார். இவ்வாறே மணிவாசகரும் தனது ''திருச்சாழல்'' பதிகத்திலே இறைவன் பூசுவது வெண்மையான தூய்மை பொருந்திய நீறே என்கிறார். இவ்வாறாகத் திருநீற்றின் பெருமையைக் கூறுவதன் வாயிலாகப் பக்தி நெறி வளர்க்கப்படுகின்றது. அடுத்து இறைவனுடைய அட்டவீரட்டச் செயல்கள் அறுபத்து நான்கு திருவிளையாடல்கள் என்பவற்றை இத் தேவார திருவாசகங்கள் விளக்கிக் காட்டுகின்றன. ஞான சம்பந்தர் தன்னுடைய பதிகங்களில் வருகின்ற எட்டாவது பாடல் தோறும் இராவணன் கயிலை மலையைக் கிளப்பிய வரலாற்றையும், ஒன்பதாவது பாடல் தோறும் மாலும் அயனும் அடிமுடி தேடிய வரலாற்றையும் அமைத்துக் கூறுகின்றார் மேலும் அட்டவீரட்டச் செயல்களாக தக்கன் சிரம் கொய்தமை, திரிபுரம் எரித்தமை, யமனைக் காலால் உதைத்தமை போன்ற இறைவனது அருளாற்றல்களும் இத்திருப்பாடல்களிலே சிறப்பிக்கப்படுகின்றது.

அடுத்த படியாகச் சைவசமயம் கூறும் வீடு பேற்றுக் குரிய நெறி முறைகளாக சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நாற்பாதங்கள் பற்றியும் குரு இலிங்க சங்கம வழிபாட்டின் சிறப்புக்கள் பற்றியும் இத் திருப்பாடல்களிலே சிறப்பிக்கப் பட்டிருப்பதைக் காணலாம். சரியை நெறியிலே நின்று உழவாரத் தொண்டு புரிந்து சாலோக முத்தி பெற்ற அப்பர் பெருமான் அந் நெறி பற்றிப் பின்வருமாறு போற்றுகின்றார்

'நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்கு
புலர்வதன் முன் அலகிடு மெழுக்கு மிட்டு
பூமாலை புனைந் தேத்திப் புகழ்ந்து பாடி'

என்றும் கிரியை நெறியிலே நின்ற ஞானசம்பந்தன்

''கற்றாங் கரியோம்பிக் கலியை வாராமே'' என்னும் பாடல் வாயிலாக

விளக்குகின்றார். இது போன்றே குரு,லிங்க, சங்கமமாகிய மூவகை வழிபாடுகளும் சிறப்பிக்கப்படுவதை அறிய முடிகிறது. சங்கம வழிபாட்டின் சிறப்பினை சுந்தரமூர்த்தி சுவாமியின் ''தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்' எனத் தொடங்கும் ''திருத்தொண்டத் தொகை'' விளக்கி நிற்கின்றது. அப்பர் பெருமானின் ''குனித்த புருவமும்'' என்று தொடங்கும் பாடலில் வருகின்ற

''ஆவுரித்து தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந் தார்க்கு அன்பராகில்
அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவுளரே.'

என்னும் வரிகளும் அடியார் பக்தியின் பாற்படுவனவேயாம். அடுத்து இலிங்க வழிபாட்டின் சிறப்புக்களைத் தேவார திருவாசகங்கள் சிறப்பிக்குமாற்றை நோக்கின் வடதாழிச் சிவன் கோயிலில் அப்பர் பெருமானுக்குக்

கிடைத்த சிவலிங்கத் தரிசனம் குறிப்பிடத்தக்கதாகும். மேலும் குரு வணக்கம் பற்றிக் கூறுமிடத்து மாணிக்க வாசக சுவாமிகள் தன்னுடைய பதிகங்கள் முழுவதிலுமே 'தன்னை ஆட்கொண்ட குருவை விளித்து விளித்துப் பாடுகிறார் "கோகழியாண்ட குரு மணிதன் தாள் வாழ்க" எனவும் "சித்த மலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட அத்தன்" எனவும் சிவபெருமான் தானே வந்து எனது உள்ளம் புகுந்து அடியேற்கு அருள் செய்தான் எனவும் குருவையும் குரு வருகையையும் சிறப்பித்துக் கூறுகின்றார். இவ்வாறு இவர்கள் பாடுகின்ற பாடல்கள் மக்கள் மனங்களில் நிறைந்த பக்தி நெறியை வளர்ப்பதாக அமைந்துள்ளதெனலாம்.

சாதாரண பாமர மக்களும் இறைவனிடத்தே பக்தி கொண்டு அவனருளைப் பெறுவதற்குத் தேவார திருவாசகங்கள் திருவுருவ வழிபாட்டை முக்கியத்துவப் படுத்திப் பேசுகின்றன. சம்பந்தப் பெருமான் "தோடுடைய செவியன்" என்னும் பாடல் வாயிலாகவும் வாகீச பெருமானின் "குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமின் சிரிப்பும்" என்று பாடுவதன் மூலமும் "வன்தொண்டன்" என்றும் சுந்தரர் பொன்னார் மேனியனே எனப்பாடுவதன் மூலமும் மணி வாசகர் ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும் சோதி எனவும் போற்றுகின்றார்கள். இவ்வாறாகத் திருவுருவ வழிபாட்டைச் சிறப்பித்துக் கூறுகின்ற தேவார திருவாசகங்கள் அத்திருவுருவங்களைப் பிரதிஸ்டை செய்து வழிபடுவதற்குரிய திருக்கோயில்கள் பற்றியும்; வழிபாட்டு முறைகள் பற்றியும், அதன் சிறப்புக்கள் பற்றியும் கூறுகின்றன. எடுத்துக் காட்டாக அப்பர் சுவாமிகள் இவ்வுலகிலுள்ளோர் மட்டுமன்றி தேவலோகத்திலுள்ள பிரமா, விஷ்ணு முதலான தேவர்களும் கூட உருமாறி வந்து வழிபடுவதாக

'கைப்போது மலர் தூவிக் காதலித்து
வானோர்கள்
முப்போது முடிசாய்த்துத் தொழ நின்ற
முதல்வன்'

எனத் தம்பாடலில் வியந்து பாடுகிறார். இன்னும் இவரின் தேவாரத்தில் வருகின்ற 'திருக்கோயிலில்லாத ஊர் திருவிலூர்' என்பதும் ஆலய வழிபாட்டின் மூலம் பக்தியணர்வின் சிறப்பினை உணர்த்துவதேயாகும்.

மேலும் தேவார திருவாசகங்களானவை இறைவழிபாடு, ஆன்ம இயல்பு, புலன்களை இறைவழி நிற்கச் செய்தல் பக்தியின் உச்சநிலை போன்ற விடயங்களைத் தெளிவுபடுத்துகின்றன. இறைவனை வழிபடும் ஒருவன் முதற்படியாக 'நான்' 'எனது' என்ற அகங்கார மமகாரங்களை நீக்கி 'என் செயல் ஆவது யாதொன்றில்லை எல்லாம் உன் செயல்' என்று அவனிடத்தே தனது மனம், வாக்கு காயம் என்ற முக்கரணங்களையும் பூரணமாக ஒப்படைத்து வழிபடல் வேண்டும். இந்நிலை மணிவாசகப் பெருமானுடைய திருவாசகத்திலே விளக்கப்பட்டிருப்பதைக் காணலாம். உதாரணமாக

'நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த
நாயகன்' எனவும்
'நாயிற் கடையாய் கிடந்த அடியேற்கு

தாயிற் சிறந்த தயவான தத்துவன்'

எனவும் 'முக்தி நெறியறியாத மூர்க்கரொடு' கலந்து வாழ்பவன் எனவும் தன்னை இழித்துக் கூறுகின்றார் இவ்வாறாகப் பல இடங்களிலே தன்னையிழித்துக் கூறிய மணிவாசகர் 'இழித்தனன் என்னை யானே' என்னும் பாடலினூடாகத் தனது நிலையினை வெளிக்காட்டி வருகின்றார். இன்னும் திருவாசகத்திலே இவரால் கைக் கொள்ளப்பட்ட திருவடி வணக்கமும் ஆன்மாவின் சிறுமையையும் உணர்த்துவதெனக் கூறலாம். இறைவனை வழிபடுகின்ற போது நாம் எம்மை அணுகுகின்ற நல்வினை, தீவினையாகிய இருவினைகளையும் ஒப்பவே மதிக்குமளவுக்கு நாம் எண்ணத்தைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இந்நிலையானது பக்தி நெறியின் உச்ச

நிலையை உணர்த்துவதெனவே கூறலாம். ஏனெனில் ஆன்மா பக்தியைச் சாதனமாகக் கொண்டு முத்தியடைய வேண்டுமாக இருந்தால் முக்திக்குரிய முதற்படியெனச் சித்தாந்தம் கூறுகின்ற இருவினை ஒப்பு ஏற்படுமிடத்தே தான் முறையே மலபரிபாகம் சத்திநிபாதம் என்பன நடைபெற்று இறுதியில் தாடலை என்பது போல ஆன்மாவும் இறைவனும் கூடுகின்ற இத்தகைய சிறப்புப் பொருந்திய இருவினையொப்பு நிலையினை

'அன்றே என்றான் ஆவியும் உடலும்
உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை ஆட்கொண்ட
போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறெனக் குண்டோ எண்
டோள்
முக்கன் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ
இதற்கு நாயகமே'

என்ற பாடல் விளக்குகின்றது. மேலும் பக்தி நெறியில் உயர்நிலை பெற்றிருப்போர் தம் ஒவ்வொரு அங்கத்தினூடாக இறைவனை உணர்ந்து கொள்ளவும் அவனை வழிபடவும் புழுவாய்த் துடிப்பர். உதாரணமாக அப்பரடிகள் பாடிய திருவங்கமாலை இப்பண்பினைப் பெற்றுக் காணப்படுகின்றது. அடுத்து பக்தியின் உச்ச நிலையில் பக்தி நெறியாளன் தன்னைத் தலைவியாகவும் இறைவனைத் தலைவனாகவும் கொண்டு தூது செல்லும் தோழியாக வண்டு பறவையினங்களைத் தூதனுப்புவதும் பக்தியின் உயர்நிலையைப் புலப்படுத்துவதேயாகும். இதனை ஞான சம்பந்தரின் 'சிறையாரும் மடக்கிளியே' என்னும் பாடலும் மணிவாசகர் பாடிய வண்டு விடுதூது பதிகமும் சுட்டுகின்றன. இன்னும் இயற்கையில் இறைவனைக் கண்டு வழிபடும் இயல்பும் உயர் பக்தியம் சமயமாகும். இதற்காதாரமாகத் திருப்பள்ளியெழுச்சியில் வருகின்ற கூவின பூங்குயில் கூவின கோழி எனும் பாடல் அமைந்துள்ளது. பக்தியின் உச்ச நிலையில் நின்று பதிகங்கள் பாடிய பரமசமய கோளரி முதலான நால்வரும் பதிகங்களினூடாகப் பக்திக்கு இலக்கணம் வகுத்துக் காட்டுகின்றனர். குறிப்பாக மணிவாசகப் பெருமான் பக்தரின் அதி உச்ச பக்தி நிலையினைக் கூறுமிடத்து,

அருளுடைய சுடரே அழிந்ததோர்கனியே

என்கிறார். ஒரு பழமானது பழமாகியபோது நின்று விடாது மேலும் பழுத்துப் பழுத்து அழுகித் தன் வடிவத்தை இழந்து மண்ணோடு மண்ணாகி விடுதல் போல பக்தன் ஒருவனும் மேலும் தான் ஒழுகின்ற பக்தி நெறியினூடர்க அதியுன்னத நிலையினை அடைந்து தன் வடிவத்தைத் தன்னியல்பினை இழந்து இறைவனோர்டு ஒன்றாகி விடுதல் வேண்டும் என்ற கருத்தினை இரத்தினச் சுருக்கமாகச் சுருக்கித் தந்துள்ளார். இது போன்றே ஞான சம்பந்தப் பிள்ளையும் உயர் பத்தி நெறியாளரின் உண்மை நிலையினை கேட்கும் போது உணர்ந்து உருகக் கூடிய வகையில் 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி' எனும் தனது பாடலடிகளால் உணர்த்தி நின்கின்றார்.

மேலும் பத்தி வைராக்கியத்தின் தன்மையானது இத்தேவதிர திருவாசகங்களில் பொதிந்து காணப்படுவது நோக்கத்தக்கது. ஒரு சந்தர்ப்பத்திலே நாவுக்கரசர் யிலைலைக் காட்சி காண விரும்பி அக்காட்சியைக் காணச் சென்ற வேளையில் அங்கே இறைவன் அந்தண வடிவில் தோன்றி 'அது காண முடியாத காட்சி திரும்பிச் செல்லும்' என வேண்டிய வேளையில்

'ஆளும் நாயகன் தரிசனங்கண்டல்லாது
மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்'

என எடுத்துக் கூறுவதும் சமண அரசன் தூதுவனை அனுப்பி இவரை அழைத்தவேளையில் 'நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம் எனக் கூறுவதும் பத்தி வைராக்கியத்தின் தன்மையைக் காட்டி நின்றது. சுந்தரர் வரலாற்றிலே தனது கண்கள் குருடான வேளையில் திருக்கச்சியேகம்பத்தை அடைந்து 'இழிந்தவனாகிய நான் செய்த பிழையை நீக்கி எனக்குப் பார்ப்பதற்கு கண் தந்தருள வேண்டும்' என்று இறைவனை வணங்கினார். அப்போது அவருக்கு இடக்கண் கிடைத்தது. இவ்வாறாகத் திருவருளையடைந்த சுந்தரர் இறைவனின் திருக்கோலத்தைக் காண்பதற்கு மற்றைய கண்ணையும் தந்தருள வேண்டும் என்பதைக் பத்தி வைராக்கியத்துடன்

'மீளா அடிமை உமக்கே...என்று தொடங்கி அல்லல் சொன்னாக்கால் வாழாங்கிருப்பீர். திருவாரூரில் வாழ்ந்து போதீரே' என்று பாடுகின்றார் இவ்வாறாக யார் யார் எவ்வாறு வேண்டுகின்றாரோ அவரவர்க்கு அவர்வேண்டியாங்கு நின்று அருள் புரியும் வகையில் தேவார திருவாசகங்கள் முக்கிய பங்காற்றி வருவதென்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

உசாத்துணை நூல்கள்:-

1) முதல் எட்டுத் திருமுறைகளில் அடங்குகின்ற பாடல்களும் அவற்றின் விளக்கக் குறிப்புக்களும்
2) திருமுறைகள் சம்பந்தமான ஆராய்ச்சிக் கட்டுரைகள்.

'வணிக நாதம்' வளர எமது
நல்வாழ்த்துக்கள்

சைக்கில் உதிரிப்பாகங்கள்
பாடசாலை உபகரணங்கள்
பரிசில் பொருட்கள் பாதணிகள்
என்பவற்றுக்கு நீங்கள்
நாடவேண்டிய இடம்.

# சிம்ஸ் அன்

கே. கே. எஸ். வீதி,
குளப்பிட்டிச்சந்தி.

அழகுசாதனப் பொருட்கள்
விற்பனை நிலையம்.

# புவனா ரேடர்ஸ்

கே. கே. எஸ் வீதி,
சுன்னாகம்.

வணிகநாதம் மலர எமது
நல்லாசிகள்

சிறந்த கலர் படப்பிடிப்பாளர்

# K. B. S. PHOTO

No. 247, K. K. S. ROAD,
CHUNNAKAM.

# SRI MEHALA TRADERS

No. 9, K. K. S. ROAD,
CHUNNAKAM

எவர் சில்வர்ப் பொருட்கள், ரவலிங் வாக், பேஸ் வகைகள், சுடுநீர்ப் போத்தல்கள் போன்றனவும், பான்சிப் பொருட்களும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.

**சுஜீரா**

179 A, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்.

---

★ **ஜென்சி மியூசிக் சென்ரர்** ★

உரிமையாளர் - இஸ்ணகுமார்

இல. 17 யாழ்ப்பாணம்.

★ வீடியோ படப்பிடிப்பாளர்கள் (வீடியோ & ஓடியோ கசெட்கள்)

★ புதிய பழைய,

1 புரட்சிப் பாடல்கள் 2. பக்திப் பாடல்கள்

3 சினிமாப் பாடல்கள்

அனைத்தையும் சிறந்த இசைத் தட்டுக்கள்மூலம் ஒலிப்பதிவு செய்ய நாடவேண்டிய ஒரே இடம்.

---

With Best Compliments From:

**SINGHAM'S PHARMACY**

Hospital Road, Jaffna.

---

22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்

நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு சிறந்த ஸ்தாபனம்

**புதிய ராதிகா நகை மாளிகை**

தங்கப் பவுண் நகை வியாபாரம்

189, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

யா / ஸ்கந்தவரோதயா கல்லூரி
வணிக நாதம் சிறக்க
எம் வாழ்த்துக்கள்

சிறந்த எவர்சில்வர் பாத்திரங்கள்
அலுமினிய பாத்திரங்கள்
பிளாஸ்ரிக் விற்பனையாளர்

மீனாட்சி களஞ்சியம்
ஸ்ரேசன் றோட்,
சுன்னாகம்.

டயமன்ட் றேடர்ஸ்
இல 12 டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

வணிகதுறை வளர
வணிக நாதமே
வருக! வருக!

தனலக்குமி புத்தகசாலை
சுன்னாகம்.

வெளிப்புற கலர் படப்பிடிப்பாளர்
வீடியோ படம் பிடிப்பாளர்

யோகா
போட்டோ அன் வீடியோ
காங்கேசன்துறை வீதி,
தெல்லிப்பழை. — சுன்னாகம்.

- சாறிவகைகள்
- பிளவுஸ் துணிகள்
- டிரஸ்மெற்றீரியல்ஸ்
- பேபிசூட், பேபிகவுன் வகைகள்
- சேட்டிங் சூட்டிங்
- ரெடிமேற் சேட்வகைகள்

போன்றவற்றைப் பெறவருகை தாருங்கள்

## சரண்யா ரெக்ஸ்

174. கே. கே எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 24150

---

நங்கையர்க்கேற்ற சாறிவகைகள் திருமண பட்டுப் பிடவைகள், பிளவுஸ் மற்றீரியல் கவுன்கள், ஸ்கேட் அன் பிளவ்ஸ் போன்ற வற்றைப் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய ஒரே இடம்.

## லலிதா பிடவை மாளிகை

இல 5 - 6 நவீன சந்தை
யாழ்ப்பாணம்.

---

திருமணம், மற்றும், வைபவங் களுக்கேற்ற

- காஞ்சிபுரம், தஞ்சாவூர் மணிப்புரி
- நைலெக்ஸ், பெனாரிஸ், மைசூர் சில்க்
- வூலி சாறிவகைகள்
- பட்டு வேட்டிகள்
- சேட்டிங் சூட்டிங்

மற்றும் ஏனைய புடவைத் தினுசுகளையும் தெரிவு செய்ய சிறந்த ஸ்தாபனம்.

## ஜி. எஸ். லிங்கநாதன் அன் கோ.

13, 14 பெரியகடை வீதி,
யாழப்பாணம்.

---

வணிகநாதமே வளர்க

உங்களுக்கு வேண்டிய தரமான மா, பலா, தோடை, எலுமிச்சை, மாதுளை போன்ற பழவகை மரங்களும், றோசா, செவ்வரத்தை, குறோட்டன் வகைகளை பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரு இடம்.

## ஸ்ரீகாந்த தோட்டம்

உரிமையாளர்;- S குணநாயகம்.
கே. கே. எஸ் வீதி,
கோண்டாவில்-மேற்கு,
கோண்டாவில்.

*யாழ்நகரில்*

**சிறந்த, பழைய புதிய படங்களை வாடகைக்கும் பதிவு செய்து கொள்வதற்கு சிறந்த இடம்**

# குணம் வீடியோ சென்ரர்

42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

**யா / ஸ்கந்தவரோதயா கல்லூரி மன்ற வளர்ச்சிக்கு எமது வாழ்த்துக்கள்.**

சிறந்த முறையில் படப்பிடிப்புக்களை மேற்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

# யாழ் தேவா போட்டோ

கே. கே. எஸ். வீதி, தொட்டியாலடி
சுன்னாகம்.

வணிகநாதம் வாழ்க வாழ்கவென்று வாழ்த்துகின்றோம்.

நவநாகரிகத்திற்கேற்ப ஆடைவகைகளை தெரிவு செய்ய ஒரே இடம்

# கண்ணன் ரெக்ஸ்

28, நவீன சந்தை உட்புறம்
சுன்னாகம்.

யா / ஸ்கந்தவரோதயா கல்லூரி கலை வர்த்தக மாணவர் மன்ற வளர்ச்சிக்கு எமது மனமுவந்த வாழ்த்துக்கள்.

**நியூ ஆனந்தா ஜுவலர்ஸ்**
*கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

**அம்பாள் றேடிங் என்ரபிறைஸ்**
*234, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.*

**வணிகநாதம் வளர எமது வாழ்த்துக்கள்**

- அழகு சாதனப் பொருட்கள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- லேஸ், நூல், பட்டன், ரவலிங்பாக்
- சிவர் மணிக்கூடு சில்வர் றே

அனைத்தையும் மலிவாகப் பெற்றுக் கொள்ளலாம்.

# சிந்தனாஸ்

4 A, டாக்டர். சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

---

**மலர் சிறக்க வாழ்த்துக்கள்**

● போட்டோ ● வீடியோ
படப்பிடிப்பாளர்

# விமலா ஸ்ரூடியோ

கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.

---

**மலர்சிறக்க வாழ்த்துகிறோம்**

ரயர், ரியூப் (சகல விதமான) சைக்கிள், சைக்கிள் உதிரிப் பாகங்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

# E. S. பேரம்பலம் அன் கோ

50 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

---

**மலர் சிறப்புற மனப்பூர்வமான நல்லாசிகள்**

தரமான முறையில் ஒலிப்பதிவு நாடாவை பதிவு செய்ய நாடவேண்டிய ஒரே இடம்.

# நித்தியா ஸ்போட்

காங்கேசன்துறை வீதி,
சுன்னாகம்.

மலர் சிறப்புற மனப்பூர்வமான வாழ்த்துக்கள்;

தரமான மருந்து வகைகளுக்கு நாடவேண்டிய ஒரே இடம்

# WEL-CARE PHARMACY

116, K. K. S Road, CHUNNAKAM.

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(கலை வர்த்தக வகுப்புக்களுக்கும், O/L வகுப்புக்களுக்கும்
தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்.)

A / L 94, 95 மீட்டல், Day, Sat, Sun, வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன

| எமது ஆசிரியர் குழு | Sat, Sun. | Day. |
|---|---|---|
| பொருளியல | திரு. கலாகரன் | திரு. கலாகரன் |
| வர்த்தகம் | திரு. தேவா | திரு வரதன் |
| கணக்கியல | திரு. S. K. பிரபாகரன் | |
| அளவையியல் | திரு. விக்கி | திரு. A. பிரபா |
| தமிழ் | திரு. குழந்தை | |
| இந்துநாகரிகம் | திரு காரை சுந்தரம்பிள்ளை | |
| இந்துசமயம் | செல்வி மாதவி சுந்தரம்பிள்ளை | |
| புவியியல் | திரு. குணராசா | |
| அரசியல் | திரு சீலன் | |
| வரலாறு | திரு. சிறீதரன் | |

Day Classe 8 - 00—2 00

O/L Sat, un,, 8 - 00—2 - 00 Evening,, 3 - 15—6 - 00

18/6/97
1868
20/02/02
1453

**கருமாரி மோட்டேர்ஸ்**
J/S அர்சுணா வீதி, யாழ்ப்பாணம்.

**யாழ் றியோன்ஸ்**
சுவீற் அன் கிறீம் கவுஸ்
352, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

**V. S. B. GROUP**
*266A, STANLEY ROAD*
*JAFFNA.*

*S. Shanmugathasan*
**ALDI**
269/1, Power House Road Jaffna.

**CEITY TRADE CENTER**
STANLEY ROAD,
JAFFNA.

**விநாயகா**
202, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**Kanapathy Stores**
JAFFNA.

DIAHSRI DISTRIBUORS
(19) 281 C, Clock Tower Road, Jaffna.

**Ratnas Winding Works**
03, Victoriya Road,
JAFFNA.

TASHION HOUSE
65 K. K. S, Road, JAFFNA.

*For all your optical requirements*
*Just step into*

## S. M. FERNANDO

*SPECIALISTS IN HANDLING THE LATEST*
*TECHNOLOGY IN OPTICAL WORK*




**580, Hospital Road,**
**Near Bank of Ceylon,**
**Jaffna.**